பின்னத்தூர்

# அ. நாராயணசாமி ஐயர்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை - 7

# பின்னத்தூர்
# அ. நாராயணசாமி ஐயர்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 7
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் (30-10-2003)



| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Pinnattūr A. Nārāyaṇacāmi Iyar** |
| Editors | : | Dr. S. Krishnamoorthy<br>Director<br>IITS, Taramani, Chennai - 600 113.<br>Dr. S. Sivakami<br>Associate Professor<br>IITS, Taramani, Chennai - 600 113. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 508 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii +112 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees Thirty Five Only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Chennai - 600 004. |
| Subject | : | Biographical & Critical Studies on<br>Pinnathur Narayanasamy Iyer |



கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒல்லும்வகையெல்லாம் தமிழை வளர்ப்பதில் அயராது பாடுபட்டுவருகிறது. வாரக்கருத்தரங்கு, திங்கள் கருத்தரங்கு, ஆண்டுக்கருத்தரங்கு, அறக்கட்டளைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்து வருகிறது. தமிழாய்வுக்கு உடனடித் தேவை என்ன என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திவருவதே இதற்குக்காரணமாகும்.

இந்நிறுவனம் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பொருண்மை களில் கருத்தரங்குகளை நடத்திவருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழுக்கென்று அமைந்த மரபையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தொடர்கருத்தரங்கை இந்நிறுவனம் நடத்திவந்தது. தமிழர் கலைச் செல்வங்கள் என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்காகத் தமிழ் மரபினை உணர்த்தும் வகையிலும் கருத்தரங்குகளை நடத்திவந்தது. இவையன்றியும் பல்வேறு இலக்கியப் பொருண்மைகளில் கருத்தரங்கை நடத்திவந்தபெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு. இந்நிறுவனம் தன் அளவிலும் பிற நிறுவ்னங்களோடு சேர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தித் தமிழாய்வுக்குச் சிறப்புச் சேர்த்து வந்துள்ளது. இக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து தமிழறிஞர்களை மையப்படுத்திய நிலையில் தொடர்கருத்தரங்கு ஒன்றைத் தொடங்க எண்ணியது. இவ்வகையில் **'தமிழறிஞர் வரிசை'** என்ற பெயரில் தொடர் கருத்தரங்கை நடத்துவதன்மூலம் அறிஞர் பலரின் அரிய தமிழ்த் தொண்டுகளை எல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்ட முடியும் என்ற நிலையில் இத்தகைய தொடர்கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது.

வரலாறு எழுதப்படாத தமிழறிஞர்களுக்கு ஒரு வரலாற்றை உருவாக்குவதன் மூலம் அத்தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகள் ஆவணப் படுத்தப்படும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதால் இத்தமிழறிஞர்கள் இம்மண்ணில் பிறந்த பயனும், இம்மண்ணிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் பின்வருவோரால் போற்றப்படும் நிலை உருவாகும். இதனால் இத்தமிழறிஞர் வரிசைக்கருத்தரங்கை வாழ்க்கை வரலாற்றுக் கருத்தரங்காக அமைக்காமல் ஆய்வுக்கருத்தரங்கமாக அமைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது.

அவ்வகையில் தமிழுக்கு உழைத்து மறைந்த அறிஞர்கள் பலநூறுபேர் நம்முன் வந்தனர். அவர்கள் அனைவரைப் பற்றியும் இத்தொடர் கருத்தரங்கம் அமையவேண்டும் என்பது எங்கள் அவா. எனவே அனைவரையும் பட்டியலிட்டுப் பகுதி பகுதியாக இத்தொடர் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாகப் பதினாறு அறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தமிழறிஞர்களின் முதல் பட்டியலைக் கொண்டு தமிழறிஞர் களைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும் நாள், கட்டுரை வழங்க வேண்டிய நாள் பற்றிய குறிப்புகளுடன் முதல் அட்டவணை தயார் செய்யப்பட்டது.

இப்பதினாறு தமிழ் அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் வழங்கத் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

ஒரு திங்களுக்கு ஒரு தமிழறிஞர் என ஒருவரைப் பற்றிய கருத்தரங்கில் 5 அல்லது 6 பேர் ஆய்வு செய்யவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கட்டுரைகள் கோரப்பட்டன. ஒருவரைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்து கட்டுரை வழங்குவதால் அவ்வறிஞருடைய பன்முக ஆளுமையை வெளிக்கொணர முடியும். அத்தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு முதலில் அமையவேண்டும். பதிப்பு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு போன்ற நிலைகளில் அவ்வறிஞர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் கட்டுரைகள் பெறப்பட்டன. இக்கருத்தரங்கில் மிகுந்த விருப்பத்துடன் ஆய்வாளர்கள் கட்டுரை வழங்க முன்வந்தமை உண்மையிலேயே எங்களுக்கு வியப்பு அளித்தது. முறையாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படத் தொடங்கிய **இத்திங்கள் தொடர் ஆய்வுக்கருத்தரங்கு - தமிழறிஞர்வரிசை** புதுப்பொலிவுடன் எண்ணிய வண்ணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இம்முதல் பட்டியலைத் தொடர்ந்து இரண்டாவது பட்டியல்,மூன்றாவது பட்டியல் எனத் தமிழறிஞர் வரிசை ஆண்டுக் கணக்கில் நடைபெறும் தொடர் கருத்தரங்காக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய, நாளைய தலைமுறையினர்க்கும் தமிழ் உலகிற்கும் ஒரு சிறந்த ஆவணமாக அமைய இருக்கும் இத்தமிழறிஞர்வரிசைக் கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொடர்ந்து நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை கொள்கிறது. எப்போதும் ஒரு பணியைத் திட்டமிட்டு எதிர்கால நோக்கில் செயல்படுத்தினால் அத்திட்டம் வெற்றியடைவது உறுதி என்பதற்குச் சான்றாக இத்தமிழறிஞர் வரிசைத் தொடர் கருத்தரங்கு அமையலாம்.

இத்தமிழறிஞர் வரிசையின் ஏழாம் கருத்தரங்காகப் **பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்** அவர்களைப் பற்றிய இக்கருத்தரங்கு அமைகிறது. இக்கருத்தரங்கில் ஐவர் கட்டுரை வழங்கியுள்ளனர். இக்கட்டுரைகள் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர்தம் படைப்புத் திறனையும், உரைத்திறனையும், இலக்கிய நோக்கையும், இலக்கணப் பார்வையையும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. அவதானி என்ற சிறப்புப் பெயரை உடைய ஐயர் அவர்கள் சிறந்த படைப்பாளராகவும், உரையாசிரியராகவும் பல்துறைப் புலமையாளராகவும் விளங்கினார். இவர்தம் நற்றிணை உரை உரைவரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. நற்றிணைப் பாடல்களுக்கு மெய்ப்பாடு சுட்டி உரையெழுதிய இவர்தம் உரைநெறி போற்றுதற்குரியதாகும்.

தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர், சங்கச் செய்யுட்களுக்கு மெய்ப்பாடு அறிந்து உரை கூறும் சிந்தனைப் போக்குடையவர். அவருடைய உரையில் 'ஐயோ எனின் யான் புலியஞ்சுவலே' என்ற பாடல் அழுகையாகிய மெய்ப்பாடு பற்றி வந்தது என்று எடுத்துக்காட்டியுள்ளார். இச் சிந்தனை பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்களுக்கு, நற்றிணைக்கும் அவ்வண்ணமே உரையெழுதத் தூண்டியது. இவ்வாறாகப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் பல்வேறு சிறப்புகளையெல்லாம் ஒருங்கிணைத்து ஆய்வு நோக்கில் வெளிப்படுத்தும் நிலையில் **பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்** என்னும் இந்நூல் வெளிவருகிறது.

இந்நூல் தமிழ் ஆர்வலர்க்கும் ஆய்வாளர்க்கும் அரிய கருத்துக் கருவூலகமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைன்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை
26-07-04

**இயக்குநர்**

## கட்டுரையாளர்

**முனைவர் சு. இராசாராம்**
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

**முனைவர் லொ.ஆ. உமாமஹேஸ்வரி**
விரிவுரையாளர்
டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகியம்மாள் மகளிர்
கலை அறிவியல் கல்லூரி, சென்னை

**திரு ஆ. கார்த்திகேயன்**
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

**முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை**
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

**திரு த. பூமிநாகநாதன்**
ஆராய்ச்சி உதவியாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

# உள்ளே


வாழ்க்கை வரலாறு

- ஆ. கார்த்திகேயன் 1

படைப்புத்திறன்

- த. பூமிநாகநாதன் 8

உரைத்திறன்

- லொ.ஆ. உமாமஹேஸ்வரி 37

இலக்கிய நோக்கு

- சு. இராசாராம் 66

இலக்கணப் பார்வை

- சே. செந்தமிழ்ப்பாவை 91

# வாழ்க்கை வரலாறு

**ஆ. கார்த்திகேயன்**

## தோற்றம்

அவதானி என்கின்ற சிறப்புப் பெயரை உடைய நாராயணசாமி ஐயர் (இலட்சுமி நாராயண அவதானி) துந்துபி வருடம் (கி.பி. 1862) ஆவணி மாதம் 29ஆம் நாள் புதன்கிழமை தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூண்டித் தாலுகாவைச் சேர்ந்த பின்னத்தூரில் பிராமணகுலத்தில் அப்பாசாமி என்கிற வேங்கடகிருஷ்ண அவதானிக்கும், சீதாலட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். நாராயணசாமி ஐயருக்கு மூன்று தம்பிகளும், மூன்று தங்கைகளும் உண்டு. பின்னாளில் இவரின் ஊர்ப் பெயரோடு இவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் என அழைக்கப்பட்டார்.

## குடும்பச் சூழல்

இவரின் தந்தையார் அப்பாசாமி ஐயர் வைத்தியத்தில் சிறந்த பயிற்சி உடையவர். தரும வைத்தியஞ் செய்பவர்; சாந்த குணமுள்ளவர்; சாதுக்களை ஆதரிப்பவர்; லௌகீகக் காரியங்களில் அவர் சிறந்து விளங்கவில்லை; தமது குடும்பத்துக்குரிய சொத்துகளைப் பாதுகாத்து விருத்தி செய்வதில் சிறிதும் கவலையில்லாதவராகவிருந்தார். இளமையிலேயே விதவையாகி அவர் வீட்டில் வசித்துக் குடும்பக் காரியங்களைப் பார்த்து வந்த அவர் சகோதரிகளாகிய ருக்மணியம்மாளும், சேஷியம்மாளுமில்லாவிடின் அவர் குடும்பம் பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்திருக்கும்.

அப்பாசாமி ஐயர் அந்தக் காலத்தில் சிறந்த அவதானியாக விளங்கினார். எனவே தம் மகனுக்கு இளமையில் இருந்தே நினைவாற்றல் பயிற்சியை நன்கு பயிற்றுவித்தார். இதனால் நாராயணசாமி ஐயரும் சிறந்த அவதானியாகத் திகழ்ந்தார். மனத்தை ஒரு நிலைப்படுத்தித் தன்னைச் சுற்றி நடைபெறும் செயல்களைக் கண்டறியும் வித்தைக்கு அவதானம் என்று பெயர். ஆறு, எட்டு, பத்து, பதினொன்று, பதினாறு, நூறு என்ற வகையிலே தங்களது ஆற்றலைப் பெருக்கிக் கொண்டவர்கள் எண்களுக்கு ஏற்ப சட்அவதானி, அட்டாவதானி, தசாவதானி, ஏகதசாவதானி, சோடசாவதானி, சதாவதானி எனத் தங்களின் பெயருக்கு முன்னே தங்கள் திறமையை

அடையாகச் சேர்த்துக் கொள்ளக் கூடிய மரபு தமிழகத்தில் இருந்து வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

## இளமைப் பருவம்

பின்னத்தூராரின் தாயார் சீதாலட்சுமி அம்மையார் தாய்ப்பாலுடன் தமிழ்ப்பாலை அதிகமாக ஊட்டினார் போலும். இதற்குச் சாட்சி தேனினும் இனிய தமிழில் பின்னத்தூராார் படைத்த படைப்புகளே.

நாராயணசாமி ஐயர் இளமையிலே சமஸ்கிருதம் கற்றுக் கொண்டதோடு வேதத்தியானமும் செய்து வந்தார். இவர் பதின்மூன்று வயதுவரையில் பின்னத்தூரில் பள்ளிக்கூடம் வைத்திருந்த கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதியாரிடம் தமிழ் கற்று வந்தார். அக்காலத்தில் ஒரு நாள் இவர் மன்னார்குடிக்குச் செல்ல நேரிட்டபொழுது அங்கேயுள்ள ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் தமிழ்ப் பண்டிதராயிருந்த நாராயணசாமிப்பிள்ளை கம்பராமாயணத்தில் சில செய்யுட்களுக்குப் பொருள் விரித்துரைத்ததைக் கேட்டு இன்புற்று இராமாயணத்தைத் தாம் முற்றும் படித்துணர வேண்டுமென்னும் பேரவாக்கொண்டார். இதுதான் இவர் தமிழ் கற்கத் தொடங்கியதற்குக் காரணம். கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தையே முதலில் வாங்கிப்படித்தார். பாட்டுகளை நெட்டுருப் பண்ணும் ஆற்றல் இவருக்கு இயல்பாகவே அமைந்திருந்தமையால், இவர் எதைப் படித்த போதிலும் அதை நெட்டுருப் பண்ணிக் கொண்டே வந்தார்.

## தமிழ் ஆர்வம்

இவர் தமிழ் படிக்க வேண்டுமென்ற அவாவினால் எப்போதும் புத்தகமும் கையுமாயிருப்பது இவர் அத்தையார் சேஷியம்மாளுக்கு மனவருத்தம் தருவதாயிற்று. குடும்பக்காரியத்துக்கு இடையூறாகுமென்று, இவர் தமிழ் படிப்பதில் காலம் போக்குவதை அவர் அடிக்கடி கடிந்து வந்தார். அதனால் அத்தையார் அறியாமல் இருக்க வேண்டி இவர் வயல் வரப்புகளிலும் கருவேலமரத்தின் கீழேயிருந்தும் கற்பாராயினார். அன்பிற் சிறந்த சேஷியம்மாள், கல்வியறிவில்லாமையால், தமது மருமகன் கல்வியில் காலம் போக்குவது குடும்பக் காரியத்துக் கிடையூறாகுமென்று கருதினார் போலும். இவ்வாறெல்லாம் அன்பு செய்து தம்மை வளர்த்து வந்த சேஷியம்மாளைப் பற்றி, நாராயணசாமி ஐயர் பாடிய **பழையதுவிடுதூது** என்னும் பிரபந்தத்தில்வரும் “ஏத்தவன்பின் பல்கதைகளோதி யுவந்ததே சேஷிஅத்தை யினிதூட்டு மன்னோ” என்னுமடிகள் நன்கு தெரிவிக்கும்.

வைத்தியர் நாராயணசாமி ஐயரிடமும், முத்துசாமி பாரதியிடமும் முறையாகத் தமிழ் பயின்றார். பின்னர், தமிழ்ப் புலவர் நாராயணசாமிப் பிள்ளையிடம் ஏற்பட்ட தொடர்பால் தமிழின் மீது உள்ள பற்று காதலாய் மலர்ந்தது. தொடர்ந்து தமிழ் இலக்கியங்களை எல்லாம் படிக்க ஆரம்பித்தார். இவர் இவ்வாறு தமிழ்நூல்களைக் கற்றுக் கவிபாடுமாற்றலில் சிறந்து விளங்கினராயினும், பல நூல்களையும் தாமே கற்றுக் கொண்டமையால் அவற்றில் சந்தேகங்கள் பல உடையவராயிருந்தார். இக்குறையை நீக்குவதற்கு ஏற்ற சமயம் இவருக்குச் சீக்கிரம் கிடைத்தது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரின் மருகரும் வித்துவ வேதாரணியுமாகிய பொன்னம்பலம் பிள்ளை சிறிது காலம் வேதாரணியத்தில் வசித்து வந்தார். அவரை நாராயணசாமி ஐயர் தலைப்பட்டுக் கற்றாரைக் கற்றாரே காமுறுவரென்றபடி அவரிடத்து நட்புக்கொண்டு அவரால் தம் சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டதுமன்றி அவரிடம் ஐம்பெருங்காப்பியங்களுள் முதலாகிய சிலப்பதிகாரத்தைப் பாடங்கேட்டனர். அதுவுமன்றி நீலகண்டேச்சுரக் கோவைபாடி மன்னார்குடியில் அவரின் முன்னிலையிலேயே அதனை அரங்கேற்றினார்.

## ஆசிரியப் பணி

தமிழ் அறிஞர்களைத் தேடிப் பாடங்கேட்டுக்கொண்டிருந்த நாராயணசாமி ஐயர் பிறருக்குத் தமிழ்ப்பாடம் சொல்லும் ஆசிரியராக, 1899ஆம் வருடம் ஜூலை மாதம் 28ஆம் நாள் முதல் இறக்கும்வரை கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் பணிபுரிந்தார்.

## பல்துறைப் புலமை

பின்னத்தூராரின் தமிழார்வத்தையும், சமஸ்கிருதத்தில் அவருக்கு இருந்த புலமையையும், வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புச் செய்த காளிதாசனது பிரகசன நாடகமே பறைசாற்றும்.

நாராயணசாமி ஐயர் தமிழ்நாட்டின் பழஞ்சரிதங்களை ஆராய்வதில் மிக்கவிருப்பமுள்ளவர்; தமிழ்ப்புலவர்களின் பழஞ்சரிதங்களை நன்குணர்ந்தவர். அவர் அவ்வச்சமயங்களிற் பாடிய கவிகளையெல்லாம் மனத்தமைத்து வேண்டும் போது எடுத்துரைக்கும் வன்மை வாய்ந்தவர்.

தமிழ் நாட்டு வரலாறுகளை அறிவதில் ஆர்வம் மிக்கவராக இருந்தார். இதன் காரணமாய் அவ்வரலாற்றுச் சுவடுகளின் ஒரு பகுதியான பழங்கல்வெட்டுகளை ஆய்வு செய்தார். கல்வெட்டுப் பற்றிய தக்வல்களை அறிவதில் பெருவிருப்பம் காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் மாணவர்களுள் ஒருவரான சதாசிவ பண்டாரத்தார் பிற்காலத்தில் கல்வெட்டு ஆராய்ச்சியறிஞராகத் திகழ்ந்தார்.

## படைப்புகளும் பதிப்புகளும்

பின்னத்தூராரின் இலக்கியக் காதல், இலக்கணம் பக்கம் திரும்பத் தொல்காப்பியத்தில் ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தார். புதிதாகப் பொருளதிகாரம் படிப்பவர்களுக்கு அதில் உள்ள மேற்கோள்களைப் புரிந்து கொள்ளத் தனியாக ஓர் அகராதியை உருவாக்கினார்.

கல்விபயிலக் கருதி அதற்கு வழிகாணாது வறுமையால் ஏக்கமுற்று வருந்திய மாணாக்கனொருவனை நல்வழிப் படுத்தும் பொருட்டு கல்வி பயின்று மேம்பட்டு அதனால் இராசாங்கத்தாராற் சிறப்புப் பட்டம் பெற்று அதிகாரமும் பெற்றானொருவன் ஆற்றுப்படுத்துவதாக மாணாக்கராற்றுப்படை என்னும் நூலை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய இயன்மொழி வாழ்த்து என்னும் நூலுக்கு உவே. சாமிநாதஐயர்,

> *தூ மேவு புதுக்கோட்டை மார்த்தாண்ட பைரவப்பேர்த்*
> *தொண்டை மான்மீ*
> *தேமேவு தமிழ் வாணர் மகிழவியன் மொழிவாழ்த்தொன்*
> *றிசைத்துளானால்*
> *மாமேவு மியற்றமிழ் நூல் பலவுணர்ந்தோன் மறவாத*
> *வன்மை வாய்ந்தோன்*
> *பாமேவு சுவை நுகர்ந்தின் புறநாராயண சாமிப்*
> *பனவர் கோவே.*

> *புதுக்கோட்டை மகாராஜா அவர்கள்*
> *மகா-ள-ள-ஸ்ரீ ஹிஸ் ஹைனெஸ் ஸ்ரீ பிரகதம்பதாஸ*
> *இராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான்*
> *பகதூர் அவர்களது*
> *மங்களத்தை விரும்பி இயற்றிய*
> *இயன் மொழிவாழ்த்து*

எனச் சிறப்புப்பாயிரம் இயற்றியுள்ளார்.

காவிரியாறு வளங்கொடுக்க நலம் பெருகுஞ் சோழவள நாட்டிலுள்ள சிவத்தலங்கள் பலவாகும். அவற்றுள் பெரும்பான்மைத் தலங்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவர் முதலிகளாற் பாடப்பட்டனவாகும். அவ்வாறு பாடப்பெற்ற பதிகள் பலவற்றுள் திருக்களர் என்னும் சிவப்பதியும் ஒன்றாகும். அப்பதியில் உள்ள சிவலிங்கம், துறவறச் செம்மலாகிய துர்வாச முனிவர் பெருமானால் நிலைநாட்டி வழிபடப் பெற்றதாகும்.

இத்திருக்களர்த் திருக்கோயில் நீண்ட நாட்களின் முன்னர்த் தருமபுர மடத்தாரால் போற்றப்பட்டு வந்ததாக அறியப்படுகின்றது. அக்காலத்து அம்மடாலயத் தொடர்புடைய களப்பாள் ஸ்ரீ ஆதியப்பன் என்னும் அருந்தமிழ்ப் புலவரால் ஆரிய மொழியிலிருந்து திருக்களர்ப்புராணம் நானூற்றுப்பதினொரு பாடல்களாக மொழிபெயர்க்கப்பட்டது.

ஸ்ரீ வீரசேகரஞான தேசிக சுவாமிகள் இத்திருக்கோயிலின் திருப்பணியைச் செய்வதற்குச் சில ஆண்டுகளின் முன்னர் மு. சாமிநாத உபாத்தியாயரின் முயற்சியால் களப்பாள் ஸ்ரீ கு. சீனிவாச முதலியார் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரைச் சந்தித்து இப்புராணத்தை அச்சிடுவதற்கானவற்றைச் செய்ததுமன்றி மற்றும் இரண்டு ஏட்டுப்பிரதிகளையும் சேகரித்துக் கொடுத்துள்ளார். அம்மூன்று பிரதிகளையும் ஒரு சேர வைத்துப் பரிசோதிக்கும் போது சில விஷயங்கள் நாராயணசாமி ஐயருக்கு விளங்காமலே பிழைபட்ட வண்ணமாகவிருந்தன. இதன்னை அறிந்து பின்னத்தூர் பிரம்மஸ்ரீ ஸா. சுந்தரசாஸ்திரிகள் தம்மிடமிருந்த திருக்களர் ஸம்ஸ்கிருத புராணப்பிரதி ஒன்றனை அன்போடு உதவினார்கள். அதனைக் கொண்டு ஒருவாறு திருத்தி அச்சிட்டார் எனத் திருக்களர் ஸ்ரீ பாரிஜாத வனேஸ்வர சுவாமி தலபுராணம் மூலமும் உரையும் என்ற புத்தக முகவுரையில் நாராயணசாமி ஐயர் குறிப்பிடுகின்றார்.

இவருடைய இயன்மொழி வாழ்த்து, தென்றில்லை (தில்லை வளாகம்) யுலா, தென்றில்லைக் கலம்பகம், களர்ப்புராணம், இராமாயண அகவல் முதலியன அச்சிடப்பட்டுள்ளன. இவர் எழுதி அச்சில் வெளிவரா நூல்கள் பிரகசன நாடகம், இடும்பவனப் புராணம், இறையனாராற்றுப்படை, சிவபுராணம் (ஞான சங்கிதை), சிவகீதை, நரிவிருத்தம், மருதப்பாட்டு, செருப்புவிடு தூது, தமிழ்நாயக மாலை, அரதைக் கோவை, வீரகாவியம் என்பன.

எட்டுத்தொகையுள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு முதலானவற்றை உரையுடன் வெளிப்படுத்த வேண்டுமென்று பெருமுயற்சி

எடுத்தார். ஆனால் நற்றிணை ஒன்றைத்தான் அச்சாக்க முடிந்தது. எட்டுத்தொகையுள் முதலாவதாக அமையப்பெற்ற நற்றிணையைச் சோதித்து அச்சிட வேண்டுமென்னும் விருப்புற்றிருக்கையில், அவரின் நண்பரும், மன்னார்குடி மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் நாராயணசாமிப்பிள்ளையின் குமாரரும் போலீஸ் உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய நா. சோமசுந்தரம்பிள்ளை, நாராயணசாமி ஐயருக்குப் பொருள் முட்டுப்பாடுறாது வேண்டிய அளவு உதவி, ஏடுகள் தருவித்துச் சோதிக்கும்படி செய்தார். அதன்பின் சுவாமி வேதாசலம் அவர்களுடைய முயற்சியைக் கொண்டு சென்னை இராஜாங்கம் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள பிரதியைப் படி செய்து தருவித்து ஒருவாறு திருத்தி வருகையில் உ.வே. சாமிநாதையர் இரண்டு பிரதிகள் அனுப்பினார். அவற்றோடு ஒப்பு நோக்கிய பின் மதுரைத் தமிழ்ச் சங்கஞ் சென்று அங்குள்ள பிரதிகளோடு ஒப்பு நோக்கினார். பின்பு சென்னையில் இருக்கும் தி.த. கனகசுந்தரம்பிள்ளை யிடமிருந்து மேலும் இரண்டு பிரதிகளைப் பெற்று, அவற்றினையும் ஒப்பு நோக்கி ஒருவாறு திருத்தி நற்றிணை உரையை எழுதினார். இவ்வுரையுடன் நற்றிணை, சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திர சாலையில் 1915இல் அச்சில் பதிப்பிக்கப்பட்டது.

## மறைவு

நற்றிணை அச்சிடும்போது இவருக்கிருந்த நீரிழிவு நோய் அதிகப்பட்டது கண்டு தாமிறக்குமுன் நற்றிணைப் புத்தகத்தைக் கண்ணாற் பார்த்து விட வேண்டுமென்று பெருவிருப்புற்றிருந்தனர். அது கிட்டாது போயிற்று. அவர் இறக்கும் போது நற்றிணை உரை மட்டுமே அச்சாகியிருந்தது. பாடினோர் வரலாறும் பாடப்பட்டோர் வரலாறும் அவர் இறந்தபின் அச்சிடப்பட்டன.

இவர் நீரிழிவு நோயால் வருந்தி ஆனந்த வருடம் ஆடிமாதம் 15ஆம்நாள் வியாழக்கிழமை (ஜூலை 30, 1914) அன்று தாம் பிறந்த பூமியாகிய பின்னத்தூரில் தமது இல்லத்தில் இந்நிலவுலக வாழ்வை நீத்துச் சிவலோக வாழ்வையடைந்தார். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகளுண்டு.

## துணை நூல்கள்

1. அச்சுக்கலை, மா.சு. சம்பந்தன்.
2. அச்சும் எழுத்தும், மா.சு. சம்பந்தன், மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, ஏப்ரல் 1980.
3. இயன்மொழி வாழ்த்து, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.
4. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மது. ச. விமலானந்தம்.
5. திருக்களர்ப் புராணம், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்.
6. நற்றிணை, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரையுடன், சென்னை, சைவ வித்தியாநுபாலனயந்திர சாலை.
7. மாணாக்கராற்றுப்படை, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்

# படைப்புத்திறன்

த. பூமிநாகநாதன்

சங்க யாப்பு திட்பமுடையது; செறிவுடையது; கட்டுக்கோப்பானது; மாற்றத்திற்கு இடந்தராதது. இவ்வமைப்பு அன்றைய சங்கக் கல்வியை நெறிமுறையாகப் பயின்று வந்த காலத்திற்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் இடைக்காலம் யாப்புப் புரட்சியைச் செய்தது. அதன் பயனாக முற்றும் மாறிய நிலைக்கு ஏற்பத் தமிழை வளர்த்துக் காத்தனர் இடைக்காலச் சான்றோர். பாவினங்களையும் நூலினங்களையும் பெருக்கித் தமிழுக்குப் பெருமை சேர்த்தது இடைக்காலம்.

இந்நிலையை உ.வே.சா., பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஆகியோரிடமும் காண முடிகிறது. பின்னத்தூரார் ஈண்டு படைத்துள்ள இயன்மொழி வாழ்த்து ஒரு புதுமை யிலக்கியமாக, இடைக்கால மரபை ஒட்டி அமைவதைக் காணமுடிகிறது.

"இயன்மொழி எனவும் இயன்மொழி வாழ்த்து எனவும் தொன்னூல் விளக்கம், சதுரகராதி, பொருட்டொகை நிகண்டு, முத்துவீரியம், பிரபந்த தீபம், ஆகியன விளக்குகின்றன.

வாயுறை வாழ்த்தும், புறநிலை வாழ்த்தும் சதுரகராதி பொருட்டொகை நிகண்டு, முத்து வீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் ஆகியவற்றால் சுட்டப்படுகின்றன.

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றின் பாடல்கள், இயன்மொழியைத் தனியிலக்கிய வகையாகக் கொள்ள வழி வகுத்திருக்கலாம். புறநானூற்றில் மிகப்பேரளவு பாடல் இயன்மொழி வாழ்த்தாக அமைகின்றன. *(8-10, 12, 14, 15, 17, 22, 30, 32, 34, 38, 39, 49, 50, 67, 92, 96, 97, 102, 106-108, 122-124, 128-1332, 134, 137, 142, 149-151, 153, 156, 157, 168, 171-173, 175-177, 212, 215, 216, 376, 378, 380, 381, 388-390, 400).* பதிற்றுப்பத்தின் ஐந்து பாடல்கள் இத்துறையில் அமைந்துள்ளன. *(18, 20, 24, 43, 48).* பிற இரு வாழ்த்து நிலையிலும் சங்கப் பாடல் துறைப் பெயரளவில் காணப்படவில்லை. ஆயின் புறநானூறு தரும் சில வாழ்த்தும் *(128)* வாழ்த்தியலும் *(2, 3, 6, 13, 91, 158, 317, 375, 377, 385, 387)* இயன்மொழி, செவியறிவுறூஉ, பரிசில் கடாநிலை போன்ற பிற துறைகளிலும் பெறுவது எண்ணத்தக்கது" *(ச.வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.423).*

"வாழ்த்தியல் துறையாக மட்டும் அமையும் இதன் பாடல்கள் பொதுவாழ்த்தாகப் பொருந்துகின்றன.

*பால்புரை பிறை நுதற் பொலிந்த சென்னி*
*நீல மணிமிடற் றொருவன் போல*
*மன்னுக பெரும நீயே............ (புறம். 91)*
*.............வானத்து*
*வயங்கித் தோன்ற மீனினு மிம்மென*
*இயங்கு மாமழை யுறையினும்*
*உயர்ந்துமேற் தோன்றிப் பொலிகநுந் நாளே (367)*
*வேண்டிய துணர்ந்தோன் தாள் வாழியவே (386)*
*ஊழி வாழி பூழியர் பெருமகன் (387)*

என வாழ்வும் வாணாளும் சிறக்க வாழ்த்துதல் அடிப்படையாக அமைகின்றது. வாழ்த்து, தனிப்பொருளாகவன்றி வேறுபல பொருண்மையுடனும், நிறைவு நிலையாக அமைதலையும் பல பாடல்கள் காட்டுவது இங்கு நினைக்கத்தக்கது.

இறை வாழ்த்தாக, 'வாழித்திருநாமம்' எனும் நூல்கள் அமைதல் இதனுடன் தொடர்பு காட்டுகின்றன. அனந்தநாத சுவாமியின் திருநாமம் காப்பு வெண்பாவினைத் தொடர்ந்து அமையும் நான்கு ஆசிரிய விருத்தப்பாக்களின் அரையடிகள் முழு அடி ஈறு, வாழியே என முடிவது இங்குச் சுட்டத்தக்கது.

இதன் சிறிது விரிநிலையாக, திருச்செந்தூர் முருகன் சந்நிதி முறை முப்பது தாழிசைகளில் '**வாழ்த்து**' எனும் பகுதியைக் கொள்கிறது. எழுசீரடிகளாலான இதன் தாழிசைகள் வாழியே என முடிபு கொள்கின்றன.

ஆசி கூறுதல், துதித்தல், மங்களம் பாடுதல், கடவுள் வாழ்த்து எனப் பலநிலைகளில் இது அமைகின்றது. தலைவனைப் புலவன் வாழ்த்துவதாக அமையும் புறவாழ்த்தும் இதில் அடங்குகின்றது.

தொல்காப்பியச் செய்யுளியல், நாற்பாவுக்கும் உரிய பொருளாக வாழ்த்தியலைச் சுட்டுகின்றது. 'வாழ்த்தியல் வகையே நாற்பாவுக்கு முரித்தே' (செய். 105). இதன் வகையாக அமையும் புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் கலி, வஞ்சி, வடிவங்கள் பெறா என்பது அவற்றினை விளக்குமிடத்துச் சுட்டப்படுகின்றது.

பாடாணின் துறைகளை விளக்கும் போது இவ்விரு வகைகள் தவிர (புறத் 29.8-9) 'அடுத்தூர்ந் தேத்திய இயன் மொழி வாழ்த்தும்' சுட்டப்படுகின்றது. கொடிநிலை கந்தழி வள்ளி விளக்கப்படுமிடத்துக் 'கடவுள் வாழ்த்து' எனும் வகையும் பொருந்துகின்றது (புறத். 27).

காடு வாழ்த்து (புறத். 19-35) காஞ்சியின் துறையாக இணைகின்றது. இவற்றில் இயன்மொழி, புறநிலை, வாயுறை வாழ்த்துகள் இலக்கிய வகையாகப் பாட்டியல்களால் கருதப்படுகின்றன" (மேலது, ப. 422, 423, 424).

ஈண்டு இயன்மொழி வாழ்த்து என்பது

**இன்னோர் இன்னிவை கொடுத்தார் நீயும்**
**அன்னோர் போல வமையெமக் கீகென**
**என்னோரு மறிய வெடுத்துரைத்தன்று**

என்பதாகும். இந்நூற்பாவிற்கு உரை தரும் போது 'இத் தன்மையோர் இத்தன்மை வழங்கினர் நீயும் அத்தன்மையோர் போல அப்படியான பொருள்களை எமக்குத் தருவாயாகவென்று சொல்லி எத்தன்மையோரும் உணர உயர்த்துச் சொல்லியது, எனப் பகர்கிறார் ஆசிரியர்.

அவ்வகையில் ஈண்டுக் காணப்படும் இயன்மொழி வாழ்த்து இராஜமார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பற்றியும் அவன் நாடு பரிபாலனம் செய்த முறை பற்றியும் வாழ்த்திப்பாடும் இலக்கியமாக அமையப் பெற்றுள்ளது.

நாண்மங்கலம் என்று சொல்லப்படும் தருமத் தினையுண்டாக்கும் செங்கோலினையும் அருளினையும் விரும்பியோன் பிறந்த நாளின் நன்மையைச் சொல்லியது என்ற பொருள் கூறும் துறைக்கு ஏற்ப, மாமன்னனின் பிறந்த நாள் வாழ்த்தாக இந்நூல் அமைந்துள்ளது.

இவ்வாறாகப் பண்டைய இலக்கண முறை மாறாமல் பின்னத்தூரார் படைத்துள்ள அப்படைப்புத் தரும் செய்திகளைத் தொகுத்துக் காண்போம். படைப்பு அக்காலக்கட்டத்தில் புதுமையானது என்றால் மிகையாகாது.

இவ்விலக்கியம் புதுக்கோட்டை சமத்தானத்து வரலாற்றுப் பதிவேடு என்ற அளவிற்குப் பெருமையுடையது. புதுக்கோட்டையைச் சிறப்பிக்கும் நல்லதொரு இலக்கியப் பனுவலாகவும் இலங்குவது. இன்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னான புதுக்கோட்டையின் வரைபடமாகவே இந்நூல் அமைவது இந்நூலுக்குரிய தனிச்சிறப்பாகும். புலவர் பெருமக்களைப் போற்றும் புரவலராகப் புதுக்கோட்டை மன்னர்கள் அரசாண்ட மாண்பினை நமக்கு எடுத்துச் சொல்லும் காலப்பெட்டகமாக இந்நூல் விளங்குவதைக் காணலாம்.

அகவற்பாவால் அமையப் பெற்றது இந்நூல். 570 அடிகளைப் பெற்றுள்ளது. நூற்றொடக்கம் கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைகிறது. பின்னத்தூரார் தாம் ஏற்றுள்ள இலக்கியப் பணி இனிது நிறைவுற தாழ்சடையோன் தந்த விநாயகனைத் துதித்துத் தொண்டையர்கோன் மார்த்தாண்ட பைரவன் புகழ்பாடும் வாழ்த்துச் சிறக்க அருள்பாலிக்க வேண்டுகிறார்.

**பார்த்தாண்டருள் புரியும் பாய்புதுவைத் தொண்டையர் கோன்**
**மார்த்தாண்ட பைரவன்றன் வாழ்த்துரைக்கு**

என்று தாம் எண்ணிய காரியம் பற்றி இயம்புகிறார் பின்னத்தூரார்.

நான்முகன் உருவாக்கிய இந்நிலவுலகில் தேமலித் தமிழின் சிறப்புணர்ந்த நற்றமிழ்ப் புலவர்கள் பாராட்டும் தமிழ்த்தாயின் நற்றிலகமாகத் திகழும் பெருமையையுடைய புதுக்கோட்டையையும் அதன் கோமகனையும் பாராட்டுவதே இந்நூற்பயன் எனப் பின்னத்தூரார் கூறுவதைக் காணலாம்.

இந்நூல் இரண்டு பெரும் பகுதியாக விளங்குவதைக் காண முடிகிறது. 'பண்டை இலக்கியமான சங்க நூல்களின் விளிம்பைத் தொட்டும், அதன் அகலத்தைக் கண்டும், ஆழத்தை உணர்ந்தும் நற்றிணைக்கு உரை கண்டவர் பின்னத்தூரார் என்பதைத் தமிழ் உலகு நன்கு அறியும். சங்கத் தமிழின் நடை அவர் எழுத்தில் இயல்பாய் அமைந்திருத்தல் வியப்பன்று. அவ்வகையில் முதற்பகுதியில் ஐந்திணை அடிப்படையில் புதுக்கோட்டையின் புவியியலை வருணித்து இருப்பதும் இரண்டாம் பகுதியில் புதுக்கோட்டை நகர வாழ்வியல் அமைப்பை எடுத்துரைத்திருப்பதும் காணத்தக்கது.

இவ்விரு பகுதியிலும் அன்றைய காலக்கட்டத்திய மக்கள் தொழில், உயரிய பண்பாடு, வாழ்க்கை முறை முதலியன மிகச் சிறப்பான முறையில் கூறப்பட்டுள்ளன. அவ்விளக்கத்தை ஈண்டுக் காண்போம்.

## குறிஞ்சி

மலைவாழ் மக்கள் 'வேலன் வணக்கம்' செய்யும் காட்சியினை முதலில் எடுத்தியம்புகிறார் ஆசிரியர். சிறப்பினை நல்கும் கழனியாம் கொல்லையின் வளம் பெருக வேலனை வேண்டுதல் மலைமக்கள் மரபு. அப்படிச் செய்யும் வழிபாட்டிற்கு உரிய சடங்குகளையும் எடுத்துக் கூறியுள்ளார்.

**நெடுஞ்சிலை நெருங்கிய தடம்படு கொல்லை**
**வளம்பெற வேலனை மலர்த்தாள் வணங்கி**

**உளங்கொள ஏத்தி உறுகடன் செலுத்தி**
**மறிப்பலி தந்து வெளிக்கள வேள்வி**
**திறப்பட வகுத்துச் செவ்விதின் வாழ்த்தலும்**

வேலனை வேண்டி ஆட்டைப் பலி கொடுத்து, உழவுத் தொழில் சிறக்கவும் வளம் கொழிக்கவும் வேண்டும் அன்றைய பண்பாட்டை ஆசிரியர் பின்பற்றிப் பாடியிருப்பது அவர் பட்டறிவிற்குச் சான்று,

தரணியாளும் மன்னனின் மனம் மகிழும்படி அரண்மனை தேடிவந்து தங்கள் திறம் காட்டி அதன் பயனாக, தக்க பரிசில்களைப் பெற்றுச் செல்வது இரவலர் மரபு. மன்னர் பெருமான் தன்னை நாடி வந்து நற்றமிழ் கவிபாடும் நாவலர்க்கு வரையாது வழங்கும் மார்த்தாண்ட பைரவனின் வள்ளல் தன்மையானது வானம் நில்லாது பெய்து நலஞ்சேர்க்கும் தன்மைக்கு ஒப்பானது என ஒப்புமைப்படுத்தி மகிழ்கிறார் புலவர்.

கரம்பு நிலத்தைத் திருத்தி, நல்ல விதைகளை விதைத்து உழவுத் தொழில் செய்யும் மக்கள் ஒரு புறம், விதைத்த விதைகளைப் பறவைகள் உண்டு விடாமல் கவண் எனும் கருவியோடு காவல் காக்கும் கொடிச்சியர் ஒருபுறம், மண் காணப்படும் புதரிடங்களில் புதைக்கப்பட்ட கிழங்குகளை அகழ்ந்து எடுத்துக் கொண்டு வந்து சேர்க்கும் மக்கள் ஒரு புறம், மலைத்தேன், கொம்புத்தேன், புற்றுத்தேன் என்ற மூவகைத் தேனைச் சேகரித்து வரும் கூட்டம் ஒரு புறம், கடுஞ்சினமும் வேட்டைப் பயிற்சியில் வல்லமையும் உடைய நாய்களைக் கொண்டு, காட்டுப்பன்றி மற்றும் குறுமுயல்களைப் பிடித்துவரும் கூட்டத்தினர் ஒரு புறம் என இவ்வாறாகப் பல தொழில் புரியும் மக்கள் வாழும் இடமாக விளங்குவது இக்குறிஞ்சிப் பகுதியாகும்.

குறிஞ்சி வாழ்மக்கள் தாங்கள் கொணர்ந்த இறைச்சியைத் தங்கள் கூட்டத்தாரோடு மட்டும் கூடி இருந்து உண்பது மட்டுமல்லாமல், தாங்கள் கொணர்ந்த இறைச்சியில் சிறப்பான பகுதி மற்றும் கானகத்து அழகிய கவரிமான், சந்தனமரம், அகில், கத்தூரி, ஆண் யானையின் தந்தம், புழுகு, தேன், வரிப்புலித்தோல் முதலியனவற்றை மன்னர்க்குப் பரிசுப் பொருளாக வழங்கும் மரபையும் எடுத்துக் கூறுகிறார்.

**கூறிய விறைச்சியோடு தாமகிழ்ந்துண்டு**
**வருவிருந் துண்ண வகிர்ந்து கொடுத்து**
**வரிப்புலித் தோலு மலிதேன் குடமும்**
**பொருவில் யானைப் பெருநெடுந் தந்தமும்**

கானக் கவரி மானொடு வாலுஞ்
சந்தன மரமு மிந்தன வகிலும்
நாவியும் புழுகு நரந்தமும் பிறவும்
சுமந்தனர் தினந்தொறு மனந்த முறைமையில்
தந்துமகிழ் வெய்திப் பந்தியி னிருக்கும் (30–39)

எனக் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கைச் சித்திரத்தைப் படைத்துக் காட்டுகிறார் பின்னத்தூரார்.

*பாலை*

பாலைநிலத்து வாழ் மக்களைச் சங்க இலக்கியம் பெரும்பாலும் 'வன்கண்ணர்' என்றே கூறும். ஐயரும் அம்மரபினை மறவாது தமது இலக்கியத்திலும் வடித்துத் தந்துள்ளதைக் காணலாம். இங்கு வாழும் மக்கள் தாங்கள் எண்ணியதை எண்ணிய வண்ணம் செய்து முடிக்கும் பண்பினர் என்பதை 'நினைத்த வண்ணம் நிறைகவர் திறலும்' (41) எனக் குறிப்பிடுவதன் மூலம் காணலாம். மறக்குடித் தோன்றி, இடையில் தழையாடை உடுத்துதலும் அழகிய புலித்தோலினை மேலுடையாக அணிதலும், பெருத்த யானை யீந்த தந்தத்தினால் ஆன வளைஅணிதலும், மகளிர் புலிப்பற்களைக் கொண்டு செய்யப்பட்ட தாலியை அணிதலும் கோங்குப்பூக்களைத் தலையில் இளம் பெண்கள் சூடுதலும், ஆடவர் தாங்கள் செய்யும் தொழில் சிறப்புற அமையப் பாலைத் தெய்வமான கொற்றவைக்கு நறுமணம் மிக்க பூக்களையும், அகில், சந்தனம் போன்ற பல பொருட்களையும் கொணர்ந்து, பலியோடு கூடிய பூசைகள் செய்யும் தன்மையினர் என்றும் மேலும் கவர்தல் தொழிலில் வரப்பெற்ற பொருள்களில் இருந்து ஒரு பகுதியினைத் தன்னாட்டு மன்னர்க்கு அளிக்கும் பண்பினையும் கொண்டவர்கள் என ஆசிரியர் சுட்டுகிறார்.

*முல்லை*

முல்லை வாழ் மக்களின் வாழ்வியல் பற்றி அடுத்தபடியாகச் சித்திரிக்கிறார் பின்னத்தூரார். வெண்பசுநிரை, திரிகொம்பெருமை, செறிமறியாடென மூவினம் மேயும் சேயுயர் அகன்ற கானகம். இங்குப் பாம்பணைப் பள்ளிப் பைந்துழாய் நெடியோனுக்குப் பூசைகளும் உலக நன்மை வேண்டி மக்கள் வேள்வியும் செய்யும் மரபினைப் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகிறார். முல்லை நிலமாகிய இங்குத் திருமாலுக்குப் பால்வெண் சோற்றுப் பள்ளயம் இறைநைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது. ஆயவன் அருளால் அருள்மழை பெய்ய, மக்கள் உழவுப் பணிகளைத் தொடர்ந்தனர். ஆறு குளங்கள் எல்லாம் நீர் நிறைந்து காட்சியளித்தன. பருவம் அறிந்து கருவிற் கிடந்த பலவகை

விதைகளைத் தேர்வு செய்து விதைத்தனர். எள், வரகு, சோளம், கேழ்வரகு, சாமை, கம்பு, துவரை, கொள்ளு, உளுந்து, காராமணி, முதிரை போன்ற தானியங்கள் விதைக்கப்பட்டு உழவுத் தொழில் சிறப்புற நடைபெற்ற வரலாற்றை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மேலும் முல்லை மக்களின் உற்பத்திப் பொருள்கள் பற்றிய குறிப்பினையும் அவர்கள் மன்னர்க்கு அன்புப் பரிசிலாகத் தருவன பற்றியும் குறிப்பிடுகிறார். செம்பொற் குடங்களில் நறுமணம் மிக்க நெய்யும், குற்றமில்லா நல்ல பசுக்கள் நல்கிய நற்பால் பல குடங்களிலும், குறைவற்ற பல்வகைப் பண்டங்களும் செழுஞ்சுவைத் தயிர்க் குடங்களும் எனப் பல்வகைப் பொருட்களைப் பரிசிலாக அனுப்பும் மரபு உண்டு என்பதனைச் சுட்டுகிறார் ஆசிரியர்.

இது மட்டுமன்றி முல்லை நிலத்துக் குழந்தைகள் மேனியில் பசு நெய்யின் வாசமும், மெல்லிய மகளிர் உடம்பிற் காணும் வெண்ணெய் நாற்றமும் நீங்காது நிலைத்து இருக்கும் என்பதனையும் சுட்டுகிறார்.

## மருதம்

மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானின் அருளாட்சி விளங்கும் இப்பகுதியில் 'கூர்த்தொளிர் பெருமாள் கோசரணேசன் கோயில் கொண்டு அருள் பாலித்து வருவது குறிப்பிடத்தக்கது. புது வெள்ளம் காணும் கங்கைப் பெருவெள்ளத்தால் மிகுத்து வருவது போலப் பொய்யா வானம் புதுபெயல் பெய்து உயர்ந்த கரைகளைக் கொண்ட ஆற்றில் புதுப்புனல் பெருகியமையால் குளங்கள் ஏரிகள் நிறையவும், அதன் காரணமாகப் பாசனத்திற்கென மதகுகள் திறக்கப்படவும், மக்கள் வலிய காளை பூட்டிய ஏரினைக் கொண்டு ஆழ உழுதலின் பயனாக மண் சேறானது மட்டுமல்லாமல் தொடர்ந்து உழுத காரணத்தால் கொழு முகமும் தேய்வுற்றதாக ஆசிரியர் இயம்புகிறார்.

உழுதல், களைஎடுத்தல், நாற்றுநடல், நீர்பாய்ச்சல் என வேளாண் மக்கள் தங்கள் பணியை மகிழ்வோடு செய்து வருவதாகவும் குறிப்பிடுகிறார். களை பறித்தலைப் பற்றி வருணிக்கும் போது அன்றாட வாழ்க்கையில் எதிர்ப்படும் இடர்களை மாமன்னன் இராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டமான், உன்னிப்பாகக் கவனித்துக் களைவது போல, வேளாண் பெருமக்கள் ஓங்கிய நெற்பயிரிடை கலந்த குறுகிய களைகளைக் களைவதாகக் கூறுகிறார்.

**பகரு மன்னவன் பல்லுயிர் காக்கு**
**நெறிமுறை யீதெனக் குறைவறக் காவல்செய்**

துயர்க்கிடர் போக்குமவ் வுத்தமன் போலப்
பயிர்க்கிடை வருகளை பறித்தெறிந் தளிப்ப (118–121)

உழவுப் பணி முடிந்து அறுவடைப் பணி நடைபெறும் காலத்து விளைந்த நெல்மணிக் கதிர்களை அரிந்து களத்துமேட்டுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதும், களமடிப்பதும், பதர் நீங்கத் தூற்றலும், விளைந்த தானியங்களைக் கட்டுகளாக்கி இல்லம் சேர்ப்பதுமான பணிகள் முறையாக நடைபெறுவதாகச் சித்திரிக்கிறார் ஆசிரியர்.

விளைந்த பொருளில் அரசுக்குச் சேர்க்க வேண்டிய வாரத்தொகையைப் பெருமகிழ்வோடும் மனத்திருப்தியோடும் மக்கள் களத்தில் அளந்து தரும் மாண்பினையும் பாராட்டுகிறார்.

இனி, அப்பகுதி அடுத்துள்ள சிறப்புகளை இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்: வானம் பொய்த்த போதும், வற்றாத சுவையோடு கூடிய நன்னீர் நிறைந்த சுனைகளையும், கதிரவன் ஒளி காணா அடர்ந்த நிழலையுடைய ஆழமான சுனைகளையும் தன்னகத்தே கொண்டு வானோங்கி வளர்ந்து நிற்பது பிரான்மலை. இப்பிரான்மலைத் தலத்தில்தான் நாரதன் இறைவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான் என்ற புராணச் செய்தியும் உண்டு. அதனை அடுத்து அருணகிரியின் அருட்பாடல்களைப் பெற்ற விராலிமலை முருகன் கோயில் அமைந்துள்ளது. திருமால் எழுந்தருளியிருக்கும் திருமெய்யம் திருத்தலமும் ஒரு பசுவின் காரணமாகத் தோன்றிய திருகோகரணத்தலமும், பெண் ஒருத்தி காரணமாகக் குடுமியோடு எழுந்தருளிய தாழ்சடைக்கடவுள் குடுமியான் எனப் பெயர் பெற்று அதன் காரணமாக அவர் எழுந்தருளிய இடம் குடுமியான் மலைக்கோயிலாக இங்கே அமைந்துள்ளதையும் சுட்டுகிறார். பேரையூர்ப் பெரு நகரில் எழுந்தருளியிருக்கும் நன்னாக நாதர் ஆலயமும், காமனைக் கடந்த வாம விஹாரமும், பண்டைச் சமணர்கள் கலை ஆர்வத்தோடு தோற்றுவித்த எழில்மிகு பள்ளிகள் நிறைந்த குகைகளும், ஆலங்குடியில் எழுந்தருளியுள்ள பெருமானின் சிறப்புறு கோயிலும், சங்கொலி முழங்கும் நன்மணஞ்சேரி விஞ்சுசீர்ப்பதியும், திருவிடையாப்பட்டி, பொற்பனைக் கோட்டை என்பனவற்றையும் காட்டுகிறார். கானாறு எனப் போற்றப்படும் வெள்ளாறு, திருமெய்யப்பதியைத் தன்கரை கொண்ட பாம்பாறு பாய்வது, முன்னொரு காலத்தில் காணும் இடமெல்லாம் சிவபெருமானை நினைவூட்டும் சிவக்குறிகள் நிறைந்த பகுதியாக விளங்கியது, இவ்விடத்தைப் புண்ணிய இடம் என்று எண்ணிச் சித்தர் பெருமக்கள் வணங்கியது அதன் காரணமாக அவ்விடம் பட்டணம் எனச் சிறப்புப் பெற்றது முதலானவற்றைக் கூறி அவ்விடமே சிலம்பு பாராட்டும் கொடும்பாளூர் என்றும் எடுத்தியம்புகிறார் ஆசிரியர்.

இது மட்டுமல்லாது, எழில்மிகு சிலை வடிக்கும் சீர்மிகு சிற்றுளித் தச்சர்களின் சிற்றொலி எங்கும் பரவ, அவர்க்குத் தேவையான நல்ல கற்களை நல்கும் பெருமலைகளும், அகல்நீர் ஓடும் வெள்ளாறும், கற்பைப் பெரு நிதியெனக் கருதும் வணிகப் பெருமக்கள் தம் மூதூர்களும், அந்தணரும், கள்ளர் இனத்தவரும் உழுதூண்பணிமேற்கொள்ளும் வேளாண் மக்களும், குறும்பரும், செட்டியார் இனத்தாரும் நிறைந்து வாழும்படியான அமைப்பினைப் பெற்ற நாடு எனப் புதுக்கோட்டைப் பகுதியைப் புகழ்கிறார் ஆசிரியர்.

## புதுக்கோட்டைச் சிறப்பு

இராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் நல்லாட்சி செய்யும் கபிலை நாட்டின் தலைநகரமாக விளங்கும் புதுக்கோட்டையின் சிறப்பை, ஆசிரியர் படைப்பாளர் என்ற முறையில் வரைபடப் படுத்தியுள்ள காட்சியைக் காணலாம்.

தொடக்கமாகப் புதுக்கோட்டையின் எல்லையைக் கூறுகிறார் ஆசிரியர். அன்று புதுக்கோட்டையின் மேற்கே கோகரணேசமும், வடபால் இராமசந்திரபுரமும், தென்பால் பைரவ மார்த்தாண்டபுரமும் கிழக்கே காடு சூழ்ந்த நாடும் அமைந்திருந்தது.

கிட்டத்தட்ட நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டைப் பெருநகரத்தின் அமைப்பைப் பதிவு செய்து தந்துள்ள பின்னத்தூராரின் கூர்த்த அறிவு போற்றுதற்குரியது. அதனை ஈண்டுக் காணலாம்.

இரவுக் காலத்தில் மக்கள் தடையின்றிச் சாலையில் செல்வதற்கு ஏற்றபடியாகத் தெருக்கள் தோறும் கற்றூண்கள் நிறுத்தி அதன்மேல் கண்ணாடி விளக்கு மாடங்கள் அமைத்து, விளக்கு எரிவதற்கு நெய்யும் திரியும் இடப் பணியாளர்களை நியமித்து, மக்கள் துயர்துடைத்த மாமன்னர் பெருமையைக் கூறும் வாயிலாக அன்றைக்குப் பொது விளக்குகள் அமைக்கப் பெற்ற வரலாற்றை இற்றைத் தலைமுறையினருக்குப் பதிவு செய்து காட்டும் பின்னத்தூரார் பணி போற்றுதற்குரியது.

மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானின் அரசியல் சாணக்கியனாக, கபிலை நாட்டிற்கு நன்னலஞ் சேர்க்கும் அமைச்சராக இருந்த சேஷையா என்பார் ஆற்றிய பணிகளில் சிறப்பானதாக ஆசிரியர், வானம் பார்த்த பூமியாக விளங்கும் புதுக்கோட்டைக்குப் பயன் தரும் வகையில் சிவகங்கைத் தண்புனற் பொய்கை அமைத்ததைக் கூறுகிறார். அழகிய பொய்கையும், அகன்ற பெருங் குளங்களும், வற்றாத வாவிகளும் ஆழ் கிணறுகளும், பொறிபல

பூட்டிய இறைப்புக் கிணறுகளும், நிறைந்து விளங்கிடும் நாடாகப் புதுக்கோட்டை விளங்கியதை ஆசிரியர் சுட்டிக் காட்டிய வழிக் காணலாம்.

இனி அவ்வூரில் அமைந்த பல்வேறு தெருக்களின் சிறப்புப் பற்றி முறையாகக் காண்போம்.

## அரசர் தெரு

மாமன்னர்தம் சுற்றமும் கொற்றவன் அருகே பணி புரியும் உயர்ந்தோர் சுற்றமும் வாழும் இடம் பற்றியும் குறிப்பினைத் தருகிறார் ஆசிரியர். மரபு நெறி தவறாது கற்றுக் கொள்ளும் புரவி ஏற்றமும், களிறு ஏற்றமும், விரவு பல ஊர்திகள் ஓட்டுநர் பயிற்சியும், சுடு தொழிலுக்குரிய ஊதுகுழற் பொறிப்பயிற்சியும், காடு சென்று வேட்டையாடுதற்குரிய பயிற்சியும் போன்றவற்றில் தேர்ச்சியும் ஆங்கில ஞானமும், கல்லாப் பல்கலை என்று சொல்லும் படியான பட்டறிவு, கொண்ட அரசர்கள் மற்றும் அவர் சுற்றத்தார் வாழும் பெருமைக்குரிய தெருவாக அரசர் தெரு விளங்குவதாகக் கூறுகிறார்.

## அந்தணர் தெரு

நாளும் அதிகாலையில் கேட்கும் மந்திர ஒலிகளும், விடியற்காலையில் நன்னீராடியும் உடலில் திருநீறு பூசியும் மணங்கமழும் சாந்து அணிந்தும், மக்களுக்காக வேதம் கூறிய வழி அறப்பணி செய்தும் வாழ்ந்து வரும் அந்தணர்கள் குழுமிய அக்கரகாரத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

## வைசியர் தெரு

ஆடகம், கிளிச்சிறை, சாதகம், சாம்பூநதம் என்ற நால்வகைப் பொன்களை விற்கும் பொன் வணிகர் தெருவில் நவமணிகளும், பொன்னாற் செய்த ஆபரணங்களும் தக்க வேலைப்பாடுகள் கூடிய கண்ணாடி அறைகளில் காட்சிப் பொருளாகப் பேழையில் வைக்கப்பட்டிருந்தது. தங்கத்தின் தரம்காண உரசிப்பார்க்கும் பொற்கொல்லர்களும் நிறைந்த தெருவாக வைசியர் தெரு அமைந்துள்ளது. இதனை,

> பொருவிலை புகன்று வருபொருள் கொண்டு
> பேணியுற்றினி வாணிபர் தெருக்களும் (245-246)

எனக் காட்டுவார்.

### வித்தியாசாலை

பைந்தமிழ்ப் பாடம் நடைபெறும் பாடசாலைகளும், வடசொல் கற்றுத்தரும் வித்தியாசாலைகளும், ஆங்கில மொழி கற்றுத்தரும் பள்ளிகளும் பிற பல்கலைச்சாலைகளும் அமையப்பெற்ற நகரமாகப் புதுக்கோட்டை விளங்குவதாகக் கூறுகிறார் பின்னத்தூரரார்.

வாய்ப்பாட்டும், நரம்புக்கருவியாகிய வீணைப் பயிற்சியும் தரவல்ல இசைக் கல்விச்சாலைகளும் இத்தகைய கல்வியால் கற்றுத் தேறியவர்களைப் பாராட்டும் வகையில் தக்க பரிசில்களை வழங்கும் நற்கழகங்களும், அந்தணச் சிறுவர்களுக்கு நான்மறையைப் பயிற்றுவிக்கும் வேதபாடசாலைகளும் காணப்படுகின்றன.

### உத்தியோக சாலை

நாட்டின் பொருளாதாரம் உழவுத் தொழிலை நம்பியே உள்ளது என்பர். புதுக்கோட்டை மன்னர்தம் அரசு இதனை நன்றாகவே உணர்ந்து இருந்தது. இம்மன்னர்தம் அதிகாரிகள் வேளாண் தொழிலுக்குரிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழியாக ஆறு குளங்களைத் திருத்தியும், நீர் செல்லும் மதகுகளைப் பார்வையிட்டுப் பழுதாக அவையிருந்தால், செம்மைப் படுத்தியும் நெடிய கல்லணைகளை, மிகு பொருள் செலவழித்துச் செப்பம் செய்தும், மதகு, சுனை முதலியவற்றைப் பாதுகாப்போர் நலம் கருதி மன்றங்கள் ஏற்படுத்தியும் குடிமக்களுக்குக் கடமையாற்றி வந்தனர். அவ் அலுவலர்கள் பணியாற்றும் உத்தியோக சாலைகளும் நெடிதுயர் அறிஞர் நிறை அம்பலமும், இரவு நேரத்தில் ஊரைக்காக்கும் ஊர்க்காவல் படையினர் மன்றமும், பொய்ம்மைக்கு இடம் தராமல் நேர்மைக்கு முதலிடம் தந்து அறநெறி வழுவாது

> 'பொரும்படிறின்றிப் புன்னெறிப் புகாமல்
> வரும்படி நோக்கும் வைக்கீல் கூட்டம்'
> துணை வழக்கேற்றுச் சொன்னவை யோர்ந்து (277-279)

செயல்படும் வழக்கறிஞர் மன்றங்களும், அறத்தொடு நின்று நீதி வழங்கும் அறவோர் அம்பலமும், கொள்ளையையும் திருட்டையும் தொழிலாய் உடைய கள்ளர்களிடம் உண்மையை அறியப் பயன்படும் ஆய்வு அம்பலமும் கூடிய நீள்தெருவும் கொண்டதாக அமைந்திருந்தது அன்றைய புதுக்கோட்டை. இவற்றுடன் பரத்தையர் வீதியும் இருந்ததாகச் சுட்டுவர்.

### வைத்தியசாலை

ஓர் அரசின் பெருங்கடமைகளுள் ஒன்று மக்களின் பசிப்பிணி நீக்குவது போல உடற்பிணி நீக்குவதும் ஆகும். அவ்வகையில் மக்களுக்கு உடல் நலம் குன்றாமல் பாதுகாக்கும் மருத்துவச் சாலைகள் நிறைந்த நெடியதெருவும், மக்களின் மனக்கவலையைத் தீர்க்கும் மனம்மகிழ்மன்றமும் உள்ளன.

### தண்ணீர்ப்பந்தல்

நெடும் பயணம் செய்து களைத்து வரும் மக்களுக்கும், கோடையின் வெப்பத்தில் தவிக்கும் மக்களுக்கும் தாகம் தீர்த்தல் என்பது நற்பயன் அளிக்கும் அறச் செயலாகும். புதுக்கோட்டையில்

**தண்ணீர் பந்தரு மடந் தடங் காவும்**
**உண்ணீ ரோவென நண்ணினர் தமக்குப்**
**பல்லுண வளிக்கும் நல்லறச் சாலையும்** *(298-300)*

பல நிறைந்திருந்தன எனச் சுட்டுகிறார் ஆசிரியர்.

### சந்தை

சந்தை என்பது குறித்த நாளில் கூடும் பல்பொருள் அங்காடி எனலாம். அன்றைக்கும் இன்றைக்கும் கிராமத்திற்கு எழில் சேர்ப்பதோடு கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து தரும் அங்காடிகளின் குழுமமே சந்தை எனப்படும். இங்கு உப்பு முதல் அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு வரும்.

**மலைமகட் குரித்தென விடுமுறை வகுத்த**
**நிலைகெழு வெள்ளிநாள் நிவக்கு மாவண**
**மிந்திர திருவு மெய்திய விலைக்கு**
**வந்துத வத்தரும் வளம்பெறு சந்தையும்**

என அது குறிக்கப்படுகிறது.

### நந்தவனம்

இறைவனுக்கு வேண்டிய பூமாலைகளுக்குரிய அன்றலர்ந்த மலர்களைத் தரும் நந்தவனம் இங்கு உண்டு என்பதை,

**தேனந்த மில்லாச் செழுமலர் மலர்ந்து**
**வானந் துதைந்தன வூனந் தழாத**
**ஆனந்த பலர்க் கெனு மாநந்த வனமும்** *(305-307)*

எனப் பதிவு செய்கிறார்.

## தொழிலாளர் பகுதி

அனைத்து நாட்டு அரும் பொருள்களை விற்கும் விற்பனைக் கூடங்களும், குபேரக் கடவுளே பெருங்கடை வைத்தாற் போலப் பலவகைப் பண்டங்கள் கிடைக்கும் படியான அங்காடியும், பல்வினை இரும்பு செய் கம்மியப் பகுதியும், உழவு மற்றும் பிற தொழிற்குதவும் கொல்லர்கள் பணி செய்யும் பட்டறைப் பகுதிகளும், மரவேலைப்பாடு செய்யும் தச்சர் குழுவும், குற்றமிலாச் சிலை வடிக்கும் கல்தச்சர் பகுதியும் வேலைப்பாடுகள் நிறைந்த பொன் ஆபரணங்கள் செய்யும் பொற் கொல்லர்கள் பகுதியும், சுவரில் சுதையால் சித்திர வேலைப்பாடுகள் செய்யும் சுதை வினைக் கலைஞர்கள் கொண்ட பகுதியும், சூரிய ஒளியின் துணை கொண்டு செய்யப்படும் புகைப்படத் தொழில் செய்வோர் பகுதியும், வரைந்த வரைபடத்தினைப் பார்த்துச் சித்திரம் தீட்டும் சித்திரக் கலைஞர் பகுதியும், தோற் பணி செய்யும் கலைஞர்கள் ஒரு பக்கமும், சிகையலங்காரம் செய்யும் முடிதிருத்தக் கலைஞர்கள் ஒரு பக்கமும், ஆடை நெய்யும் தொழிலைச் செய்யும் நெசவாளர்கள் தெரு ஒரு பக்கமும், காற் கொலுசு அல்லது காற் சிலம்பு செய்யும் கைவினைக் கலைஞர் ஒரு பக்கமும், செம்புத் தொழில் செய்யும் பணியாளர் ஒரு பக்கமும், வெண்கல வினைஞரும், நறும்பூ விற்போரும், நல்ல தேன் விற்போரும், தூய வெள்ளாடைக்குச் சாயம் ஏற்றுபவரும் கொண்ட பகுதிகளும் கோயிற் பரிகரம் செய்யும் பணியாளர்கள், அரண்மனைக்கும் பல்லியம் செய்வோர், ஆய்கணக்காளர், காலக்கணிதர் என்னும் சோதிடர் ஆகியோர் வாழும் தெருக்களும் கொண்ட பண்டைய நகரம் புதுக்கோட்டை.

நான்கு பக்கமும் மிக உயர்ந்த மதிற்சுவரும் நீரரண், மலையரண், மற்றும் அகழி என்ற மூவரண் அமையப் பெற்றதும், நான்கு அடுக்காக எழில் கொஞ்சும் உயர் மாடங்கள் கொண்டதும், வாள், வேல், குழல், கதை ஆகியவற்றைக் கொண்டு காவல் செய்து வரும் வன்கை காவல்மாக்கள் நிறைந்து காணும் படியும், மீன் கொழுப்புதனில் எடுத்த நெய் கொண்டு ஏற்றப்பட்ட நெய் விளக்குகள் காணும்படியாகவும், திண்ணிய கதவில் அமைந்த பெரிய தாழ்களும் அமையப்பெற்ற கோட்டைச் சுவரும், கொண்டதாக இலங்குகிறது இந்நகரம்.

மாமன்னரின் அத்தாணி மண்டபமும், படைக்கலச் சாலையும், பண்ட சாலையும், பூசனைச் சாலையும், ஈகை முரசும், வெற்றியைக் குறிக்கும் வாகை முரசும், மகிழ்ச்சியைக் குறிக்கும் இன்னிசைப் பறையும், மங்கல ஒலி யெழுப்பும் காண்டா மணியும் கொண்ட அரண்மனைப் பகுதியும் அமையப்பெற்றது இப்புதுக்கோட்டை.

நவதேவியர் எனப் போற்றப்படும் ஒன்பது சக்திகளின் ஒட்டு மொத்தத் திருவிழாவாகக் கருதப்படும் நவராத்திரி சமயத்தில் தொண்டையர் வேந்தன் கன்னிப் பெண்களுக்குக் காசும் அரிசியும் கலந்தளிக்கும் மாண்பும், பல்லாயிரக் கணக்கான அந்தணர்களுக்குத் தூய்மையான அரிசியோடு, கோகரணேசன் பாகத்திறைவியின் வடிவம் பொறித்த காசும் தந்து மகிழ்விப்பதும் தென்மொழி, வடமொழி தேர்ந்தவர்களுக்கு நற்பரிசுகள் அளித்தலும், கற்றுத் தேறிய பெரியோர்களுக்கு மாமன்னரின் பிறந்த நாளன்று அவர்கள் தரம் அறிந்து செய்யும் கொடையும் என நாளெல்லாம் விழாக்கோலம் பூண்டு காணும் நகரம் புதுக்கோட்டை எனப் பாராட்டுகிறார் ஆசிரியர்.

புதுக்கோட்டை மாமன்னர் இராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூரின் பிறந்தநாள் வாழ்த்தாகப் பாடப்பட்டது தான் இந்த இயன்மொழி வாழ்த்து. இது பற்றிப் பின்னத்தூரார் 'புதுக்கோட்டை மகாராஜா அவர்கள் மகா. ஸ்ரீ. ஸ்ரீ. ஸ்ரீ. ஹிஸ் ஹைனஸ் ஸ்ரீ பிரகதம்பாதாஸ் இராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர் அவர்களது மங்களத்தை விரும்பி யியற்றிய இயன்மொழி வாழ்த்து' எனக்குறிப்பிடுகிறார்.

## வரலாற்றுப் பதிவுகள்

சோழன் ஒருவன் நாககன்னியை மணந்ததால், அதன் காரணமாகப் பிறந்த ஆண்மகவை அவள் தொண்டைக் கொடியை உடலிற் சுற்றிக் கடலில் விட அக்குழந்தை கடல் வழியாகத் தமிழகம் சேர அக்குழந்தை சேர்ந்த நாடே தொண்டை நாடு ஆயிற்று என்பது ஒரு செய்தி.

இந்தப் புதுக்கோட்டை மன்னர்களுக்குத் தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் அடையாக அமைந்த வரலாற்றை ஆசிரியர்,

**கயிலையின் முருகன் பயில்தட மூழ்கிச்**
**செழுஞ்சுனை யெழுந்த திருவேங் கடத்தரு**
**கெழுஞ்சுடர் வடிவினோ ரேந்திழை நிற்ப**
**கண்டெழு காமுக னாகி யொண்டொடி**
**பெருநலமுண்டு மருவின னிருப்பப்**
**பொருவிலாங் கவள்வயிற் போந்தானாக**
**ஒளியு மாற்றலும் ஓம்பா வீகையு**
**மளியும் வனப்பும் அருளும் திண்மையும்**
**ஒருவடி வெடுத்தென வரும்அவ் வொருவன்**
**பேசுமந் நாட்டிற் பிறந்தது கொண்டு**

தேசவீர் தொண்டைமான் செம்ம லோனென
நாமஞ்சூடி நானில மளிப்ப'

எனக் கூறுகிறார். இதில் இரண்டு செய்திகள் கூறப்படுகின்றன. ஒன்று, கிள்ளி வளவன் மணிபல்லவத் தீவு சென்று நாககன்னியுடன் உறவாடி பிறந்த குழந்தையை நாககன்னி தொண்டைக் கொடியால் பிணைத்துக் கடலில் விட அக்குழந்தை, நாகப்பட்டணம் அருகே கரை ஒதுங்கியதாகவும் அவ்வகையில் தொண்டைக் கொடியைச் சூடி வந்ததால் தொண்டைமான் ஆனான் அக்குழந்தை என்றும் கூறப்பட்டுள்ளது.

இரண்டு, வானவர் மைந்தன் எனப் போற்றப்படும் இந்திரன் செழுஞ்சுனை மூழ்கி எழ எதிரே நின்ற ஆரணங்கு ஒருத்தியோடு புணர்ந்து பெற்ற மகன் தொண்டைமான் என அழைக்கப்பட்டதால் அவன் குடிப்பிறந்தோர் தொண்டைமான் என்ற பெயரினைப் பெற்றனர் எனக் குறிப்பிடுகிறார்.

## சிவஞானபுர துரைத் தொண்டைமான்

ஆர்க்காட்டு அரசனும் ஆங்கிலத் தலைவனும் இவனுடன் நட்பாக இருந்த காலக்கட்டத்தில் பிரான்சு நாட்டுப் பிரஞ்சுப் படையினர் ஆங்கிலேயர் மீது படை தொடுத்தனர். ஆங்கிலேயர் தங்கள் நண்பனான சிவஞானபுர துரைத் தொண்டைமானை நாட, அவனும் களம் இறங்கி, ஆங்கிலேயருடன் இணைந்து நின்று பிரஞ்சுப் படையினரைப். புறமுதுகு இட்டு ஓடச் செய்தான். இதனை,

ஆர்க்காட்டு அரசனும் ஆங்கிலத் தலைவரும்
போர்க்காட்ட மின்றிப் புகுந்து நட்பாதலும்
உற்றுழித் துணைவ னுனையன்றி யுண்டோ
உற்றது செயவே முதலியவை மறவேம்
வழிநடந் துன்னை வாழ்த்துவேங் கெழுமிய
சேனையை நடத்திச் சேர்ந்தனை யாயினென்
றெழுதியாங்கிலர் விட வேற்றனன் மகிழ்ந்து
பழுதுறு பிரான்சியர் படைகெட அழித்து
நின்ற உதவிகள் புரிந்தவன்............ *(409–417)*

எனப் பாராட்டுவதோடு இவன் சைவ சமயத்திடத்துக் கொண்ட பற்றின் காரணமாகச் சைவ சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டவன் என்பதையும் சிவ பக்தி மிக்கவன், நவராத்திரி விழவினைச் சிறப்பாகச் செய்தவன் என்பதையும் பின்வருமாறு காட்டுகிறார்.

தக்காண மூர்த்தி மிக்கபூ சனையிட
நவராத் திரிவிழா தவறா தமைத்த

*சிவஞான புரதுரைச் செம்ம லென்னும்*
*விசய ரகுநாத வேந்தன்*

## விசயரகுநாதத் தொண்டைமான்

இவன் இராய ரகுநாதத் தொண்டைமானின் சிறியதந்தை மைந்தன் என்பதை

*- - - - - - - - - - - - - - உறசை*
*அரசன் வானந்த துரையெனும் பெயரிய*
*இராய ரகுநாதத் தொண்டைய ரேந்தலு*
*மிவன் சிறுதந்தை மகனாய்த் தோன்றி* *(474-477)*

என்று சொல்லி இவனே ஹைதர் அலி மைந்தன் திப்புவை அடக்கியவன் என்ற வரலாற்றுச் செய்தியினைப் பதிவு செய்கிறார். இதனை,

*முற்படும் ஹைதர் மைந்தன் முறைதீர்*
*திப்புவை யடக்கிய*

என்ற வரிகள் மூலம் நாம் உணர முடிகிறது. மேலும், தமிழகத்தில் அன்று வெள்ளையரை எதிர்த்துப் போராடிய பாஞ்சாலங்குறிச்சிச் சகோதரர்கள் கட்டபொம்மு, ஊமைத்துரை ஆகியோர் வெள்ளையரின் தேடுதலில் இருந்து தப்பிக்க, புதுக்கோட்டை வனத்தில் மறைந்திருந்த போது, ஆங்கிலேயரின் வேண்டு கோளுக்கிணங்க, அவர்களை வளைத்துப் பிடித்துத் தந்த பெருமைக்குரியவர் விஜயரகுநாதத் தொண்டைமான் என்பதை

*மாஞ்சோலை சூழ்தரு பாஞ்சாலங் குறிச்சிக்*
*கோட்டையி லுதித்த தொருவினை யாளா*
*ஊமையன் குமார சாமி நாயகன் முன்*
*ஆங்கிலர்க் கிழைத்த தீங்கு கண்டுபுலம்பி*
*மெல்லெனப் போகி வல்லே பிணித்துடன்*
*இசைந்த ஆங்கிலர் தம் வசம் பெறக் கொடுத்து* *(483-488)*

எனும் இவ்வரிகள் மூலம் பதிவு செய்கிறார். மேலும் மருது சகோதரர்களை மடக்கிப்பிடித்ததையும் இவர் பதிவு செய்துள்ளார்.

## இராயத் தொண்டைமான்

இம்மன்னரது வரலாற்றில் இவரது வீரத்தைப் போற்றும் வகையில் கீழ்க்காணும் குறிப்பைத் தருகிறார். விசய நகரத்து மன்னர்தம் பட்டத்து யானை வலிய மதங் கொண்டு பாகனை உருட்டி விட்டு, திசையெலாங் கதறத் திரிவதைக் கண்ட இராயத்

தொண்டைமான் அதனைப் பிடித்து அடக்கி வெற்றி கொண்டான். இதனை அறிந்த மன்னர் அவனுக்கு அளித்த பரிசில்களை

கண்டு மகிழ் வெய்திய காவலன் அளித்தன
தன்பெயரோடு தனிவலம் புரியும்
பகற்றீ வட்டிலு நகைப் பூங் குடையும்
அனுமக் கொடியு மவின்சா மரையுடன்
பலவகைச் சிறப்பும் நலமுறப் பெற்றுப்
பராவரும் புகழொடு பார்முழு தாண்ட
இராய பூபனு மிவன்

என எடுத்துக் கூறி உள்ளதைக் காணலாம்.

## இரகுநாத ராயத் தொண்டைமான்

தஞ்சையை அரசாண்ட வேந்தனும், தளவாய் ஓதுசிரி ராமநாதபுரத்துறை சேதுபதியும் இவனோடு நட்போடு இலங்கிய காலத்தில், சிராப்பள்ளியைச் சார்ந்த கவுரியன் என்பான் இவன் திறம் அறிந்து நால்வகையான சேனைகளைத் தந்து, நாகலாபுரத்துப் பாளையக்காரனையும் துணைக்கு நிறுத்தி, பல்லவராயன் என்பான் கைப்பற்றிய கபிலை நாட்டை வென்று வர அனுப்பினான், இவனும் வஞ்சி சூடிப் போர்க்களம் கண்டு வெற்றி கண்டதை

பூச்சி நாயகன் புகலிடந் தேடவும்
இலக்கி நாயகன் கலக்கமுற் றோடவுங்
கம்ம நாயகன் னம்மகான் புகுதவும்
வெற்றிமேற் கொண்டு மீட்டுறை நாளில்
உற்றகாரண மொருசிறி திட்டுத்
தளவாய் மனை யுளபல சேனையோடு
இளையான் போர்செய வெதிர்த்தனன் போந்து
கவிநாட்டேரி கரையி னிறங்கலும்
புவி நாட்டியவிவன் செவி நாட் டிடச் சினந்து
யானையுங் குதிரையுந் சேனை வீரரும்
மானமின்றி மடிதர வழித்தது
நாட்டினோர் பகுதியும் மீட்டு வசங்கொண்டு
அகமகிழ்ந்து ஆண்ட ரகுநாதராயத்
தொண்டைமான் என்னுந் திண்டிறல் வேந்தனும்

எனப் பாராட்டி இவனுடைய வீரத்தைப் பதிவு செய்துள்ளார்.

## இராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர்

மாணாக்கராற்றுப்படை பாராட்டும் புரவலன் இவனே. இவன் புதுக்கோட்டை நகரத்து எழுந்தருளியுள்ள பெரியநாயகி

அம்மையிடத்து நீங்காப் பற்றுடையவன். விசய ரகுநாதத் தொண்டைமானின் அருந்தவப் புதல்வன். புலவர் போற்றும் பெரியோன். நாயகன்; உத்தமன்; முகப்பொலிவு மிக்கவன். இதைக் குறிப்பிடும் போது நூலாசிரியர் இவனை,

இராமச்சந்திர வேந்தன் சேயென
ஓராயிரந் தண்கதிர் ஒன்றாய் உதித்தென
அராவணை யமல னருளொருங் குதித்ததெனக்
குராவணி குமரவேள் குவலயத் துதித்தெனப்
பராவருந் தருமம் பாரில் முளைத்தென
சராசன மதனன் தனிவடி வெடுத்தென
இராசமண்டலத்தில் இவற்கிணை யிலையென (497–503)

எனப் புகழ்கின்றார்.

காலைக் கதிரெனக் காட்சியில் வளர்ந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் நல்லரவணைப்பில் வளர்ந்து, மனுநெறி செழிக்கவும், மக்களுக்கு ஏற்படும் இடர்கள் தொலையவும் சைவநெறி உலகெலாம் உயர்ந்து ஓங்கவும் நல்லாட்சி நல்கிய காவலன் இவன் எனப் பாராட்டுகிறார் ஆசிரியர்.

தள்ளரும் பெரும்புகழ் தனக்கோராகரன்; தெள்ளிய நன்மதி சேருந் திவாகரன்; வெள்ளக் கதிரொளி வீசுந்திவாகரன்; வள்ளல் பெருமான்; மாண்புடைய மார்த்தாண்ட பைரவர்; கீர்த்தி மிக்கெய்தியவர் என மேலும் புகழ்கிறார். இவர் ஆட்சிக் காலத்தில் தான் புதுக்கோட்டை போற்றிய மூதறிவாளனான வேங்கட ராமதாசன் அமைச்சனாக இருந்து சிறப்புச் செய்தான்.

இத்தனைச் சிறப்பு மிக்க இம்மன்னர் ஆட்சியில் வேளாண் மக்கள் நீர் வளம் பெற்று மகிழ்ந்தனர். புலவர் பெருமக்கள் பொருள் வளம் பெற்றுச் சிறந்தனர். இளையோர் கல்விக் கண் திறக்கப்பட்டு உயர்ந்தனர். இவர் ஆட்சிக் காலத்தில் குன்றா வுலகம் குறைவற நோக்கித் திங்கள் மும்மாரி பொழியத் திசை திசை பொங்கும் பசுமை ஓங்கி, நாடு நாடா வளத்தினதாக விளங்கிய சிறப்பினைப் பின்னத்தூரார் காட்டியுள்ள பாங்கு படித்து இன்புறத்தக்கது.

இவ்வாறாக வரலாற்றுக் குறிப்புகளைச் சொல்வதன் வாயிலாக இராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானின் பெருமைகளைப் பேசிச் செல்கிறார் ஆசிரியர்.

## மாணாக்கராற்றுப்படை

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் படைப்புகளில் ஒன்று மாணாக்கராற்றுப்படை. இயன்மொழி வாழ்த்தைப் போல இதுவும் காலத்திற்கேற்ற படைப்பாக முகிழ்த்தது. ஐயரின் நுண்மாண் நுழைபுலத் திறத்தை இந்நூல் எவ்வகையில் எல்லாம் வெளிப்படுத்துகிறது என்பதை இனிக் காணலாம்.

### ஆற்றுப்படை

"ஆற்றுப்படை என்னும் சொல் வழிப்படுத்துதல் என்னும் நிலையில் பரிசில் பெற்றான் ஒருவன் அது பெறக் கருதியவனை ஒரு தலைவனிடத்துச் செலுத்துவதாகப் பாடும் பிரபந்தத்தைக் குறிக்கின்றது. தொல்காப்பியத்திலேயே இச்சொல்லாட்சி அமையக் காணலாம். சொல்லிலக்கணம் கூறுமிடத்துச் சொல்லும்,

***முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி***
***பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே***
***ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும் (914)***

எனவும்,

புறத்திணையில் பாடாண் திணையை விரிக்கு மிடத்துப் பொருண்மையும்

***கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்***
***ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்***
***பெற்ற பெருவளம் பெறா அர்க் கறிவுறீஇச்***
***சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும் (1037)***

என அமைந்து ஆற்றுப்படையை விளக்குகின்றன.

தொல்காப்பியத்தில் குறிப்பிடும் இவ் ஆற்றுப்படை சிறிய தனிப்பாடலாக அமைந்தமையைப் புறநானூறும் பதிற்றுப்பத்தும் காட்ட, நெடும்பாடலாக வளர்ந்தமையைப் பத்துப் பாட்டின் ஐந்து ஆற்றுப்படைகளும் காட்டுகின்றன.

புறப்பொருள் வெண்பாமாலையும், பாட்டியல் நூல்களும் ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுக்கின்றன. பரிசில் கொண்டு மீளும் ஒருவன் இடைச்சுரத்து, வறுமையுடன் வரும் பிறிதொருவனைக் கண்டு, தனக்குப் பரிசில் தந்த புரவலன் பால் வழிப்படுத்துவதே இவ்விலக்கியப் பொருண்மை. புரவலன் ஆகிய பாடற்றலைவன் புகழே அடிப்படை நோக்கமாக அமைகிறது. ஆற்றுப் படுத்துவோராகக் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோரைத் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பல நூல்கள் கூறுகின்றன.

ஆயின் பன்னிரு பாட்டியல், புலவரையும் இணைத்து ஐவரைத் தருகிறது. அகவற்பாவை இவ்விலக்கியத்திற்கு உரியதாகக் கூறுகின்றது.

புறநானூற்றில் காணப்படும் ஆற்றுப்படைகள், புலவராற்றுப் படை 48, 49, 141, விறலியாற்றுப்படை 64, 103, 105 பாணாற்றுப்படை 68-70, 138, 141, 155, 180 எனப் பலவகையில் அமைகின்றன. இவை தவிர இன்னும் பலபாடல்களும் ஆற்றுப்படைச் சாயலில் அமைந்து காணப்படுகின்றன. பதிற்றுப்பத்தில் மிகுதியாக விறலியாற்றுப் படையும் (40, 49, 57, 60, 78, 87), பாணாற்றுப்படையும் (67) அமைகின்றன.

இவற்றில், ஆற்றுப் படுத்துவோர் நிலை பற்றிய வருணனை, புரவலன் கொடை முதலிய சிறப்பு, பரிசில் பொருள் போன்ற கூறுகளில் சில விளக்கம் பெறுகின்றன. நீண்ட ஆற்றுப்படைகளில் பெரும்பாலும் விரிவாகக் காணப்படும் வழி வருணனை இவற்றில் முதன்மை பெறவில்லை. பரிசில் பெற்றவன் வறிஞனை வழிப்படுத்துவது மட்டுமன்றி ஓர் இரவலன் பிறிதொருவனையும் உடன் செல அழைத்தலும் இதன்கண் அமைகின்றது.

புறநானூறு, பத்துப்பாட்டு ஆற்றுப்படைகளில் ஆற்று வருணனை இல்லாதது போன்றே பொருநராற்றுப்படையும் வழி வருணனை தராததும் அதன் பழமை பற்றி யமைந்ததோ என எண்ணலாம். பிற ஆற்றுப்படைகளுள் காலத்தால் பிற்பட்டதும் மரபுப் பொருண்மையில் மாறுபட்டதுமான திருமுருகாற்றுப் படையிலும் பல மலை வருணனை இருந்தாலும் வழி வருணனைக்கு இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுபாண், பெரும்பாண், மலைபடுகடாம் ஆகிய மூன்றும் இரவலன் செல்ல வேண்டிய வழியை மிகத் தெளிவாகவே வழங்குகின்றன. புறநானூறு பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகள் 5 அடி முதல் 31 அடி வரை அமையப் பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகள் 245 அடி முதல் (பொருநர்) 583 அடிவரை (மலைபடுகடாம்) பரந்து விரிந்துள்ளன.

சங்கத் தொகை தரும் ஆற்றுப்படைகளுக்கும் பத்துப்பாட்டின் ஆற்றுப்படைகளுக்கும் பின் பதினோராம் திருமுறை மீண்டும் நக்கீரரின் முருகாற்றுப்படையைத் தந்த பின் நீண்ட கால இடைவெளிக்குப் பின்பு பதினான்காம் நூற்றாண்டே ஆற்றுப்படையில் மறுமலர்ச்சி காண்கிறது. கச்சியப்பரின் திருத்தணிகை ஆற்றுப்படையைத் தொடர்ந்து, இரத்தினகவிராயரின் புலவராற்றுப்படை, தொழுவூர் வேலாயுத முதலியாரின்

நெஞ்சராற்றுப்படை என நூற்றாண்டுகளில் இவ்வகை தொடர்கின்றது (ச.வே. சுப்பிரமணியன், முன்சுட்டியது, பக். 307-310). இருபதாம் நூற்றாண்டில் இவ்வகையில் இருபதிற்கும் மேற்பட்ட இலக்கியங்கள் எழுந்தன. அவற்றுள் ஒன்று தான் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் யாத்த மாணாக்கராற்றுப்படை ஆகும். அவ்விலக்கியத்தின் கண் அமைந்துள்ள படைப்பாற்றல் சிறப்பை இனிக் காணலாம்.

இந்நூல் டவுன் ஹைஸ்கூல் என்று வழங்குகிற நாகரிக ஆங்கிலேய வித்தியாசாலைப் புகழ்ச்சி குறித்துப் பாடப்பட்டதாகும்.

## நூற்பெயர்க்காரணம்

"இந்நூலுக்கு மாணாக்கராற்றுப்படை யென்னும் பெய ரெவ்வாற்றானமையுமோ வெனின் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை யியலில் 'தாவினல்லிசை' என்னுஞ் சூத்திரத்துள் 'கூத்தரும் பாணரும், பொருநரும், விறலியு மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்' என்பதன் வழித்தாய் அமையும். இதற்கு விதி மேற்கூறிய சூத்திரத்துள் அடங்குமோ வெனின் அடங்கும். என்னை புலவராற்றுப்படை புத்தேளாற்றுப்படை என்பவற்றிற்கு வேறிலக்கணம் இல்லாதிருந்தும் இதனையே ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலினென்க" என நூலின் தொடக்கத்தில் ஆசிரியர் எழுதிய உரைநடை விளக்கத்தின் மூலம் அறியலாம்.

மாணாக்கராற்றுப்படை யென்பதற்கு, 'கல்வி பயிலக்கருதி அதற்கு வழி காணாது வறுமையா லேக்கமுற்று வருந்திய மாணாக்க னொருவனைக் கல்வி பயின்று மேம்பட்டு அதனால் இராசாங்கத்தாராற் சிறப்புப் பட்டம் பெற்று அதிகாரமும் பெற்றானொருவன் ஆற்றுப்படுத்தியதாகப் பொருள் கூறுக' என நூலுக்குரிய காரண காரியங்களைத் தெளிவு படுத்துகிறார் ஆசிரியர்.

இது மரபு மட்டுமன்றிச் சங்க இலக்கியச் சொற்செறிவும் பொருட்செறிவும், யாப்பின் நடைச்செறிவும் ஒருங்கே அமைய உருவாக்கப் பட்டிருக்கிறது. இவ்வாற்றுப்படை 395 வரிகளால் ஆனது. நேரிசை யாசிரியப்பாவால் அமையப்பெற்றது.

இந்த மாணாக்கராற்றுப்படையில் இடம் பெற்றுள்ள பொருண்மை புதுமை நிறைந்தது. காலத்திற்கும் பொருந்தியது. இளையோர் கல்வி கற்க வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கும்பகோணத்தில் அமைந்த நாகரிக ஆங்கிலேய வித்தியாசாலை என்னும் கல்வி நிலையம் பற்றிப் புகழ்ச்சி மாலையாகப் பாட எண்ணிய ஆசிரியர் அதனை மாணாக்கர் ஆற்றுப்படை என்ற பெயரில் ஒரு சிற்றிலக்கியப் படையலாக வடித்துத் தந்துள்ளார். இவ்வாற்றுப்படையில், நீர்வளத்தாலும், நிலவளத்தாலும் கோயிற் பெருவளத்தாலும், இயற்கை யெழில் வளத்தாலும் சிறப்புற்று ஓங்கி, அருளாளர் பலராலும், பக்தி நெறிக் கவிஞர் பலராலும், பாராட்டிப் பாடப்பெற்ற ஓர் அற்புதத் தலமாக விளங்கும் கும்பகோணத்தின் பெருமை பேசப்படுகிறது.

'பாடல்சால் சிறப்பின் நீடுகும் பேசன்' (53) என்ற வரியின் வாயிலாக இத்தலத்தில் எழுந்தருளியுள்ள கும்பேசரின் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

கும்பகோணம் பற்றிய செய்திகள், இயற்கை வருணனை, பள்ளிக்கூடத்தின் மேம்பாடு, இப்பள்ளியில் பயிற்று வித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களின் தனிச்சிறப்பு, கற்பிக்கப்பட்ட பலவகைக் கலைத்துறைகள், மாணாக்கர் இயல்பு, கல்வி நிலையத்தே காணப்பட்ட ஒழுக்கமுறைமை, கல்வி நிலையத்தைச் சுற்றிக் காணப்பட்ட பண்பார்ந்த விழுமிய சுற்றுச் சூழல் முதலியன இவ்வாற்றுப்படையில் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

## கும்பகோணமும் – சிறப்புச் செய்திகளும்

காவிரி பாயும் அருமைத்தலம். நல்ல நன்செய் நிலப்பகுதியைக் கொண்டது. தேவாரம் பாடிய மூவர் வணங்கிய கும்பேசர் எழுந்தருளி இருக்கும் பெருமைக் குரிய தலம். இதனை,

காவிரி, மரன்பல முரஞ்சிய வான்பெருங் கோட்டிற்
பொருது புனலலைக்குந் திருமலி யரிசி
லிருபே ரியாற்றி னொருசா ருறீஇ (47–50)

எனக் காட்டுகிறார்.

இங்குள்ள ஆலயங்கள், பக்திக் கூடங்கள், மடாலயங்கள் பற்றிய பட்டியல் ஒன்றினைத் தருகிறார் ஆசிரியர். அது வருமாறு:

**கருப்பை யூர்திக் களிற்றிறை தளி (52)**
**பாடல் சால் சிறப்பி னீடு கும்பேசன் (54)**
**நகை முடி நாகேச்சுரன் நற்றளி (56)**
**காரோணப் பெரியோன் கோட்டம் (58)**
**மாவலி யுதவிய வாணன் றொன்னா**
**ளாவலிற் பழிச்சிய வண்ணல் கோட்டம் (59–60)**

வயங்கிய சீர்த்தி மாசினியமமும் (62)
பாழியந் திண்டோட் படுசுடர் காலு
மாழியந் தடக்கை யண்ணல் கோட்டமும் (63-64)

வெள்ளியம் பொற்றை யள்ளிய மொய்ம்பிற்
கள்வன் கடும்பொடு மடியக் கடந்த
வுலவாச் சீர்சால் வொருவன் நிலையமும் (65-67)
பொன்றிகழ் நோக்கத் தவுணர் புடைத்த
வன்றியம் பெயரிய மாயோன் குலமும் (68-69)

திருகு செயற் குன்றத் துருவிய வைவேற்
பெருமகிழ் சிறப்பிற் பெரியோன் கோட்டமும் (70-71)
மரக்காற் கூத்தின் மருவலர் செற்ற
வீரச் செல்வி வியன் பெருங் குலமும் (72-73)

தாருகற் கடந்த சண்டிகை நியமமும் (74)
பொங்கிய விழுச்சீர் சங்கரப் பெயர்க்கொரு
- - - - - - - - - - - - - - - - - - - - - -
உலக ஆசான் ஓங்கிய மடமும் (80, 83)

இவற்றுடன் அந்நகரின் கண் அமைந்த பல தெருக்கள் பற்றியும் கூறுகிறார் ஆசிரியர்.

பெருநூலந்தண் பெரியோர் தெருக்கள், நீயா வாழ்க்கை நிவந்தோர் தெருக்கள்; மன்னரை அடுத்து அரசவையில் பணியாற்றும் பெரு அதிகாரிகள் உறையும் தெரு (மன்னர் பின்னோர் வளங்கெழு மறுகு) புகழ் பெற்ற பட்டு நூல் நெய்யும் பண்பாளர் தெரு, முட்டாச் சிறப்பின் பட்டு நூல் நூற்குந் தட்டறு செல்வச் செட்டியார் தெரு, பொன்னாபரணம் செய்யும் பொற் பணியாளர் உறையும் தெரு, மற்றும் வான்பெரு சிறப்பிற் கல்லூரிகளும் நிறைந்த நகரம் கும்பகோணம் ஆகும்,

மேலும் மருத்துவச்சாலைகளும், உயர்ந்த உணவை அறவோர்க்கு அளிக்கும் அறச்சாலைகளும் நிறைந்த நகரம் என்பதை

நோய்மருங் கொரீஇ மாமருத்துதவுபு
திறப்படப் புரக்கு மறப்பூஞ்சாலையுங்
குய்யுந் துவையுங் கொழுஞ்சுவைக் கருணையு
நெய்யுந் துதைஇ நிரப்பா வல்சி
யறவோர்க்களிக்கும் அறச்சாலைகளும்
புரைபடு மாண்பிற் பலவுந் தொகைஇப்

புத்தேளுலகும் புரை கொளச் சிவணி
முழுது காண்பறியாச் செழுநீர் குடந்தை

என்ற வரிகள் மூலம் விளக்கிச் செல்வதைக் காணலாம்.

## இயற்கை வருணனை

நீர்வளம் மிக்க குடந்தையில் இயற்கை வளம் விஞ்சி நிற்பதில் விந்தையில்லைதான். ஓங்கிய தெங்கு, அழகிய கமுகு எனப் பயன்தருமரங்கள் ஒரு பக்கம். பூந்தோட்டங்களில் பூத்துக் குலுங்கும் நறுமண மலர்க் கூட்டங்கள் ஒரு பக்கம். தீங்கனிகள் ஈந்துவக்கும் நற்கனி மரங்கள் ஒரு புறம். இயற்கை வண்ணக் கோலமாய்த் தலை சாய்த்தாடும் செவ்வந்தி, செண்பகம், முல்லை, மல்லி எனப் பூ வகைச் செடிகள் ஒரு புறம் எனச் சிறப்புறும். இதனை ஆசிரியர் கூறும் போது சங்க நூலின் சாயலும், திருவிளையாடற் புராணம் போன்ற பக்திப் பனுவல்கள் சுட்டும் வருணனைச் சாயலும் அமைந்து இன்பம் விளைவிப்பதைக் காணமுடிகிறது.

மானுறப் பழுநிய சேணுயர் தெங்குந்
தேமலர் இலஞ்சி திருமா வில்வமொடு
பைஞ்சுளவு முட்புறத் திரள்காய்ப் பாகலுங்
கருஞ்சினைப் புன்னையு நறுந்தண் பாதிரி
செருவிளை யிதழி தீங்கனி நெல்லியொடு
செஞ்சுடர் வீயில மரனுஞ் சிவணிக்
காண்பின் வளைஇக் கவின்றலை துமிய
நோக்கங் கவர்க்கு நொச்சி யகவயின்
மன்றல் சிதர்ந்தெழு மௌவல் வெண்பூ
நரந்தங் கமழும் நறும்பூஞ் சேட
னானங் கமழ்வீ நளிகண வீர
மேனை நந்தியெழிறகு சண்பகந்
தளவஞ் செம்ம றதர்செவ் வந்தி
செறிந்து நறை கமழுந் தெண்பூம் பன்னியும்
பிறவுங் கெழீஇ முறையிற் சூழ்வுற (141–155)

இவ்வாறாக இயற்கையின் எழில் கொஞ்சும் வருணனை பேசப்படுகிறது. இனி, இவ்வாற்றுப்படையில் ஆற்றுப்படை எனும் பொருண்மைத் தொடர்புடைய செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

## கல்வி தேடும் மாணாக்கன் தன்மை

ஆற்றுப்படுத்தப்படுபவன் நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதைத் தொடக்கச் சித்திரமாக ஆசிரியர் சித்திரித்துக் காட்டும்

போது 'கேட்டிசின் வாழி வறியோய் கேட்டிசின்' - 25 என்ற வரியின் மூலம் வறுமையோடு தன்னை அணுகியவனை ஆற்றுப்படுத்துபவன் மூலம் வந்தவன் நிலையை அறியச் செய்கிறார் ஆசிரியர். அவனது வறுமை நிலை எத்தன்மையது என்றால் கெழுதகை யற்றது எனக் கூறுகிறார் ஆசிரியர்.

**பழுதுகழி வாழ்க்கையிற் கெழுதகை யில்லா**
**உள்ளங் கூம்ப வெள்ளென் பொளிறும்**
**பாங்கிரு விலாவிற் பைகண் இருங்கி**
**மறிபுறத் தோணியி னொரு வெரிங்கோடித்**
**தொகுநரம் புலறிய சூம்பற்றோள் சாம்பிக்**
**கட்கடை யுலங் குணப்பீளை காலாக்**
**கெடலணங் குற்றாங் குடல வாவித்துச்**
**செவ்வணந் தோய்த்தன தேய்செங் குடுமியொடு**

மாணவனின் தோற்றம், வறுமையின் காரணமாகக் கண்கள் இடுங்கி, விலா எலும்புகள் கூடி, திட்பமாக இருக்க வேண்டிய தோள்கள் சூம்பி உடற் சோர்வுற்றுக் காணப்படுவதாக ஆசிரியர் வரைகிறார்.

கல்வி தேடி அலையும் மாணவனை ஆற்றுப்படுத்தும் போது பள்ளி அமைந்துள்ள இடத்தின் சிறப்பு அப்பள்ளி ஆசிரியர்தம் மாண்பு, மாணவர்தம் சிறப்பு, கற்றுத்தரும் கலைகள் முதலியன தெளிவுறும்படி வருணிப்பதை இனிக் காணலாம்.

### பள்ளி

**பழம்பதி நாப்பணமுந்து பட்டிரீஇக்**
**கன்னி யாரெயில் கிடந்து கவினிய**
**விற்கை நம்பி வியன்குல குணாஅ**
**தோங்கிய சிறப்பி னொல்லா கடிந்த**
**வாங்கிலோ வாசானரும் பெயரானுறீஇ'**

புனல் வளம் நிறைந்ததும், சாரங்கபாணி என்ற திருப்பெயரில் கையில் வெண்சங்கோடு எழுந்தருளியிருக்கும் சிறப்பினையுடைய திருமால் அருளாட்சி செய்யும் இக்குடந்தை எனும் கும்பகோணத்தில் ஆங்கில ஆசான் ஒருவரால் உருவாக்கப்பட்ட இப்பள்ளியின் பெருமை அளப்பரியது எனப் பாராட்டுகிறார் ஆசிரியர்.

### ஆசிரியர்கள் மாண்பு

மாணவர்களின் மடமை எனும் இருளைப் போக்கும் ஆசிரியர்கள் 'சிதைவில் காட்சியர்'. சீரிய பயிற்றுஞ் சீர்த்தியாசிரியர். சுடர் நறுவீயொடு தூக்கோலனையர். வேத்து நெறி மென்மொழி

யாத்த நுவற்சியர். புலமைச் சொற்பயில் சான்றோர். கட்டுரை வன்மை பெட்டாங்கு கிளக்கும் வாய்மை குன்றாத் தன்மையர். சுட்டெரிக்கும் வெயிலின் வெம்மை உடலிற் படாமல் காக்கும் குடையைப் போல அறியாமை என்னும் வெம்மை மாணவனைச் சாராதவாறு காக்கும் தன்மையர் என விதந்து பேசுகிறார் ஆசிரியர்.

## மாணவர் பண்பு

இப்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்தம் ஒழுக்கம் அவர்கள் கற்கும் கல்வியின் தன்மை, கல்வி கற்பதில் மாணவர்க்கு உள்ள வேட்கை, கல்வியால் மாணவர்கள் பெரும் பயன், நற்கல்வியை நல்க ஆசிரியர்கள் கையாளும் முறைகள், பல்வேறு அகவையில் பள்ளியிற் பயிலும் மாணாக்கர் ஆசிரியர் இடத்துக் காட்டும் பக்தி முதலிய செய்திகள் இந்நூலில் சிறப்புற அமைந்துள்ளதைக் காணலாம்.

இப்பள்ளியில் பல்வகை வயதையுடைய மாணவர் கல்வி கற்று வந்தனர் என்பதை,

**வாசிலை யாட்டை யகவையர் முதலாப்**
**பல்வகைச் சிறாஅ ரெல்லையில் மாட்சியால் (206–207)**

என்ற வரிகள் வாயிலாக விளம்புவதைக் காணலாம். இம்மாணவர்கள் இப்பள்ளிக்கு வரக் காரணம்,

**பீடுகெழு சீர்த்தி நாடுபு கவற்சியிற்**
**புரைதீர் பல்கலை கற்பப் போந்தார் (220–221)**

எனச் சீர்த்தியும் கீர்த்தியும் நல்கும் புரைதீர் பலகலைகளைக் கற்றுத் தேருவதற்காகவே எனக் கூறுகிறார் ஆசிரியர். மேலும்

**தமரோ ரன்ன வமரா நோக்க மோடு**
**அமிழ்து பயின் றன்ன வஞ்சொலளைஇ**
**யார்வ மீக்கொள வேர்புளத் திகவா**
**ரிறைவற் பேணி யிசைப்பன வுளநுனித்**
**தீதல் செய்ம்மார் காதலிற் றுணை வொறீஇ**
**யுகந்து மீட்டு வினாவவு மகிழ்ந்து வெகுள்வின்றி**
**யூற்றந் துதைஇக் கேட்டறி யளவை (230–236)**

என ஆசிரியர்கள் நடாத்தும் பாடத்தினை அவர்கள் ஆவலோடு கேட்கும் பாங்கினைக் காட்டுகின்றார்.

**வெளவிய நிம்பிரி செவ்வனம் போக்கி**
**அஃகலில் சால்பொடு வெஃகி நூல் பயிற்றப்**
**பாவையென்ன வோவலின் றிரீஇ** *(242–244)*

என்பதன் வாயிலாக மாணவர்தம் அழுக்காற்றை அகற்றி அறிவுக்கண்ணைத் திறக்கும் ஆசிரியர்கள் முன்பு மாணவர்கள் அழகிய பதுமைகள் போல் அமர்ந்து பாடங் கேட்பதாக வருணிக்கிறார் ஆசிரியர்.

மேலும் கடுமையான தாகவிடாய் கொண்டவன், நீர் கேட்டுப் பருகுவது போல அறிவுத்தவிப்புக் கொண்ட இம்மாணவர்கள் ஆசிரியரை அணுகித் தங்கள் அறியாமையைப் போக்கிக் கொள்வதாகக் கூறுகிறார்.

இப்பள்ளியிற் பயிலும் மாணவர் அவ்வப் பருவத்துப் பாடத்தைத் திட்ட மிட்ட காலத்தில் படித்து முடித்து, மேல்உயர் கல்வியுஞ் சாலப்பயிலும் தன்மையராய் விளங்கிப் புரைதீர் பல்கலை கற்போராக விளங்கினர் என்பதை,

**கல்வித்துறையின் கடைமுறை போகி**
**யவ்வவ் வீற்றியாண் டெவ்வமில் கேள்வி**
**குகப்பக் கூறியிகத்த லொரீஇ**
**மேலுயர் கல்வியுஞ் சாலப்பயின்று** *(296–299)*

என வருணிப்பதைக் காணலாம். இத்தகைய சிறப்புறு பள்ளிக்கு ஏழை மாணவனை ஆற்றுப்படுத்தும் வகையில் அமையும் இந்நூல் பள்ளியில் கல்வி கற்று உயர் பதவி பெற்றவர் பலர் உண்டு; புகழ் பெற்றவர் பலருண்டு; அவர்களில் நீயும் ஒருவன் ஆக வேண்டும் என ஆசிரியர் சிறப்பித்துக் கூறுவதைக் காணமுடிகிறது.

## நூலின் நடை

அரிய கடுமையான சொற்களைக் கொண்டு ஆசிரியர் தன் நுண்மாண் நுழைபுலம்வெளிப்பட யாத்த நூலே இம்மாணாக் கராற்றுப்படை அகராதி இன்றிப் பொருள் காணுதல் என்பது அரிய செயல். சங்கம் தரும் ஆற்றுப்படையைக் கூடக் கற்று விடலாம். இந்நூலைப் புரிந்து கொள்வது என்பது அத்தனைக் கடுமையானது. இசைநயம் கருதி, சொற்கள் நயம்பட அளபெடைகள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அரூஉ(2), குழீஇ (19), வசைஇ (20), இரீஇ (27), செரீஇ (27) ததைஇ (28), உறீஇ (50) தழீஇய (81) நிறீஇ (86) தெரீஇ (96) தொழூஉம் (97) தொகைஇ (109) விரீஇ (158) நகூஉ (159) செரீஇ (175) நடாஅ (201)

சிறாஅ (207) தெழீஇ (214) தொகைஇ (218) அளைஇ (231) வெளீஇ (234) கடைஇ (239) றிரீஇ (244) கெழீஇ (249) கடாஅய் (250) சொலூஉ (265) படூஉ (272) கொளீஇ (282) லொரீஇ (298) வொரீஇ (301) வளைஇ (303) நிலைஇய (310) தரீஇ (320) நிலைஇ (333) எனச் சொல்லிசை அளபெடையும், இன்னிசை அளபெடையும் கொண்டு இசை நயம் சேர்த்துள்ள ஆசிரியரின் படைப்புத்திறன் போற்றுதற்குரியது.

இந்நூலின் கண் அமைந்துள்ள பல அரிய சொற்கள் வருமாறு: வல்சி (2) வேந்துமொழி (5) பழுதுகழி வாழ்க்கை (10) கெழுதகை (10) சூம்பற்றோள் (14) சிதாரினுங் (18) கேட்டிசின் (25) செண்ணத் தொண்பூம்பாண்டி (26) இதழ் (28) அவுளி (28) நவை (36) வல்லாங்கு (37) சென்மதி (38) பொறிவரி (40) கலாவி (43) பொதும்பர் (44) விழுத்தகு சிறப்பு (46) மோடுபடு (54) நாஞ்சில் சூழ் கேடினியம் (54) வர விறை தொழூஉ (56) வெள்ளியம் பொற்றை யள்ளிய மொய்ம்பு (65) கள்வன் கடும் பொடு மடிய (66) திருகு செய்குன்றம் (70) ஓரையிற் றுதைஇய சீர்கெழு திங்கள் (85) பழமைப்பார்ப்பான் (91) பொலம்படு தாமரை பூத்த பொய்கை (92) நாறுநீ ரிலஞ்சி (95) முட்டாச் சிறப்பு (103) நியமக் கம்பலை (111) குய்யுந் துவையுங் (122) மறச்சாலை (124) புரைபடு மாண்பு (125) ஞாங்கர் (135) சிதைவில் காட்சியர் (139) மாணுறப் பழுநிய சேணுயர் தெங்கு (141) பைஞ்சுளவு (143) மௌவல் (149) தெண்பூம்பன்னியும் (154) தூதை (157) திருவிழை மேனிலை (162) தோய்தரச் சிவணிய தூவெள்ளறுவை (183) வண்மொழிப் பயிற்சியர் (199) சால்பி னிரீஇய (205) பைதல் சாலார் நொய்தமை கிடுகுடை (225) மடியெழு துற்றிற் கடுவை யுணா (245) துழனி (261) மோவலில் கைவினை யோவத் தியற்கை (268) கழும முடித்த குடுமியர் விழுமிய (290) வவ்வழி நிலைஇக் கவ்வை கடிந்து (323)

## முடிவுரை

இவ்வாற்றுப்படை நூலினை அன்றை மரபு முறை குன்றாமல், இலக்கணம் மாறாமல் ஆசிரியர் அமைத்துள்ளதைக் கண்டோம். அதே போன்று இயன்மொழி வாழ்த்து ஒரு வரலாற்றுத் தகவற் பெட்டகமாக விளங்கியதையும் கண்டோம். மொத்தத்தில் நெடுகப் பாய்ந்தோடும் நீண்ட பேராறு போலப் பின்னத்தூராரின் கவித்திறம் இவ்வாற்றுப்படையில் பொங்கித் ததும்பித் தங்குதடையின்றி விரைந்து வீழும் கண்கவர் அருவியின் காட்சியைப் போல இயற்கைக் காட்சிகளை இன்புறக் காட்டி ஏற்றமிகு பெருநடை கொண்டு இழுமென் இசையோடு கூடி இனிதே செல்லும் ஒப்பற்ற சொல்லோவியம் கொண்ட இலக்கியமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

பின்னத்தூர் இடும்பவனப் புராணம், இறையனாராற்றுப்படை, நீலகண்டேச்சரக்கோவை, சிவபுராணம் எனும் ஞானசங்கிதை, சிவ கீதை, நரிவிருத்தம், மாணாக்கராற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, தென்றில்லையுலா, தென்றில்லைக் கலம்பகம், பழையது விடுதூது, மருதப்பாட்டு, செருப்பு விடு தூது, தமிழ்நாயக மாலை, களர்ப்பாழ்ப்புராணம், இராமாயண அகவல், சுரதைக்கோவை, வீரகாவியம் எனப் பல்வேறு நூல்களைப் படைத்திருந்தாலும் இயன்மொழி வாழ்த்து, மாணாக்கராற்றுப்படை மற்றும் களர்ப்பாழ்ப்புராணம் ஆகிய மூன்று நூல்களே இன்று கிடைக்கப்பெறுவனவாகும். தென்றில்லை உலாவும், கலம்பகமும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. சுரதைக் கோவை, வீரகாவியம் இவ்விரண்டும் ஆசிரியர் படைப்பிலேயே முற்றுப் பெறவில்லை.

மாணாக்கராற்றுப்படை மற்றும் இயன்மொழி வாழ்த்து ஆகிய இவ்விருநூல்களும் நேரிசை ஆசிரியப்பாவால் அமையப் பெற்றவை. இவை சங்க இலக்கியத்திற் காணப்படும் குறிப்பாக ஆற்றுப்படை நூல்களில் அமைந்துள்ள நுண்ணிய இன்னிசையின் பெற்றி கொண்டு விளங்குவதைக் காணலாம். புலவர் ஒருவருக்கு அமைந்த இலக்கியப் படைப்பாற்றலை நன்கு வெளிப்படுத்துவது வியக்கத்தகு முறையில் அவர் சொற்களைக் கையாளும் வல்லமையே ஆகும். மிகப்பெரிய கவிஞர்களுக்கும் காவியப் படைப்பாளர்களுக்கும் அமைந்த ஒப்பில்லா இப் பேரியல்பைப் பின்னத்தூரார் படைப்புகளிலும் காணமுடிகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

தரவு நூல்

1 இயன்மொழி வாழ்த்து (மூலம்)

2. மாணாக்கராற்றுப்படை, பாலசுப்பிரமணிய பிள்ளை (பதி.), லார்டு ரிப்பன் அச்சாபீஸ், கும்பகோணம், 1900.

## துணை நூல்கள்

சுப்பிரமணியன் ச.வே. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், தமிழ்ப் பதிப்பகம், சென்னை 1984.

மாணிக்கம், வ.சுப., இலக்கியச்சாறு, மணிவாசகர் பதிப்பகம், 1987.

# உரைத்திறன்

லொ.ஆ. உமாமஹேஸ்வரி

> உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்தகாலமும் உண்டு
> உதாரணங்காட்டடல் வேண்டாமையை உணர்ந்து உரை
> நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள்

எனத் தொல்காப்பிய உரையில் பேராசிரியர் கூறுவதினின்றும் முற்காலத்தில் உரையும் விளக்கமும் இல்லாத மூலநூல்களைப் பயன்பாட்டில் கொண்டிருந்தனர் என்பதை உய்த்துணரலாம் (உரையாசிரியர், ப. 62). பிற்காலத்தே மூலநூலிற்கு உரை வேண்டப்பட்ட பொழுது உரை எழுதிய இலக்கிய, இலக்கண உரையாசிரியர்கள் தாம் எழுதப்புகுந்த மூலநூலில் மட்டுமன்றிப் பிற இலக்கிய இலக்கண நூல்களிலும் நன்கு பயிற்சி பெற்றிருந்தனர் என்பதை அவர்தம் உரையினின்றும் அறிய முடிகிறது. இவ்வாறின்றேல், மூலநூலை நன்கு தெளிவுபடுத்துவது கடினம். நற்றிணைக்கு உரை இயற்றிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் பல்வேறு இலக்கியத்திலும், இல்க்கணப்புலமையிலும் தேர்ந்தவர் என்பது அவர்தம் உரையில் காணக்கிடைக்கின்றது. உரைவகை, உரையின் இயல்பு இவற்றுடன் நாராயணசாமி ஐயரின். உரைத்திறனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## உரைவகை

தொல்காப்பியர் மரபியலில் இருவகை உரையினைச் சுட்டுகிறார். அவை காண்டிகை, விருத்தியுரை என்பன.

> பழிப்புஇல் சூத்திரம் பட்ட பண்பின்
> கரப்பு இன்றி முடிவது காண்டிகை ஆகும் (தொல்.மரபு. 103)

> விட்டு அகல்வு இன்றி விரிவொடு பொருந்தி
> சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
> ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
> மேவாங்கு அமைந்த மெய்ந் நெறித்ததுவே
>
> (தொல்:மரபு. 104)

சிறிதும் குற்றம் இல்லாத சூத்திரம் கூறிய முறைமையுடன் சூத்திரத்தின் பொருளை மறைப்பு இல்லாமல் விளக்கிக்கூறுவது

'காண்டிகை' உரையாம். சூத்திரத்தினுள் பொருந்தும் பொருளை விட்டு நீங்காத நிலையுடன், குறித்த சூத்திரம் முடித்தற்காக ஏது நெறியாலும், எடுத்துக்காட்டினாலும் ஏற்றவாறு அமைகின்ற மெய்ந்நெறி உடையது 'காண்டிகை' ஆகும் (தொல்காப்பியம் எளிய உரை, ப. 580).

**சூத்திரத்துட் பொருள் அன்றியும், யாப்புற**
**இன்றியமையாது இயைபவை எல்லாம்**
**ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே** (தொல்.மரபு. 105)

சூத்திரத்தின் உட்பொருள் அல்லாமலும் அந்நூலிற்கு இன்றியமையாத எல்லாப் பொருளையும் கொணர்ந்து பொருந்த உரைப்பது விருத்தி உரையாகும்.

## உரையின் இயல்பு

**மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்,**
**தன் நூலானும் முடிந்த நூலானும்**
**ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கி,**
**தெற்றென ஒருபொருள் ஒற்றுமைக் கொளீஇ**
**துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்**

மறுதலையாக வரும் வினாவும் விடையும் உடையதாகித் தன் நூலாலும், வேறு நூலாலும் ஐயம், மருட்கை ஆகியவற்றை நீக்கித் தெளிவாக ஒரு பொருளை ஒற்றுமைப்படுத்தி, இதுவே துணிவு என்று கூறி நிற்றல் உரையின் இயல்பாகும் (மேலது, ப. 581).

அவ்வகையில் நற்றிணை உரையாசிரியர் தாம் கூறவந்த பொருள் அல்லாமல், அந்நூலிற்கு இன்றியமையாத எல்லாப் பொருளையும் கொணர்ந்து உரைவகுத்துள்ளார்.

## நாராயணசாமி ஐயரின் உரைத்திறன்

தமிழில் முதல் உரைநூலான இறையனார் அகப்பொருள் உரை நான்கு வகை உரையினைக் குறிப்பிடுகின்றது. அவையாவன: கருத்துரைத்தல், கண்ணழித்துரைத்தல், பொழிப்புத்திரட்டல், அகலங்கூறல் என்பன. கருத்துரைத்தல்: சூத்திரத்தின் உட்கோள் உரைத்தல், கண்ணழித்தல்: சூத்திரத்துள் சொல்தோறும் பொருள் உரைத்தல், பொழிப்புத்திரட்டல்: சூத்திரத்தின் பொருளை தொகுத்துரைத்தல், அகலங்கூறல்: சூத்திரப்பொருளை தூய்மை செய்வதற்குக் கடாவும், விடையும் உள்ளுறுத்து விரித்துரைத்தல் (அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ப. 216).

இவற்றுள் கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல் எனும் மூன்று வகை உரையினைப் பின்பற்றும் ஐயர், நன்னூலார் கூறும் பாடஞ்சொல்லல், உதாரணங்காட்டல், சொல் பொருள் உரைத்தல் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு உரையினை எழுதிச் செல்லும் பாங்கு குறிப்பிடத்தக்கது.

## ஐயரின் உரை அமைப்புமுறை

நாராயணசாமி ஐயர் ஒவ்வொரு செய்யுளுக்கும் உரை எழுதுங்கால் முதலில் செய்யுளில் பயிலும் திணை, துறை, துறை விளக்கம், இலக்கண விளக்கம் இவற்றைக் கூறிப் பின் செய்யுளை எடுத்துக்காட்டி, அதன்பின் செய்யுளின் சொற்பொருளினை விளக்குகின்றார். ஒவ்வொரு வரியினையும் தனித்தனியாக எழுதி அதற்குரிய பொருளினைத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றார், இச்சொற்பொருளுக்குப்பின் விளக்கவுரை அமைகின்றது. இதில் அரிய சொற்களுக்கான பொருள் தனியே விளக்கப்படுகின்றது. சில சொற்களுக்கு விரிவான விளக்கத்தினையும் உரையாசிரியர் அளிக்கிறார். விளக்கவுரையில் மெய்ப்பாடு, பயன் ஆகிய அகப்பொருள் கூறுகளை எடுத்துக்காட்டுகின்றார் ஆசிரியர். தனது கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையிலும், தாம் கூறவந்த கருத்தினை நன்கு தெளிவுபடுத்தும் வகையிலும் ஆங்காங்கே இலக்கண, இலக்கிய மேற்கோளினைக் கையாள்கின்றார். செய்யுளில் பயிலும் 'பாட பேதத்தினை'யும் உரையாசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். செய்யுளுக்குச் சொற்பொருள் கூறும் உரையாசிரியர், செய்யுளின் வரிகளை அதன்படியே கூறாமல், படிக்கும் வாசகர் செய்யுளின் பொருளினை நன்கறியும் வண்ணம், செய்யுளின் வரிகளைக் கொண்டு கூட்டிப் பொருள் அமைத்துத் தரும் பாங்கு குறிப்பிடத்தக்கது. உரையாசிரியருக்கு மூலநூலில் உள்ள முழுமையான பயிற்சி இதன் மூலம் தெளிவாகிறது.

இனி ஐயரின் உரைத்திறனை, அவர் காட்டும் 'இலக்கண, இலக்கிய மேற்கோளினின்றும், உரைநயத்தினின்றும் விரிவாகக் காண்போம்.

## இலக்கணப் புலமை

இப்பகுதியில் திணை, துறை, துறைவிளக்கம், இலக்கண விளக்கம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டுகள், இலக்கணக் குறிப்பு, உவமை, அணி, இலக்கண மேற்கோள்கள், பிற இலக்கண உரையாசிரியர்களின் மேற்கோள்கள், இறைச்சி, உள்ளுறை, மெய்ப்பாடு, பயன் போன்ற அகப்பொருள் கூறுகள் சுட்டியுள்ளமை ஆகியவை இடம் பெறுகின்றன.

## திணை, துறை

உரையின் முதல் பகுதியில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் முதலான திணைகளுள் செய்யுளில் பயிலும் திணை எதுவெனச் சுட்டப்படுகின்றது. அதன்பின் துறை அமைகின்றது. காட்டாக,

1) திணை - குறிஞ்சி
துறை - இது, பிரிவுணர்த்திய, தோழிக்குத் தலைவி சொல்லியது (நற். 1)

2) திணை - நெய்தல்
துறை - இது தோழி தலைமகட்கு வரைவு மலிந்துரைத்தது (நற். 91)

## துறை விளக்கம்

மேற்குறித்த திணை, துறை இரண்டும் விளக்கம் பெறும் பகுதி.

(து-ம்) தலைவன் பிரியக் கருதியதறிந்த தோழி தலைவியிடம் கூறலும், தலைவி அதற்கு இன்றியமையாத என்னை வருந்தும்படி விட்டுப் பிரிகின்ற அன்னதொரு குணக்குறைபாடு இலரெனத் தலைவனைப் புகழ்ந்து கூறாநிற்பது;

## இலக்கண விளக்கம்

**அவனறிவாற்ற அறியுமாகலின்**
**ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்**
**உரிமை கொடுத்த கிழவோன் பாங்கிற்**
**பெருமையிற் றிரியா அன்பின் கண்ணும்** **(தொல். கற். 9)**

என வரும் விதியின் கண் 'ஏற்றற் கண்ணும்' என்பதன் கண் அமைத்துக் கொள்க.

2) (து. ம்) என்பது, வரை பொருட்பிரிந்த தலைமகன் பகற்பொழுதில் வெளிப்படையாக வருதலானே, வரையக்கருதினன் போலுமென்றுணர்ந்த தோழி, தலைவியை நோக்கிச் சேர்ப்பன் பகற்காலத்திலே பலருங்காண இங்கு வருதலை நீயறிந்தனையன்றோ வெனக் குறிப்பால் வரைவு மலிதலை மகிழ்ந்து கூறா நிற்பது.

(இ. ம்) இதனை 'ஆங்கு அதன் தன்மையின் வன்புறை யுளப்பட' என்பதன் கண் (தொல். கள. 23) அமைத்துக் கொள்க.

சில பாடல்களுக்கு (1) 'இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் யாரையும் அறியே னென்றாற்குத் தலைவி சொல்லியது (நற்: 20) (2) வாயிலாகப் புக்க தோழி தலைவிக்குச் சொல்லியதூஉமாம். உரை இரண்டற்கும் ஒக்கும், என இரண்டு துறை கூறி, இரண்டிற்குமான துறை விளக்கத்தையும் அளிப்பது சுட்டத்தக்கது.

## இலக்கணக் குறிப்பு

இரு பெயரொட்டு (5, 80, 118, 274, 288) ஏதுப்பொருட்டில் வந்தப் பெயரெச்சம் (42), உருபு மயக்கம் (44, 67, 120), பண்பாகு பெயர் (57, 82), விரித்தல் விகாரம் (55), பன்மை ஒருமை மயக்கம் (56), சாரியை (63, 77, 84, 118, 315), எதிர்மறை வியங்கோள் (64), கழிவுப்பொருள், உடன்பாட்டெச்சம் (69), முதற் குறிப்பெச்சம் (73, 74, 121, 131), சொல்லெச்சம் (137), இடைச்சொற்கள் (393), உவமையாகுபெயர் (390), முற்றெச்சம் (372), வினைத்தொகை (352), அன்மொழித்தொகை (342), உம்மை இழிவுச் சிறப்பு (319), உரிச்சொல் ஏகாரம் பிரிநிலை (219), வினைமுற்று, அசைநிலை (206, 117, 356), காலவழுவமைதி என மிக நுணுக்கமாக, இலக்கணக்குறிப்புச் சுட்டியுள்ளமை ஆசிரியரின் இலக்கணப் புலமையைக் காட்டுவதாக அமைகின்றது.

## உவமம்

நகையுவமம் (30), பண்புவமம் (28, 94, 97), சிறப்பு நிலைக்களமாகச் சினையொடு சினைவந்த பயனுவமம், கிழக்கிடு பொருளே நிலைக்களனாக முதலுஞ் சினையும் மயங்கிவந்த வினையுவமம் (216) என உவமத்தின் பல்வேறு வகைகளை ஆசிரியர் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார்.

## அணி

செய்யுளில் இடம் பெறும் அணியினையும் ஆங்காங்கே ஆசிரியர் விளக்கிச் செல்கிறார். (எ.டு. பிறிதுமொழிதலணி: 72, 266)

## இலக்கண மேற்கோள்கள்

**அழுந்துபடல் வீழ்ந்த பெருந்தண் குன்றத்து (நற். 2)**

அழுந்து படல் (தொல். சொல். 403) "அந்நாற் சொல்லும்" என்பதன்கட் கிடந்த "நாட்டல் வலிய" என்பதனால் குறுக்கல் விரித்தலாகிய இருவகை விகாரமுங் கொள்க.

நெடுந்தேர் பாகனியக்கச்
செவீஇய சேறியாயின் இவளே (நற் 19: 6-7)

எனும் வரிகளுக்கு,

தேரும் யானையும் குதிரையும் பிறவும்,
ஊர்ந்தனரியங்கலு முரியரென்ப (தொல். பொரு. 212)

எனும் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாவினை மேற்கோள் காட்டுகிறார்.

தான் அவள் என்னும் வேற்றுமையிலளாதலின் (நற். 28) அங்ஙனங் கூறுதற்கு "ஒன்றித் தோன்றுந் தோழி மேன" (தொ. பொ. 42) எனவும், தலைவியின் முன்னிலையில் தலைவனது கொடுந்தொழிலைக் கூறுதல் வாயில்கட்கில்லையாயினும், புலந்த தலைவியை அவன் கூடுதற்கு மருந்தாயமையப் பெறுதலில் தோழி கூற்றமைந்த தென்க; (தொ. பொ.199); தலைமகன் சிறைப்புறத்தானாகக் கூற்றமைந்ததற்கு விதி (தொல். பொ. 179) (நற். 50) எனவும்,

நத்துறந்தோர் - நம்மைத்துறந்தோர் (நற். 64) இரண்டன் தொகை. நம் துறந்தோர் என்பது (தொ. எழு. 157) சூத்திரத்தில் அன்ன பிறவு மென்றதனால் வலிந்து நின்றது எனவும்,

"தம்மோன் கொடுமை நம்வயின் ஒற்றி" (நற் : 88-6)

ஏற்றல் - நினைதல், 'ஏற்றம் நினைவுந் துணிவு மாகும்' (தொல். சொல். 337) என்பதனால் அறியலாம் எனவும், தலைவி கூற்றிற்கு (நற். 104), "போக்கும் வரைவு மனைவிகட்டோன்றும்" (தொல். பொ. 225) எனும் நூற்பாவினையும், நப்புலந்து எனும் சொல்லிற்குப் பொருள் கூறுகையில் (நற். 120) நம்மைப்புலந்து: இரண்டன் தொகை: நம்புலந் தெனற்பாலது. 'அன்னபிறவும்' (தொல். எழுத்து. 157) என்றதனாலும் மெல்லெழுத்துப் பெறுதற்குரிய விரவுப்பெயர் வல்லொற்றுப் பெற்று நின்றது எனவும்,

அலர் சுமந்து ஒழிகவிவ் அழுங்கல் ஊரே (நற். 150)

"அலரிற் தோன்றுங் காமத்திற் சிறப்பே" (தொல். பொ. 193) என்றபடி களவிடை யலராலே காமஞ்சிறக்குமாயினும் அன்னை அலைத்தலானஞ்சி உடன்போகப்படுதலின் ஊர் அலர் சுமந்தொழிக வென்றதாம் எனவும், பாடல் 164க்குப் பொருள் கூறுகையில், கூறுவோர் தோழியெனவும், கேட்போர் தலைவியெனவுங் கொள்ள வைத்தலின் "இவ்விடத் திம்மொழி யிவரிவர்க்குரியரென், றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்" (தொல். பொ. 520) என்றபடி இது முன்னமென்னும் உறுப்புப்பெற்று வந்ததாயிற்று எனவும்,

இடூஉ ஊங்கண் இனிய படூஉம் (நற். 266–1)

எனும் செய்யுள் வரிக்கு "எருவும் செருவும்" (தொல். எழு. 240) என்ற சூத்திரத்துத் 'தம்மொற்று மிகூஉம்' என உடம்பொடு புணர்த்துக் கூறலின் ஈண்டு 'இடூ, படூ' என உகாரம் நீண்டு 'குற்றெழுத்தும்பரும்" (தொல். எழு. 247) என்ற சூத்திரத்து 'நிற்றல் வேண்டும் உகரக் கிளவி' என்றபடி உகரம் பெற்று இடூஉ படூஉ என்றாயினமை அறிக எனவும் விளக்கம் தருகின்றார்.

## பிற இலக்கண உரையாசிரியர்களின் மேற்கோள்கள்

தம்கூற்றிற்கு மாறாகப் பிற உரையாசிரியர் மாறுபடும் பொழுது அதனையும் எடுத்துரைக்கும் பாங்கு குறிப்பிடத்தக்கது. சான்றாக, 1, 2, 3, 4, 8, 9, 13, 19, 37, 147 முதலான பாடல்களின் 'துறை'களுக்கு நச்சினார்க்கினியரின் விளக்கத்தைத் தருவதைக் காட்டலாம். பேராசிரியரின் (28) விளக்கத்தைச் சில இடங்களிலும் எடுத்தாண்டுள்ளார்.

## மெய்ப்பாடு, பயன்

நகையே, அழுகை, இளிவரல், மருட்கை
அச்சம், பெருமிதம், வெகுளி, உவமை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப (தொல். மெய். 3)

என்பதற்கேற்ப, ஒவ்வொரு செய்யுளிற்கும் உரிய மெய்ப் பாட்டினையும், ஆற்றாமையுணர்தல் (39), தலைவியை ஆற்றுவித்தல் (40) வரைவு கடாதல் (62) எனச் செய்யுளின் பயனையும் விளக்குகின்றார்.

## இறைச்சி, உள்ளுறை

"இறைச்சி தானே உரிப்புறத் ததுவே" (தொல். பொரு. 1171)

இறைச்சிப் பொருளாவது, கூற வேண்டிய உரிப்பொருளுக்குப் புறத்ததாகக் கருப்பொருளுக்கு அடைமொழி வடிவில் வந்து தங்கிப் பயன்படுத்துவது (தொல்காப்பியம் எளிய உரை, ப. 451).

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபின் கூறும் காலை
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே
(தொல்.பொரு. 1240)

'உவமம் வேறு; உவமிக்கப்படும் பொருள் வேறு' என்று ஒன்றுக்கொன்று வேறாகத் தோன்றாதவாறு, உவமத் தோற்றத்திலேயே உவமிக்கப்படும் பொருளையும் கண்டு முன்னே

கூறப்பட்ட மரபினால் கூறும் இடத்துத் தெளிவுடையோர் நுட்பமாக உணர்வோர் ஆயின் கூறுவோர் தெளிவுடன் பொருந்தி, உள்ளுறை விளக்கும் இயல்புடையது (மேலது, ப. 478).

செய்யுளுக்கு உரை கூறும் ஆசிரியர் செய்யுளில் பயிலும் இறைச்சி, உள்ளுறையினையும் அழகுற விளக்கியுள்ளார். 75 செய்யுட்களில் இறைச்சியினையும், 60 செய்யுட்களில் உள்ளுறையினையும் விளக்கிக்காட்டுவது சுட்டத்தக்கது.

(எ.டு.) **இறைச்சி**

**வன்சுவல் பராரை முருக்கிக் கன்றொடு**
**மடப்பிடி தழீஇய தடக்கை வேழம்** (நற். 202, 3–4)

கன்றொடு பிடியைத் தழுவிய வேழம் கவளமூட்டுங் காடு என்றது, காதலியொடு இல்லறம் நிகழ்த்தி அவளிடத்துப் பிறந்த மக்களுடனே அவளையும் பாதுகாத்துக் கொள்வேனெனக் காதலன் குறிப்பித்ததாம்.

**(எ.டு.) உள்ளுறை**

**தொன்றுபடு துப்பொடு முரண்மிகச் சினைஇக்**
**கொன்ற யானைச் செங்கோடு கழாஅ** (நற்: 247)

புலியைக் கொன்ற யானையின் கோடு கழுவும்படி மழை பொழிந்த மேகம் விளர்த்து வைகறையில் வரை மீதியங்கு மென்றது, நின்னுடைய காமந்தணியும்படி பெரிய இன்பத்தைக் கொடுத்த தலைவி நீ கைவிடுதலாலே பின்பு விளர்த்துக் காட்டும் என்பதாம்.

## இலக்கியப் புலமை

நற்றிணைக்கு உரை வகுக்கப் போந்த உரையாசிரியர் பெரும்பாலும் பிற எட்டுத்தொகை நூல்களினின்றே மேற்கோளினை எடுத்துக்காட்டுகிறார். இவை தவிர குறள், பழமொழி, தேவாரம், சீவகசிந்தாமணி ஆகியவற்றினின்றும் மேற்கோளை எடுத்தாள்கிறார்.

## எட்டுத்தொகை நூல்கள்

எட்டுத்தொகையிலும் அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை ஆகிய ஐந்து நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து ஆகிய மூன்றும் எடுத்தாளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கோளாகக் குறிக்கும் நூல்பெயரையும், பாடல் எண்ணையும் பெரும்பாலும் குறிப்பிட்டுக் காட்டுவது சுட்டத்தக்கது. தொகை நூலில் பத்துப்பாட்டினின்றும் ஒரு பாடல் கூட எடுத்தாளப்படவில்லை என்பதும் சுட்டத்தக்கது.

## அகநானூறு

18, 47, 83, 154, 192, 330 ஆகிய செய்யுள்களில் அகநானூற்று மேற்கோள்கள் இடம் பெறுகின்றன. மேற்கோள்களின் வழிப் பண்டைய மரபும் சுட்டப்படுகிறது.

(i) பகைவரை அட்டு அவர் பல்லைக் கொணர்ந்து தமது கோட்டை வாயிற் கதவில் வைத்துத் தைத்தல் பண்டை வழக்கு.

எனப் பண்டைய வழக்கினை விளக்கும் பொருட்டு,

**கல்லா எழினி பல்லெறித் தழுந்திய, வன்கட்கதவின்**
**வெண்மணி வாயில், மத்தி** **(அகம். 210)**

எனும் அகப்பாடலை மேற்கோளாகச் சுட்டுகிறார் (18)

(ii) கழங்கு (நற். 47) - கழற்சிக்காய் வித்துப் பலவற்றை முருகன் முன் போகட்டு வேலன் தன் தலையில் ஆடை சூடிக் கையிற் பல தலைகளிற் சிறு பைகளைக் கட்டிய கோலொன்றேந்தி அக்கோலிற் கழங்கு வித்துகளை வாரி எடுப்புழிக் குறிப்புக் காணுகின்ற ஒருவகைக் குறி

எனக் கழங்கினை விளக்கும் உரையாசிரியர், இதனை, "அருஞ்சுரம்" (அகம்-145) என்ற செய்யுளாலறிக எனத் தம் கருத்திற்கு மேலும் மெருகூட்டுகிறார்.

(iii) வலம் படுத்தல் - வலப்புறத்து விழும்படி கொன்று சாய்த்தல். அடிபட்ட பொழுது வலப்பக்கத்தில் விழுந்ததனையே புலி தின்னுமென்ப; (நற். 154)

"இடம்படின் மிசையாப் புலி" என்றார்
அகத்தினும்(29)
இல - ஏடீ என்னும் விளிப்பெயர்
'எவன் இல குறுமகளியங்குதி" என்பது அகம் (12)

(iv) பரத்தை மகளிரை இல்வயிற் கொணர்ந்து வதுவை அயர்ந்து துய்த்தல் வழக்கு என்பதனை (நற். 330)

**"பிறரு மொருத்தியை யெம்மனைத்தந்து வதுவை அயர்ந்தனை என்ப"** என்றார் (49) அகத்தினும் எனவும் விளக்குகின்றார்.

## புறநானூறு

**ஆளில் பெண்டிர் – பொருள் தேடி வந்து பாதுகாக்கும்**
**கணவனை இழந்த மகளிர்** **(நற். 353)**

பனுவல் - பறித்த பஞ்சு.

இதனை விளக்குமிடத்தே, ''பருத்திப் பெண்டின் பனுவலன்ன'' என்றார் (125) புறத்தினும் எனத் தன் கூற்றிற்குச் சான்று கூறி விளக்குகின்றார்.

## குறுந்தொகை

**நோயும் பேரும் மாலையும் வந்தன்று**
**யாங்காகு வென் கொல்யானே ஈங்கோ** *(நற். 397-5-6)*

நோயும் பேருமென்றது இறக்குமுன் காடேறிற்றென்னும் வழக்கு. இவ்வாறே "என் கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தனவே" என்றார் கேள்வனைப் பிரிந்து வருந்திய வெள்ளிவீதியார் எனக் குறுந்தொகைச் செய்யுளின் வழித் தான் கூறவந்த உரைக்கு மெருகேற்றுகின்றார் ஆசிரியர்.

## கலித்தொகை

(i) நோன்பின் பயனெய்தத் தைத்திங்கள் பிறப்பில் நீராடுவதும், தைத்திங்கள் முழுவதும் வைகறையில் நீராடுதலுமாம் (நற். 80) இதனை,

**தையினீராடிய தவந்தலைப் படுவாயோ** *(கலி. 56)*

எனக் கூறுமாற்றானுமறிக எனவும்

(ii) விறல் - வெற்றி (நற் . 86) இதனை "அருந்தவ மாற்றியார்" என்னும் (30) பாலைக்கலியுள் ''விறலிழையவர்'' என்பதற்கெழுதிய உரையானுமறிக

எனவும்,

(iii) வில்லாப்பூவின் கண்ணி சூடி (நற். 146-1) எனும் வரிக்கு உரை எழுதுகையில், வில்லாப்பூ - விலைப்படுத்தற்காகாத பூ : அவை பூளை, ஆவிரை, உழிஞை, எருக்கம் என்பன.

**அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்,**
**பிணையலங் கண்ணி மிலைந்து** *(கலி. 139)*

எனவும்,

**பூளை பொலமலர் ஆவிரை வேய் வென்ற, தோளா ளெமக்**
**கீந்த பூ** *(கலி. 138)*

எனவும்,

**பூவல்ல பூளை உழிஞையொடு யாத்த** *(கலி. 140)*

எனவும் வருவனவற்றாலறிக என நெடிதாக விளக்கிச் செல்கிறார்.

விறல் - வெற்றியையுடைய தலைவனையுணர்த்துஞ் சொல்
(நற். 181)

முருகவேளை "அணிசால் பெருவிறல்" என்றார் (81) கலியினும் எனவும்,

மால் - மேகம்; (நற். 196) இனி மால்பு இடர் எனக் கொண்டு நிலத்தைக் குறிஞ்சியாக்கி எமர் தேனெடுக்கச் சமைத்த கண்ணேணியாலே இடரப்பட்டறியாத திங்களெனவுரைப்பினுமாம். இதற்கு,

வானூர் மதியம் வரை சேரின் அவ்வரைத் தேனின் இறாலென
ஏணி இழைத்திருக்குங் கானக நாடன் (கலி. 34)

என்றதனை நோக்கியும் அறிக எனவும்,

சிறு மனை சிதைத்தல் மைந்தர்க் கியல்பு (நற். 378)

"மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய, கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி" என்றார் (51) கலியினும் எனவும் பல்வேறு இடங்களில் கலித்தொகைச் செய்யுள் வரிகளை மேற்கோளாக எடுத்தாள்கிறார்.

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் குறளினை அதிகமாகவும், பழமொழியினை 2இடங்களிலும், கைந்நிலைச் செய்யுள் வரிகளை ஓரிடத்திலும் மேற்கோளாகச் சுட்டுகிறார். பிற பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எடுத்தாளப்படவில்லை.

## குறள்

பெருந்தோள் குறுமகள் அல்லது
மருந்து பிறி தில்லையான் உற்ற நோய்க்கே (நற். 80-8-9)

அவளளித்த நோயாதலின் அதற்கு அவளே மருந்தென்றான்;

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து (குறள் 1102)

எனக் குறளைச் சுட்டுகின்றார். நற். 140 ஆவது செய்யுளிலும் இதே குறள் கையாளப்படுகின்றது.

மழையில்லாவிடில் தொழில் யாதும் நிகழாதாதலால் தொழிலுதவிப் பெயல் பொழிந்த வென்றார் (நற். 157).

"ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும், வாரி வளங்குன்றிக்கால்" (குறள் 14) என்றதனாலும் மழையில்லையேல் தொழிலின்மை தெளிக எனவும்,

பிரிந்த காலத்துத் தான் உற்ற வருத்தம் தலைவனும் படுவதைத்தான் நேரிற் பார்க்க வேண்டுங் கருத்தால் ஊடலுறுவேன் என்றாள். அங்ஙனம் ஊடியவழி அவன் உணர்த்தல் இன்பம் நனி பயப்பதனை (நற். 217) "இல்லை தவறவர்க்காயினும் ஊடுதல், வல்லது அவர் அளிக்குமாறு" என்றதனானும் அறிக (குறள். 1321) எனவும், குறள் கருத்துகளை அழகாக மேற்கோள் சுட்டித் தம் கருத்தினைச் சிறப்பாக விளக்குகிறார் உரையாசிரியர்.

## பழமொழி

**வேட்டம் பொய்யாது வலை வளஞ்சிறப்பப்**
**பாட்டம் பொய்யாது பரதவர் பகர** **(நற். 38)**

கடல்படு பொருளுக்கும் மழையின் இன்றியமையாமையை உணர்த்தும் பொருட்டு

**வெண்பாட்டம் வெள்ளுந்தரும் (71) என்றார் பழமொழியினும்,**

எனவும்,

**அதிர் குரல் எழிலி முதிர் கடன் தீருக** **(நற். 228-2)**

தான் சூன் முதிர்தலுடையமையால் அக்கடன் தீருமாறு கண்ணொளி மறையும்படி பரத்தலினாலே செறிந்த, இருளையுடைய நடுயாமத்தில் எனும் செய்யுள் வரிகளுக்கு, "யார் கடன் வைத்தாலும் மாரிக்கடன் வையாது" எனும் பழமொழியினையும் மேற்கோளாகச் சுட்டுகிறார்.

## கைந்நிலை

பல்லிபடுதல் - பல்லியடித்தல் (நற். 169) (பல்லி சொல்லுதல்) எனப் பலபடியாகப் பொருள் கூறும் ஆசிரியர் "வாய்மாண்ட பல்லிபடும்" என்றார் கைந்நிலை 18 ஆம் பாடலினும் என விளக்குகின்றார்.

## காப்பியங்கள்

காப்பியங்களில் சீவகசிந்தாமணி (270, 277) மட்டுமே ஆசிரியரால் மேற்கோளாகச் சுட்டப்படுகின்றது.

**பிணித்தல் தேற்றாப்**
**பெருந்தோள் செல்வத்து இவளினும் எல்லா** **(நற். 270)**

கணவனை வயமாக்க அறியாதாள் வருந்தியென்னென்றதாம். இதனைப் 'பஞ்சிறை கொண்ட' (கேம. 127) என்னும் சிந்தாமணிச் செய்யுளானுமறிக எனவும், கொடிய நெஞ்சுடையாரைக் கரிய நெஞ்சினரென்பது வழக்கு எனக் கூறி "கரிமாலை நெஞ்சினான்" என்றார் சிந்தாமணியினும் (நாமகள். 295) எனச் சிந்தாமணிச் செய்யுளை மேற்கோள் கூறித் தாம் கூற விரும்பிய கருத்தினை நன்கு தெளிவுபடுத்துகிறார்.

## பக்தி இலக்கியம்

பக்தி இலக்கியத்தில் தேவாரப் பாடல் மட்டும், ஓர் இடத்தில் மேற்கோளாக இடம் பெறுகிறது. தம்மோன் - தம்மான் தம் தலைவன் (நற். 88). ''தம் மானையறியாத சாதியாருளரே'' என்றார் தேவாரத்தினும் எனச் சுட்டிச் செல்கிறார். பக்தி இலக்கியங்களில் பிற எவையும் மேற்கோளாகச் சுட்டப்படாதது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர "கொல்லிப் பாவைக்கு" (நற். 85) விளக்கம் கூறவந்த உரையாசிரியர் "தேவரையும் முனிவரையும் துன்புறுத்த வருகின்ற அவுணரும் அரக்கரும் அப்பாவையின் நகையைக் கண்டு மயங்கி உயிர்விடும்படி தேவதச்சனாக்கி வைத்த வெண் வடிவினது" என விளக்கி விட்டு, அவுணரும் அரக்கரும் போதருகாலை அவர் வாடை பட்டவுடன் தானே நகை செய்யுமாறு பொறியுள் வைக்கப்பட்டது. அது நகைத்துக் கொல்லு மென்பதனை, "திரிபுரத்தைச் செற்றவனுங் கொல்லிச் செழும் பாவையும் நகைக்கக் கற்ற தெல்லாமிந்த நகை கண்டேயோ" என்றதனாலுமறிக எனச் 'சித்திர மடல்' எனும் இலக்கியப் பகுதியினின்றும் மேற்கோள் கையாள்கிறார். ஆசிரியரின் இலக்கிய மேற்கோள்கள் அவர்தம் இலக்கியப் புலமையினைத் தெற்றெனப் புலப்படுத்துவதாக அமைகின்றன.

## உரைநயம்

உரையாசிரியரின் நடை, அருஞ்சொற்பொருள், சில சொற்களுக்குப் பொருள் விளக்கம் அளித்துள்ளமை, கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கும் பாங்கு, பாடபேதம் காட்டல், பிற துறைப்புலமை ஆகியவை இப்பகுதியில் அமைகின்றன.

## நடை

ஆசிரியரின் நடை கற்பார் எளிதில் அறியும் வண்ணம் இனிய, எளிய நடையில் அமைந்துள்ளது.

**இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை**
**நீலத்து அன்ன பசலை அகந்தொறும்**

இரும்பு போன்ற கரிய கிளையையுடைய புன்னை நீலம் போன்ற பசிய இலையிடமெங்கும் என்பது சான்று.

## அருஞ்சொற்பொருள்

சொல்லுக்குப் பொருள் கூறுவது உரைவகையுள் இன்றியமையாத கூறாகும். உரையாசிரியர் பல சொற்களுக்கு இவ்வாறு பொருள் எழுதியுள்ளார். அவை பின்னிணைப்பில் பட்டியிலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## பொருள் விளக்கம் உரைத்தல்

சில சொற்களுக்கான பொருளினை மிக விளக்கமாக உரையாசிரியர் தருகின்றார். செய்யுள் எண் அடிப்படையில் இப்பொருள் விளக்கம் கீழே சுட்டப்பட்டுள்ளன. இவ்விளக்கத்தின் வழி அக்கால மரபு, உரையாசிரியரின் பல்துறைப் புலமை ஆகியவும் புலனாவது குறிப்பிடத்தக்கது.

**பசத்தல்** – பசலை பாய்தல் (1)* - இது கண்ணாடி மேல், வாயினால் ஊதிய ஆவி பட்டு அக்கண்ணாடி மழுக்கமடைவது போலத் தலைவியின் நெற்றியிலுள்ள ஒளி தலைவனைப் பிரிதலால் மழுங்கித் தோன்றுதல்; இதனைப் பீர் எனவும் பொன் எனவும் உரைப்பர்.

**வில்லேர் உழவர்** (1) - ஏரால் உழுதுண்போர் போல வில்லால் ஆறலைத்துண்ணலின் வில்லேர் உழவரென்றார்.

**உரவு நீர்ச்சேர்ப்ப** (19) - உரவு - வலிமை, வலிமையுடையார் தம்மை அடைந்தாரைக் கைவிடார் நீயும் அத்தன்மையனாதி யென்பார் உரவுநீர்ச் சேர்ப்ப னென்றாள்.

**நோன்பியர்** (22) - ஆடி முதலாக மார்கழி ஈறாகக் கிடந்த ஆறு திங்களும் தேவர்க்கு இராப்பொழுதெனப் புராணங் கூறுதலுண்மையின், இரவு பிற்றையாமங் கொண்ட சில பொழுதுண்ணாதிருக்கும் நோன்பியர்.

**பாரம்** – (41) **பருத்தி**; இது பருத்தி வாணிபர் அந்நெறியிற் சென்று கூவலருகில் தங்குழி ஆண்டு அவ்வித்துதிர்ந்து முளைத்திருப்பது.

**மிளிர்வை** (40) - ஆணத்திலிடப்படுவது. இஃது இக்காலத்தில் 'தான்' என வழங்கப்படுகின்றது.

---

* அடைப்புக் குறியுள் உள்ள எண் நற்றிணைப் பாடல் எண்ணைக் குறிக்கும்.

**ஓரை (68)** - பஞ்சாய்ப்பாவை கொண்டு மகளிராடும் விளையாட்டு.

**தெண்மணி (59)** - மாலையில் போதரும் பசுக்களை ஏறு சென்று புணர்தலாலே அப்பசுவின் கழுத்திட்ட மணி விரைந்தொலிக்கும் தெளிந்த ஓசை.

**வெள்வசி – வெறும் பிளப்பு; வள்பு வார் (82)** - பிளப்புக்களிலே சுருக்குவார் வைத்து விலங்குகளைப் பிடிப்பது வழக்கு.

**சுரிதகம் – (86) – திருகுப்பூப்போல அக்காலத்துப் பயின்ற தோரணி.**

**கூலம் – (93) –** நெல்லு, புல்லு, வரகு, சாமை, தினை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சையென்ப: சோளமும் கம்பும் சேரப் பதினெட்டெனவுமுரைப்ப; "பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக" என்றார் பிறரும்.

**கொடிறு – (107)** - குறடு என்று வழங்குவது; இங்குப் பற்றுக் குறடென்பது ஈயம் பூசுங்குறட்டினை.

**அடார் – (119)** - கருங்கற் பலகையை ஒருபால் சாய்வாக நிமிர்த்திக் கீழே முட்டுக்கொடுத்து உள்ளதால் உணவு வைப்ப அவ்வுணவை விலங்கு சென்று தொடுதலுங் கல் வீழ்ந்து கொல்லும் பொறி.

**வண்டல் – (127)** - வண்டற் புழுதியாலே சிற்றில் கோலிச் சிறுசோறட்டு மகளிர் விளையாடும் விளையாட்டு.

**ஈனாப்பாவை – (127)** - தான் பெறாது கோரையாலே செய்து வைத்துத்தன் மகவென முறைமை பாராட்டும் பாவை.

**தட்டை (134) –** மூங்கிற் பிளாச்சைச் சிறிது பிளந்து அப்பிளப்பிலே சிறுகல்லை வைத்துச் சுழற்றி வீசுங் கருவி; ஒலிபடப் புடைக்குங் கருவியுமாம்.

**இற்றி (162) –** இத்திமரம். இச்சிமரமென இக்காலத்து வழங்கப்படுவது.

**விறலி (176)** - விறல் - சத்துவம்; அவை சிங்கார முதலாய ஒன்பான் சுவையாமென்ப. அச்சுவைகள் தன் மெய்க்கண்ணே தோன்றுமாறு அவிநயத்திற் புலப்படுத்திக் காட்ட வல்லவள் விறலி.

**பலகை (177) –** கிடுகு; இக்காலத்துக் கேடயமெனமருவியது.

**ஒழுகை (183)** – பண்டியெனவும் வண்டியெனவும் இக்காலத்து வழங்கப்படுகின்றது.

**நொச்சி (184)** – முன்றிலின்கணுள்ள வேலியில் நிழல் நிரம்பிய நொச்சி. இது சிற்றில் கோலிச்சிறு சோறட்டு விளையாடிய இடம்.

**தெற்றி (184)** – திண்ணை; இது கழங்கு, பலகறை, பல்லாங்குழி முதலாயின ஆடிய இடம்.

**ஓதி (186)** – (நற் : 127) – ஒந்திக்கொரு பெயர். நிறம்பெயர் முதுபோத்தென்றதனாலே பச்சோந்தியெனவுமாம்.

**சென்னி (189)** – பிச்சையெடுக்கும் மண்டை போன்றதொரு கலம். அதனை உடைமையிற் பாணர் சென்னியர் எனப்பட்டார்.

**சாறு (200)** – திருவிழா. அவ்வூரில் நடக்குந் திருவிழாவை ஊர்ப்பொது நிலத்திருக்குங் குயவனே அங்குள்ள வீடுதோறுஞ் சென்று கூறிப்போவது அவ்வூர் வழக்குப் போலும்.

**கச்சு (220)** – முதுகிலிட்ட கலனை நழுவாதபடி குதிரையின் பின்னே மாட்டிக் கட்டும் வார்.

**கட்டு (288)** – முது பெண்டாகிக் குறிசொல்லு மாதரை மனையகத்துக் கொணர்ந்து வைத்து முறத்திலே பிடி நெல்லையிட்டுப் பிரப்பி எதிரே தலைமகளை நிறுத்தித் தெய்வத்துக்கு வழிபாடு செய்து அந்நெல்லை நந்நான்காக எண்ணி எஞ்சியவை ஒன்றிரண்டு மூன்றளவும் முருகணங்கெனவும் நான்காயின் பிறிதொரு நோயெனவுங் கூறப்படுவது. முருகணங்கென்று கூறின் உடனே வேலனை (பூசாரி) அழைத்து வெறிக்களத்திருத்தி முருகவேளுக்குச் சிறப்பெடுத்து ஆண்டுக் கழஞ்சுக் குறிபார்ப்பது.

**மன்றப் பெண்ணை (303)** – ஊர்ப்பொதுப் பனை. தம் குலதெய்வத்தையும் ஊர்ப் பொதுத் தெய்வத்தையும் பனை யிலேற்றுவித்து வணங்கி வருவது தொன்று தொட்டு வரும் நெய்தல் நிலத்து வழக்கு.

**பால் (341)** – சாராயத்துக்கொரு பெயர்; கள்ளை மரத்துப் பாலெனக்கூறும் வழக்குண்மையின் அறிக.

**உருகெழுதெய்வம் (398)** – பேயும் பூதமும் நிரையப் பாலரும் அணங்குதல் தொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும் பிறருமாம்.

குறிப்பிட்ட சொல்லுக்குரிய விளக்கத்தை விரிவாகத் தருவதன் மூலம் கூறவந்த பொருளினை நன்கு தெளிவுபடுத்துவதுடன், சில

சொற்கள் தங்காலத்தே மருவி அழைக்கப்படும் விதம் போன்றவற்றையும் எடுத்துக்காட்டுவது உரையாசிரியரின் உரைச் சிறப்பிற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது.

## கொண்டு கூட்டிப் பொருள் உரைத்தல்

ஒவ்வொரு அடியினையும் தனித்தனியே எழுதிப் பொருள் விளக்கினாலும், அதிலும் ஒரு முறைமையினைக் கையாள்கிறார். படிப்போர் செய்யுளின் பொருளினை நன்கறியும்வண்ணமும், செய்யுளின் பொருள் செறிவுடன் திகழும் படியும் உரை வகுக்கின்றார். செய்யுளின் வரிகளை முன்பின் கொண்டு கூட்டிப் பொருள் உரைப்பதால் படிப்போர் செய்யுளின் பொருளை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. ஒரு சில செய்யுள் தவிர பிற அனைத்துச் செய்யுள்களுக்கும், இம்முறையிலேயே பொருள் கூறுவது சுட்டத்தக்கது.

## பாடபேதம் காட்டல்

இலக்கியங்கள் முதலில் வாய்மொழியாக இருந்து, பின் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டு அதன்பின் பல பகுதிகளில் வாழ்கின்றவர்கள் தாம் படித்ததையும், கேட்டதையும் நினைவில் கொண்டும் படியெடுத்து வைத்ததாகவும் வளர்ச்சியடைந்தன. இதன் காரணமாக இவ்விலக்கியங்களில் 'பாட பேதங்கள்' தோன்றலாயின. எழுதுவோரால், படிக்கும் வாசகரின் இலக்கியச் சுவைக்கேற்ப எனப் பாடபேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு (அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ப. 324). நாராயணசாமி ஐயரும் சென்னை இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள பிரதி, உ.வே. சாமிநாதையர் கொடுத்தனுப்பிய படிகள், தி.க. கனகசுந்தரம் பிள்ளை கொடுத்தனுப்பிய படிகள் ஆகியவற்றைப் பெற்று அவற்றை ஒருவாறு திருத்தி உரை எழுதியுள்ளதாக, நற்றிணை நூலின் முகவுரையில் கூறுகின்றார். எனவே, ஒவ்வொரு செய்யுளின் கீழும் முன்பாடத்தைக் காட்டிச் செல்கிறார். ஐயர் திருத்திக்கூறும் பாடம், செய்யுளின் பொருளுக்கு ஏற்ற வகையில் அமைகின்றது. சில சான்றுகள்:

நின்ற சொல்லொடு நீடு தோறினியர்

என்பதற்கு

நின்ற சொல்லர் நீடு தோன்றினியர் (நற். 1)

என்று கூறி நம் காதலர் தவறாத வாய்மையுடையவர்; நெடிதாகத் தோன்றுகின்ற இனிமையுடையவர் என்று பொருள் தருகின்றார்.

**.............. நெய்த்தோர்வாய**
**வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை**
**மரல் நோக்கும் இண்டிவர் ஈங்கைய சுரனே**
**வையெயிற் றையள் மடந்தை முன்னுற்று**

என்பதில் நெய்த்தோர் வாய பெருந்தலை வல்லியம் குருளை - எனக் கொண்டு இரத்தம் பூசிய வாயை உடையனவுமாகிய பெரிய தலையையுடைய புலிக்குட்டிகள் என்றும், "வையெயிற்று ஐயள் மடந்தை முன் உற்று" எனக் கொண்டு கூரிய பற்களையுடைய மெல்லியளாகிய மடந்தையை முன்னே செல்லவிடுத்துப் பின்னை எனவும் பொருள் உரைக்கின்றார். 'நெய்த்தோர் வல்லியம்' என்பதும் "வையெயிற்று ஐயள் மாயள்" என்பதும் பாடம். ஐயர் 'வாய' எனும் சொல்லை இணைத்துக் கொண்டும், 'மாயள்' எனும் சொல்லை வெட்டியும் பொருள் உரைக்கின்றார்.

## பிற பாடபேதம்

*பிதிரிற் (நற். 113) (பிதிர்வில்)** தொல்கவின் (தொலைந்து) அழிய நூறி (நூறியருமிளை) (நற். 14), சேணாறு நறவின் (சேணாறு பிடவியன்) (நற். 25), குறுங்கை (குறுக்கை) (நற். 36), பைய (பைபய) (நற். 37), மதிலராகவும் (மதிலராக) (நற். 39), வீதா (வீத்தர்) (நற். 51), முகிழிணரொடுவரு (முகிழ் மலரொடுவரு) (53), கொரீஇ (கொலீஇ) (59).*

'கொலீஇ' என்பதனைக் 'கொரீஇ' எனக் கொண்டுப் பொருள் விளக்கும் பொழுது, 'கொரீஇ' என்பது இக்காலத்து அருகிய சொல். பொருள் விளங்கவில்லை. கன்றுகளுக்குப் போடும் இருப்பு முள்ளாலாகிய வாய்க் கூட்டுக்குக் 'கொரி' என்று திருநெல்வேலியை அடுத்த ஊர்களில் வழங்கப்படுகிறது. மாட்டுமடியில் ஊட்டச் சென்றால் அம்முள் மடியில் குத்துந் தன்மையாயிருத்தலால் அந்தப் பொருளைக் கொண்டு குத்திப் பிடிப்பதாக உரையெழுதினேன். கொரீஇ என்பதற்கு வேறு பொருள் விளக்கமாகத் தெரிகிற வரையில் குத்து என்பதைக் கொள்க" (நற். ப-104) என நீண்ட விளக்கத்தினையும் தந்து செல்கிறார்.

*உள்ளினேன் அல்லனோ (உள்ளினான் அல்லனோ) (62), அருவி யொண்டுறை (உண்டுறை) (65), வெண்குவட்டு (வெண்கோட்டு) (67), கெளிற்றார் (கெடிறு) (70), ஒண்டுறை (உண்டுறை) (83), பெருந்தாள் புன்னை (நெடுந்தாள் புன்னை) (87), கொடுங்கழை (கொடுங்கழ) (94), சிறியிலை வேம்பின் (சிறியிலை வேலம்) (103), தொளி (துளி) (104), பேதை (பேழை) (120), செம்பேர் இரணை*

---

* அடைப்புக் குறியில் காட்டப்பட்டவை முன்பாடம்.

(சேர்ப்போர் ஈரளை) (123), பின்னிலை முனியல் (முன்னிலை முனியல்), (140), குன்ற நாடன், (குன்றக நாடன்) (151), நும்மினும் உடையேன் (நும்மினும் அறிகுவேன்) (160), வேலின் இற்றி (வேனில் இற்றி) (162), கலுழுங் (கலிழும்) (208), வைகுபனி உழந்த (வைகுபனி யுறந்த) (279), முகைய ஆம்பல் (தகைய ஆம்பல்) (286), நிறம் பெறும் ஈரிதழ் (நிறங்கிளர் நிறையிதழ்) (284), தொன்றுறை (தொண்டுறை) (294), பார்த்துறைப் (பாரத்துப்) (315), பணைத்தாள் ஓமை (பனைத்தாள் ஓமை) (318), புடைத்து இற்ற (புடைத்திட்ட) (329), இருங்கோள்வயப்புலி (கேழ்வயப்புலி) (332), அலர்வது அன்று கொல் (ஆவது அன்று கொல்) (339), அவன் மலைப் (அவர்மலைப்) (359), மாசறக் கழீஇக் (மாசறக் கெழீஇக்) (366), வண்புறப் புறவு (பண்புறப் புறவு) (384) இவ்வாறாக 45 பாடபேதங்கள் காணப்படுகின்றன.

## பிறதுறைப்புலமை

சில சொற்களுக்குப் பொருள் கூறுவதன் மூலம் அக்காலத்தில் வழக்கில் இருந்த மரபு வழக்கினையும், தாவரவியல் (93) உயிரியல் செய்திகளையும் கூறுவதைக் காணலாம். குருகு - நாரையின் பகுதியாகிய நெடலை, வக்கா முதலாயின. இவையே தாழம் பூ போத்தைப் போலிருப்பன 211 (92), ஓதி - ஓந்திக்கொரு பெயர். இடைக்குறை விகாரமன்று. வழலை - ஒருவகைப்பாம்பு; அதனைப் போறலின் 'ஓந்தி வழலை' யென்றார் போலும் எனச் சிறந்த உயிரியல் விளக்கம் தருகிறார். இவை தவிர, மரல் நுகும்பு - மரலின் முற்றாத இளமடல். கேணி நீரைப் பக்கத்துள்ள மிடாவிலிட்டுப் பிறவுண்ணாதபடி ஒரு வில்வைத்து மூடி போடப்படுவது; அதனை வலிந்திழுப்பிற் திறந்து கொள்ளும் (92) எனவும்,

(59) ஈயல் பிடிப்பது - கோடுகளை ஒழுங்கு பெறச் சிதைத்து மேலே விழலால் மூடி அதன் மீது சேற்றைப் பூசி ஒரு துளை வைத்து அதில் புகை மூட்டியை வைத்தூதினால் உள்ளிருந்த ஈயல் வெளிவரும். அங்கே வேறொரு புழை செய்து புகைபோகும் வழியுண்டாக்கி அதில் ஒரு தாழியை வைத்திருந்தால் வந்த ஈயலெல்லாம் தாழியிலே படியுமென்றதாம் எனவும் பிற செய்திகளையும் ஆங்காங்கே சுவைபட விளக்கிச் செல்லும் பாங்கு உரைக்குச் சிறப்பு கூட்டுவதாக அமைகின்றது.

ஆம்பல் - ஒரு பண் (113); இனி வெண்கலத்தால் ஆம்பற்பூ வடிவமாக அணைசுபண்ணி நுனியில் வைக்கப்பட்ட புல்லாங் குழலெனவுமாம்; படுமலைப்பாலை - பெரும்பாலை ஏழனுள் ஒரு பண்; (139) அது செம்பாலையுட்பட்ட குரலிற் பாகத்தையும், இளியிற் பாகத்தையும் வாங்கிக் 'கைக்கிளை, உழை, விளரி, தாரம்' இவைகளுக்கு

ஓரோ வொன்றைக் கொண்டு சேர்க்கத் துத்தங்குரலாய்ப் படுமலைப் பாலையாகும்; இக்காலத்து அருகிய வழக்காதலின் வல்லார்வாய்க் கேட்டுணர்க எனவும், கோடு - கொம்பு என்னும் வாச்சியம் (276) எனவும் ஆங்காங்கே இசைப்புலமை துலங்க உரையெழுதிச் செல்லும் திறன் வியக்கத்தக்கது.

## உரையாசிரியரும் பெருமழைப்புலவரும்

நற்றிணை நானூறுக்கு ஆய்வுரை எழுதியுள்ள பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் சிற்சில இடங்களில் உரையாசிரியரை ஒட்டியும், சில இடங்களில் மறுத்தும் செல்கிறார்.

1. முதல் செய்யுளில் உரையாசிரியர் 'நீடு தோன்றினியர்' எனப் பாடங்கொள்ள, பெருமழைப்புலவர் 'நீடு தோறினியர்' எனும் பழைய பாடத்தையே ஏற்கிறார். இதற்குப் பழகுந்தோறும் இனிமை மிகுதற்குக் காரணமானவர் என்று பொருளும் கூறுகிறார்.

2. மரல்நோக்கும் இண்டிவர் (2-6)

   எனக்கொண்டு இம்மாலைப் பொழுதில் தாம் பதுங்கியிருக்கும் மரலின் தூறுகளை நிமிர்ந்து நோக்கா நிற்கும் எனப் பொருள் கூற,

   "மான் நோக்கிண்டிவர்" என்றும் பாடம். இப்பாடமே சிறப்புடையதாகும். இதற்குக் குருளைமாலைப் பொழுதிலே தமக்கிரையாக மான்களை ஆராய்கின்ற எனப் பொருள் கொள்க என்கிறார் பெருமழைப்புலவர்.

3. கட்டளை அன்ன வட்டரங்கிழைத்து (3-3)

   கட்டளைக்கற் போன்ற அரங்கை வட்டினாலே கீறி என உரையாசிரியர் பொருள் கூறுகிறார். 'கட்டளை யன்ன இட்டரங்கு' என்றும் பாடம். வட்டினாலே கீறி என்னும் உரை பொருந்தாது. வட்டு நெல்லிக்காயே ஆதலின் அதனால் அரங்கு கீறுதல் அமையாமையும் உணர்க என்கிறார் பெரு மழைப்புலவர்.

4. காண்டல்-தலைவனையாதல் தன்னையாதல் காண்டல் (நற். 23) (உரை)

   தனது தொன்னலம் சிதையக் காண்டொறும் என்பதே அமையும். காண்டலுக்கு உரையாசிரியர் விளக்கம் பொருந்தாமை உணர்க (பெருமழைப்புலவர்).

5. பேரமர் மழைக் கணீரிய கலுழ (29-9) (உரை)

இவ்வுரையாசிரியர் மழைக் கணீரிய, என்பதனை மழைக்கண் நீரிய என்று கண்ணழித்துக் கொண்டனர். மழைக்கண் ஈரிய கலுழ எனக் கண்ணழித்துக் கொண்டு ஈரமுடையன வாய்க்கலுழ என்னலே அமையும் என்க என்னை? நீரிய எனல் வழக்கன்மையான் என்க (பெரு மழைப்புலவர்).

6. புறா தின்னத் தகாத காயைத் தின்று கிளையிலேறி மயக்கமுற்று வருந்தா நிற்றல் போல என்பதை (66) இறைச்சிப் பொருள் என்கிறார் உரையாசிரியர். அது இறைச்சியன்று. உள்ளுறை உவமையே ஆகும். என்னை? உவமமும் பொருளுமாகக் கொள்ள வைத்தமையான் என்க. இறைச்சி அங்ஙனம் உவமமும் பொருளுமாகக் கோடற்கியலா வகை வரும் என்கிறார் பெரு மழைப்புலவர்.

7. (நற். 68) செய்யுளின் துறை: சிறைப்புறமாகத் தோழி தலைவிக்குரைப்பாளாய்ச் செறிப்பறிவுறீஇயது என்று கூறி, பயன் தலைவியை ஆற்றுவித்தல் என்கிறார்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இச்செய்யுளை, 'இது வரைவு நீட ஆற்றாத தலைவி வேறுபாடு புறத்தார்க்குப் புலனாகாமையும் இயையும். இங்ஙனம் கூறுவாரைப் பெறின் எனக் கூறி வற்புறுத்தது' என வேறோர் துறையாகக் கொண்டு "என்பு நெகப் பிரிந்தோள்வழிச் சென்ற கடைஇ அன்பு தலையடுத்த வன்புறைக் கண்ணும்" என்னும் விதிக்கு எடுத்துக் காட்டுவர். இதற்குப் பயன் தோழி தலைவியை ஆற்றுவித்தல். முன்னதற்குப் பயன் வரைவு கடாதல் என்று நுண்ணிதின் வேற்றுமை உணர்க. இச்செய்யுட்கு உரையாசிரியர் பயன் தலைவியை யாற்றுவித்தல் என்பது அவர் கொண்ட துறைக்கு ஒவ்வாமை உணர்க என உரையாசிரியரை மறுத்து நீண்ட விளக்கமொன்றையும் பெருமழைப்புலவர் அளிக்கின்றார்.

8. உலவை - காற்று (உரையாசிரியர் : 86) உலவை - பாலை நிலக் கருப்பொருளாகிய ஒருவகை மரம் (பெருமழைப்புலவர்) எனவும், 94 - ஆம் செய்யுளுக்கு உரையாசிரியர் பொருந்தாது உரை கூறுதலும் உணர்க எனவும் தேங்கமழ் சிலம்பின் என்பதற்குத் தேன்மணங் கமழுங் மலையின் கண்ணே என்றல் தெளிபொருளாகப் பொருந்திக் கிடப்பவும் தேங்கமழ் சிலம்பின் என்பதற்கு

உரையாசிரியர் இடமகன்ற மலையின் கண்ணே என்று இடர்ப்பட்டுப் பொருள் கூறியதனால் சிறப்பு ஒன்றுமின்மை யுணர்க எனவும் சில இடங்களில் உரையாசிரியரை மிகவும் வன்மையாக மறுத்துச் செல்கிறார் புலவர்.

பெருமழைப்புலவர், உரையாசிரியர் கூறாது விடுத்த பாட பேதங்களைச் செய்யுளில் சுட்டிச் செல்கின்றார். சில இடங்களில் உரையாசிரியர் கூறும் பாடபேதத்தை மறுத்து முன் பாடத்தையே எடுத்துக் கொண்டு அதற்கான விளக்கத்தையும் எடுத்துரைக்கின்றார். சில செய்யுள்களுக்கு உரையாசிரியரின் உரை விளக்கமன்றி உள்ளது (145) என விமர்சிக்கும் புலவர், தனது விளக்கத்தில் உரையாசிரியர் கையாளாத பிற நூற்பா, இலக்கியங்களை மேற்கோளாகச் சுட்டுவதும், உரையாசிரியர் கூறும் துறை, பயன் ஆகியவற்றை மறுப்பதும் சுட்டத்தக்கது.

## முடிவுரை

உரையாசிரியர் உரை எளிய தூய தமிழ் நடையும், இலக்கணக் குறிப்பு, இறைச்சி, உள்ளுறை உவமம், துறை, மெய்ப்பாடு, பயன் முதலிய அகப்பொருள்களும் கொண்டு திகழ்கின்றது. உரையினை ஊன்றிக் கற்பார் தொல்காப்பியத்தில் சிறந்த தேர்ச்சி பெறுவர் என்பதில் ஐயமில்லை.

இலக்கணம் மட்டுமன்றி இலக்கியத்திலும் சிறந்த பயிற்சி உடையவர் உரையாசிரியர் என்பது திண்ணம்.

சொற்களுக்கு விரிவான பொருள்கூறும் வகையில் மரபு வழக்கினை மட்டும் உணர்த்துவதோடன்றித் தமது உயிரியல், தாவரவியல் புலமையினையும் புலப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

பெருமழைப்புலவரின் விளக்கத்துடன், உரையாசிரியர் உரையினைத் தனியாக ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் நற்றிணை குறித்த நுண்ணிய செய்திகளை வெளிக்கொணர இயலும்.

## பின்னிணைப்பு

### அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| அகப்பா | - | மதில் |
| அசைதல் | - | தங்குதல் |
| அசைவு | - | களைப்பு |
| அஞர் | - | துன்பம் |
| அடுக்கம் | - | மலைப்பக்கம் |

| | | |
|---|---|---|
| அண்ணாத்தல் | - | நிமிர்தல் |
| அணல் | - | மோவாயின் கீழுள்ள தாடி |
| அதவம் | - | அத்தி |
| அதிரல் | - | காட்டு மல்லிகை |
| அம்பி | - | தோணி |
| அயம் | - | நீர் |
| அரலை | - | மரல்விதை |
| அரிவுவாள் | - | வாளரம் |
| அரி | - | பருக்கைக்கல் |
| அரிநரை | - | மெல்லிய நரை |
| அரிக்குரல் மிடறு | - | தேரையின் குரல் போன்ற குரலையுடைய மிடறு எனவுமாம் |
| அலமரல் | - | சுழற்சி |
| அவல் | - | பள்ளம் |
| அழுங்கல் | - | ஒலி |
| அறை | - | பாறை |
| ஆகம் | - | மார்பு |
| ஆதி | - | நெடிய செலவுமாம் |
| ஆர்பதம் | - | உணவு |
| ஆரம் | - | சந்தனமரம் |
| ஆளில் பெண்டிர் | - | பொருள் தேடிவந்து பாதுகாக்குங் கணவனை இழந்த கைம்மை மகளிர் |
| இணர் | - | பூங்கொத்து |
| இதழ் | - | இமை |
| இல்லம் | - | தேற்றாமரம் |
| இரத்தி | - | இலந்தை |
| இற்றி | - | இத்திமரம். இச்சி மரமென இக்காலத்து வழங்கப்படுவது |
| இறும்பு | - | சிறுகாடு; மலையுமாம் |
| உத்தி | - | படப்பொறி |
| உயவு | - | வருத்தம் |
| உரவு | - | வலிமை |
| உரறல் | - | முழங்கல் |
| உருகெழுதெய்வம் | - | பேயும் பூதமும் நிரையப் பாலரும் அணங்குதல் தொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும் பிறருமாம் |
| உருப்பு | - | வெப்பம் |

உல்லை - காற்று
உழுவை - புலி அகஞ்செவியுமாம்
உழையர் - அவாய்நிலை
உளை - பிடரிமயிர்
உறை - மழைத்துளி
உறை - தேன்றுளி
ஊழுறுபூ - மலர்ந்து கழியும் பழம்பூ
எகினம் - நாய்
எய் - முட்பன்றி
எருவை - கொறுக்கச்சி. கொறுக்காத் தட்டையென வழங்கப்படுகிறது.
எழால் - யாழ் நரம்பினோசை
எழுமீன் - உத்தர துருவத்தைச் சூழ்ந்து வரும் (எழு முனிவர் எனப்படும்) ஏழுமின்கள்
ஏமார்த்தல் - மயங்குதல்
ஏமுறல் - வீசிமயங்குதல்
ஏர் - அழகு
ஐயவி - வெண்கடுகு
ஐயள் - மெல்லியர்
ஒய்யுதல் - செலுத்தல். ஈண்டுப் பலிக்கடன் செலுத்துதல்.
ஒலிதல் - தழைத்தல்
ஒழுகை - பண்டி
கட்சி - பறவைக்கூடு
கட்டளை - பொன்னுரைக்குங் கல்
கதழ்வு - விரைவு
கமம் - நிறைவு
கயம் - பொய்கை
கரைவலம் - முகட்டினிடம்
கலி - செருக்கு
கலவு - உள்ளே அணைத்துக் கொள்ளுதல்
கழுது - பேய்
கனைகதிர் - நெருங்கிய கதிர்
கால்யாத்தல் - நெருங்கல்
காழ் - இருநான்கு கொத்து கொண்ட காஞ்சியென்னும் அணியுமாம்

| | | |
|---|---|---|
| காழ் | - | விதை; ஈண்டுப்புன்னைக் கொட்டை |
| காழ் | - | வயிரம் |
| காழ் | - | எட்டுக் கொத்துகளை உடைய அரைப்பட்டிகை |
| கானல் | - | கடற்கரைச் சோலை |
| கிழிப்பு | - | குகை; பிளப்புமாம் |
| குரல் | - | கதிர் |
| குரும்பை மணிப்பூண் | - | அரையிற் கட்டும் கிண்கிணி |
| குல்லை | - | கஞ்சா; துழாயுமாம் |
| குலவுக் குரல் | - | வளைந்த கதிர் |
| குறுதல் | - | பறித்தல் |
| குறும்பு | - | அரண் |
| குளவி | - | காட்டு மல்லிகையுமாம் |
| கூதளம் | - | தாளிக்கொடி |
| கொட்பு | - | சுழற்சி |
| கொண்டி | - | கொள்ளை கொள்ளும் பரத்தை |
| கௌவி | - | மான் |
| கௌவை | - | பழிச்சொல் |
| கோட்டம் | - | மாறுபாடு |
| கோட்டுமா | - | பன்றி |
| கோள் | - | கொலை |
| சாந்து | - | சந்தனமரம் |
| சாயினை | - | இளைத்தனை |
| சாய்தல் | - | நுணுகல் |
| சிதர் | - | வண்டு |
| சிதலைத்தோடு | - | கறையான் கூட்டம் |
| சிள்வீடு | - | ஒருவகை வண்டு |
| சுவல் | - | மேட்டு நிலம் |
| சுவல் | - | பிடர் |
| சுவல் | - | பிடரி மயிர் |
| சூர் | - | அச்சம் |
| செகீஇய | - | கொல்ல வேண்டி |
| செம்மூதாய் | - | தம்பலப் பூச்சி |
| ஞாட்பு | - | போர் |
| ஞெகிழி | - | கொள்ளி |
| ஞெமுங்கல் | - | நெருங்கல் |

| | | |
|---|---|---|
| தடவு | - | பெருமை |
| தடவு | - | வளைவு |
| தடைஇய | - | பருத்த |
| தாரம் | - | உணவுப் பொருள் |
| திமிர்தல் | - | பிசைதல் |
| திரிதரல் | - | மேகத்தில் யாண்டுமோடி முழங்குதல் |
| தில்லை | - | உப்பு நீரருகே வளர்வதொரு மரம் |
| துய் | - | பஞ்சு |
| துரு | - | யாடு |
| துவருதல் | - | துவட்டுதல் |
| துணி | - | தானிய முதலியவற்றை அளக்குங் கருவி; மரக்கால் |
| தூம்பு | - | துளை |
| தொடலை | - | மாலை |
| தொடி | - | வீரவளை |
| தோல் | - | கடுகு; கிடுகு, கேடயம் எனவும் வழங்கப்படுவது |
| நம்பு | - | விருப்பம் |
| நல்கூர் பெண்டு | - | பெண்தன்மையில்லாள் |
| நறுமோராடம் | - | செங்கருங்காலி |
| நறைப்பவர் | - | வாசனைக் கொடி |
| நனந்தலை | - | அகன்ற இடம் |
| நா | - | நீர் வடிய விடுதற்கு நாக்குப் போலச் செய்து வைத்திருப்பது |
| நார் | - | அன்பு |
| நிகர் | - | ஒளி |
| நிமிரல் | - | சோறு |
| நிவத்தல் | - | ஓடுதல் |
| நீத்தம் | - | வெள்ளம் |
| நீறு | - | புழுதி |
| நூழை | - | துவாரம் |
| நெதி | - | செல்வம் |
| நெய்த்தோர் | - | இரத்தம் |
| நோனாமை | - | பொறுக்க முடியாமை |
| பகன்றை | - | சிவதை |
| பதம் | - | கொந்தளிப்பு, காற்று மாறி அடித்தல் முதலாயின இல்லாத காலம் |

| | | |
|---|---|---|
| பரி | - | செலவு |
| பழனம் | - | நீர்நிலைவயல் |
| பனுவல் | - | பறித்த பஞ்சு |
| பாண்டில் | - | குதிரை பூட்டிய தேர் |
| பாண்டில் | - | வட்டில் |
| பாணி | - | தாளம் |
| பாரம் | - | பருத்தி; இது பருத்தி வாணிபர் அந்நெறியிற் சென்று கூவலருகில் தங்குழி ஆண்டு அவ்வித்துதிர்ந்து முளைத்திருப்பது. |
| பிசிர் | - | அலையின் கணெழுந் திவலை |
| பிணர் | - | சருச்சரை |
| பிதிர் | - | பொறி |
| பீள் | - | சூல் |
| புகா | - | உணவு |
| புகர் | - | கஞ்சி |
| புகற்சி | - | மனச் செருக்கு |
| புரை | - | உயர்ச்சி, சிறுமை நோயுமாம் |
| புள்ளி | - | குதிரின் உறைக்கிடப்பட்ட எண்ணு தலைமைந்த குறியீடு |
| புறவு | - | காடு |
| பெரும்பிறிது | - | சாக்காடு |
| பேது | - | மயக்கம் |
| பைது | - | ஈரம் |
| பையாத்தல் | - | வருந்துதல் |
| பொம்மல் | - | பொலிவு |
| பொறை | - | மலை |
| போர்வு | - | கதிர்ப்போர் |
| மன்றம் | - | தொழுவம் |
| மன்னாமை | - | நிலையாமை |
| மான்றல் | - | மயங்குதல் |
| மிளிர்க்குதல் | - | புரட்டுதல் |
| மிளை | - | காவலரண்; காவற் காடுமாம் |
| முதையல் | - | பழங்கொல்லை |
| முணக்கல் | - | அடக்குதல் |
| முணாது | - | வெறுப்பெய்தாது |

| | | |
|---|---|---|
| முரம்பு | - | வன்னிலம்; பருக்கைக் கற்கள் நிரம்பிய மேட்டு நிலமுமாம். |
| முரற்சி | - | கயிறு |
| முளிதல் | - | காய்தல் |
| முளியிலை | - | காய்ந்த சருகு |
| முறி | - | தளிர் |
| மூரி | - | பெருமை |
| மேவல் | - | விரும்புதல் |
| மோசை | - | விரலணி |
| வங்கம் | - | கப்பல் |
| வங்கம் | - | வெள்ளி |
| வசி | - | பிளப்பு |
| வடி | - | கூர்மை |
| வடித்தல் | - | ஈரம் புலரத் துவட்டுதல் |
| வடித்தல் | - | வாரி முடித்தல் |
| வணர்தல் | - | நுனி சுருண்டிருத்தல் |
| வல்சி | - | உணவு |
| வல்லியம் | - | புலி |
| வம்பு | - | கொடியை வரிந்து கட்டும் கச்சுமாம் |
| வறம் | - | கோடை |
| வரை | - | மூங்கில் |
| வழும்பு | - | நிணம் |
| வழுவல் | - | வெளிப்படல் |
| வள்ளுகிர் | - | நீண்ட நகமுமாம் |
| வளைநீர் | - | சங்குகளையுடைய நீருமாம் |
| வனம் | - | அழகு |
| வாப்பறை | - | தாவிப் பறத்தல் |
| விடர் | - | மலைப் பிளப்பு |
| விதுப்பு | - | நடுக்கம் |
| வியம் | - | வழி |
| விரிச்சி | - | நிமித்தம் |
| விளர் | - | கொழுப்பு |
| வெரிந் | - | முதுகு |
| வெள்ளில் | - | விளாமரம் |
| வெள்வசி | - | வெறும் பிளப்பு |
| வெள்ளரை | - | புரி முதலிய சுற்றாத வெறிய அடிக்கூண்டு |

## துணை நூல்கள்

1. அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1976.

2. உரையாசிரியர்கள், மு.வை. அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, (மூ.ப.) 1995.

3. தொல்காப்பியம் எளிய உரை, சொ. சிங்காரவேலன், கழக வெளியீடு, சென்னை, 1998.

4. நற்றிணை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (உரையும் விளக்கமும்), கழக வெளியீடு, சென்னை, (நா.ப.) 1967.

* * * * *

# இலக்கிய நோக்கு

**சு. இராசாராம்**

தமிழ் இலக்கிய உலகில் ஒரு நூலுக்கு எழுதிய உரையால் நிலைத்து நிற்கக்கூடிய பெருமை பெற்றவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஆவார். நற்றிணைக்கு உரை எழுதி அதனை முதன்முதலில் உரையுடன் 1914-இல் வெளியிட்ட பெருமை இவரையே சாரும். பின்னத்தூரார் நற்றிணை உரை எழுதுவதற்குப் பல்வேறு இலக்கிய நோக்குகளைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பின்னத்தூராரின் இலக்கிய நோக்கு

இலக்கியத்தின் அழகையும் சிறப்பையும் உட்பொருளையும் நுட்பங்களையும் வெளிப்படுத்தும் விதத்தில் காணும் பார்வை இலக்கிய நோக்கு எனப்படும். ஒவ்வொரு இலக்கியத்தையும் அதன் வடிவத்திற்கேற்பவும் பாடுபொருளுக்கேற்பவும் உத்திகளுக்கேற்பவும் அணுகுதல் வேண்டும்.

நற்றிணை அகப்பாடல்களின் தொகுப்பாகும். இவ்விலக்கியத்தைப் பின்னத்தூரார் பல்வேறு தளங்களில் நின்று விளக்கியுள்ளார். அவற்றுள் இலக்கிய வகைமை நோக்கு, மூலபாட நோக்கு, ஒப்பியல் நோக்கு, புராண நோக்கு, வரலாற்று நோக்கு, வடநூல் மரபு நோக்கு, அறவியல் நோக்கு, வாழ்வியல் நோக்கு என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

## இலக்கிய வகைமை நோக்கு

இலக்கியங்களை வகைமைக்கேற்ப அணுகுதல் இலக்கிய வகைமை நோக்காகும். அவ்வாறு நோக்குதல் மூலம் சிறந்த முடிபுகளைக் கூற இயலும். தமிழண்ணல், “தனி இலக்கியங்களைப் பண்படுத்தி அவற்றைச் சிறப்பாகத் தோற்றுவிக்கவும் இலக்கியம் மேலும் மேலும் திருந்திய வடிவம் பெறவும் ‘இலக்கிய வகைமை’ பற்றிய கல்வி இன்றியமையாததாகும்” (ஒப்பிலக்கிய அறிமுகம், ப. 155) என்பர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைப் பாடல்களை வகைமை நோக்கில் கண்டு விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளைத் தொகுத்துக் கூறும் போது,

திணையே கைகோள் கூற்றுவகை எனாஅக்
கேட்போர் களனே காலவகை எனாஅப்
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ (தொல். 1259)

என்று சுட்டுவர். இதில் இடம்பெறும் உறுப்புகள் அகப்பாடல்களுக் குரியனவாகும். இதனால் அகப் பாடல்களை இவ் உறுப்புக்களினடிப் படையில் நோக்கினால் பல உண்மைகளைப் புலப்படுத்த இயலும் என்பது தெளிவாகும். அவ்வகையில் பின்னத்தூரார் ஒவ்வொரு நற்றிணைப் பாடலுக்கும் திணை, கைகோள், கூற்று, கேட்போர், காலம், பயன், மெய்ப்பாடு ஆகிய உறுப்புகளைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

உள்ளுறை, இறைச்சி ஆகிய இரண்டும் அகப்பாடல்களுக்கே உரிய வெளியீட்டு உத்திகளாகும். வகைமை நோக்கில் இவையிரண்டும் அகப்பாடல்களுக்கே உரியனவாகச் சுட்டப்பெறும். பின்னத்தூரார் நற்றிணைப் பாடல் ஒவ்வொன்றுக்கும் உள்ளுறையோ இறைச்சியோ காண முற்பட்டுள்ளார்.

## திணை நோக்கு

நற்றிணைப் பாடல்கள் முழுவதும் அன்பின் ஐந்திணையில் அடங்கும். பின்னத்தூரார் இப்பாடல்களைத் திணை அடிப்படையில் நோக்கியுள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் திணை சுட்டி விளக்குதலை நெறியாகக் கொண்டுள்ளார்.

"வருமழை கரந்த வால்நிற விசும்பின்" (நற். 76) என்று தொடங்கும் பாடல் பாலைத்திணைப் பாடலாகும். இது தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்லும் தலைவன் இடைச்சுரத்தில் அவளுக்குக் கூறுவதாக அமைந்தது. இதில் தலைவன் தலைவியின் ஊன்ரை,

....... ........ நும்மூர்ப் புன்னை
வீமலர் உதிர்ந்த தேனாறு புலவின்
கானல் ஆர் மணல் (நற். 76)

என்று சுட்டுகிறான். இதற்கு நினது ஊரின்கண் உள்ள புன்னையின் காம்பு இற்ற மலர், மிகுதியாக உதிர்ந்ததனால் தேன் மணம் வீசுகின்ற புலவினையுடைய கழிக்கரைச் சோலை என்பது பொருள். இதன் அடிப்படையில் இப்பாடலுக்குப் பின்னத்தூரார் "இது நெய்தலிற் களவு" (ப. 97) என்று உரை கூறுவர்.

"வில்லாப் பூவின் கண்ணி சூடி" (நற். 146) என்று தொடங்கும் பாடல் பின்னின்ற தலைவன் முன்னிலைப் புறமொழியாகத் தோழி கேட்பச் சொல்லியதாகும். இதில் தோழியை இரந்து குறைபெறாது வருந்தி மடலே பொருளென மதித்த தலைமகன் தன் நெஞ்சை நோக்கி "மாயோளால் வருந்திய நெஞ்சே, பனை மடலால் கட்டிய குதிரையை உடையாய். கதிர் ஏறி ஒழியுமளவும் இம்மரத்தின் கீழே சிறிது பொழுது இறங்கியிருந்து பின்பு செல்வாயாக" என வருந்திக் கூறுகிறான். இதனை,

> **வில்லாப் பூவின் கண்ணி சூடி**
> **நல்லே முறுவலெனப் பல்லூர் திரிதரும்**
> **நெடுமாப் பெண்ணை மடல்மா னோயே**
> **கடனறி மன்னர் குடைநிழல் போலப்**
> **பெருந்தண் என்ற மரன்நிழல் சிறிதிழிந்து**
> **இருந்தனை சென்மோ** (நற். 146)

என்பர் கந்தரத்தனார். பின்னத்தூரார் இப்பாட்டுக்கு முதலில் பாலை என்றும் உரை இறுதியில் "கந்தருவத்துட்பட்டு வழீஇய பெருந்திணை" (ப. 183) என்றும் உரை கூறுவர். தலைவனின் ஏறிய மடற்றிறம் இப்பாடலில் சுட்டப்பட்டுள்ளமையைக் கூர்ந்து நோக்கிப் பின்னத்தூரார் இவ்வாறு கூறியுள்ளார்.

இவற்றால் நற்றிணையின் ஒவ்வொரு பாடலையும் திணை அடிப்படையில் நோக்குதலைப் பின்னத்தூரார் இயல்பாகக் கொண்டுள்ளமை தெளிவாகும்.

## கைகோள் நோக்கு

கைகோள் என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும். இது களவு, கற்பு என இருவகைப்படும். இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்ற நான்கு வகையானும் அவற்றைச் சார்ந்து வருபவையும் 'களவு' எனப்படும் (தொல். 1442). களவொழுக்கம் வெளிப்படுதலும், களவொழுக்கமின்றித் தமரானே பெறுதலும் இவை முதலாக முறைமையிற் திரியாது மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல் தீர்த்தலும், பிரிதலும் கற்பு எனப்படும் (தொல். 1443). பின்னத்தூரார் நற்றிணைப் பாடல்களைக் கைகோள் அடிப்படையில் நோக்குதலை இயல்பாகக் கொண்டுள்ளார்.

"அறவர் வாழி தோழி மறவர்" (நற். 86) என்று தொடங்கும் பாடல், குறித்த பருவத்தில் வினை முடித்து வந்தமை கேட்ட தோழி

தலைவிக்கு உரைத்ததாகும். இதில் இளவேனிற் பருவத்து வருவேன் எனக் கூறிச் சென்று வினை முடித்து மீண்டு வந்ததைக் கேள்வியுற்ற தோழி தலைவியை நோக்கி, "நாம் முன்பனிக்காலத்து நடுங்கும்படி நம்மைப் பிரிந்து சென்று இளவேனிற் பருவத்தைக் கருதி வந்த தலைவர்தாம் அறநெறியுடையார் காண்" என்று மகிழ்ந்து கூறுகிறாள். இப்பாடலுக்குப் பின்னத்தூரார் "கைகோள் - கற்பு" (ப. 109) என்று உரை கூறுவர்.

"விருந்தெவன் செய்கோ தோழி சாரல்" (நற். 112) என்று தொடங்கும் பாடல் பருவ வரவின் கண் ஆற்றாளாய தலைவியைத் தோழி வற்புறுத்தியதாகும். இதில் தோழி, "தலைவன் வருதலை அறிந்து கடலின் நீரை ஆவி வடிவாக வாங்கிப் பருகி மின்னி இடித்துப் பெய்யத் தொடங்கிய மழைக்கு யான் யாது கைம்மாறு செய்ய வல்லேன்" என்று கூறுகிறாள். பகுத்தறிவில்லாத முகிலும் தலைவன் வருவதறிந்து விரும்பி வருதலைக் கண்டு வைத்தும் எல்லா அறிவுமுடைய நீ அவன் வருகையை அறியாது புலம்புகின்றனையே" என்று இரங்குகிறாள். இதனை,

**பெருங்கல் நாடன் வரவறிந்து விரும்பி**
**மாக்கடல் முகந்து மணிநிறத் தருவித்**
**தாழ்நீர் நனந்தலை அழுந்துபடப் பாஅய்**
**மலையிமைப் பதுபோல் மின்னிச்**
**சிலைவல் ஏற்றொடு செறிந்த இம் மழைக்கே (நற். 112)**

என்பர் பெருங்குன்றூர் கிழார். இப்பாடலுக்குப் பின்னத்தூரார் "கைகோள் - இரண்டற்கும் பொது" (ப. 141) என்பர்.

இவ்வாறு பின்னத்தூரார் எல்லாப் பாடல்களுக்கும் கைகோளை வரையறுக்கவில்லை. ஒரு பாடலுக்கு (80) மருதத்துக்களவு என்றும், ஒரு பாடலுக்கு (76) நெய்தலிற் களவு என்றும், பதினான்கு (1, 18, 24, 26, 86, 89, 111, 148, 157, 241, 242, 252, 262, 367) பாடல்களுக்குக் கற்பு என்றும், ஒரு பாடலுக்கு (153) இரண்டற்கும் பொது என்றும் கைகோள் சுட்டியுள்ளார். இதனால் வெளிப்படையாகக் கைகோள் புலப்படும் பாடல்களை விடுத்துக் கைகோள் வகுப்பதில் சிக்கல் உள்ள பாடல்களுக்கு மட்டுமே கைகோள் வகுத்திருப்பது புலனாகும்.

## கூற்றுநோக்கு

அகப்பாடல்கள் அனைத்தும் கூற்று முறையினவாகும். தொல்காப்பியர் களவில் கூற்றுக்குரியோராக தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி என்னும் அறுவரையும்

வரையறுப்பர் (தொல். 1445). இவர்களோடு பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவரையும் சேர்த்துப் பன்னிருவரைக் கற்பில் கூற்று நிகழ்த்துவோராகக் கூறுவர் (தொல். 1446).

அகப்பாடல்களைக் கூற்று அடிப்படையில் நோக்கும் பொழுதே பல நுட்பங்கள் புலனாகும். அகப்பாடல்களை உணர்வதற்குக் கூற்றுநோக்கு இன்றியமையாததாகும். பின்னத்தூராரிடம் இந்நோக்கு இயல்பாக உள்ளது.

"பூம்பொழி உழுவைப் பேழ்வாய் ஏற்றை" (நற். 104) என்று தொடங்கும் பாடல் தலைவி ஆறு பார்த்துற்ற அச்சத்தாற் சொல்லியதாகும். தலைவன் இரவு நடுயாமத்தில் பாம்பு உறையும் பிளப்புகளை உடைய உயர்ந்த மலைகள் புரண்டு விழும்படியாகச் சினந்து இடி முழங்கி மோதுகின்ற இருட்பொழுதில் வருகின்றான். நடந்து செல்ல இயலாதவாறு பெருவெள்ளங் குறுக்கிட்டு ஓடுகின்ற மலைச்சாரலின் கண்ணே நோக்குதற்கரிய சிறிய நெறியையும் கடந்து வருகின்றான். இவற்றை எண்ணித் தலைவி அஞ்சுகிறாள். இதனை,

**யானே அன்றியும் உளர்கொல் பானாள்**
**பாம்புடை விடர ஓங்குமலை மிளிர**
**உருமுச்சிவந்து எறியும் பொழுதோடு பெருநீர்**
**போக்கற விலங்கிய சாரல்**
**நேர்க்கருஞ் சிறுநெறி நினையு மோரே** **(நற். 104)**

என்பர் பேரிசாத்தனார். இப்பாடலை விளக்கும் பின்னத்தூரார், "ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி வரைதல் வேட்கைப் பொருளது (இறை. 30) என்றமையானும் 'போக்கும் வரைவும் மனைவிக் கட்டோன்றும்' (தொல். பொ. 225) என்றமையானும் வரைதல் வேட்கைக் கிளவி முற்றும் தலைவி கூற்றாதலின் ஈண்டுத் தலைவி கூற்றென்க" என்பர்.

"அன்பினர் மன்னும் பெரியர் அதன்றலை" (நற். 224) என்று தொடங்கும் பாடல் தோழி கூற்றுப் பாடலாகும். தோழியால் பிரிவுணர்த்தப்பட்ட தலைமகள் தலைவன் பிரிவை உறுதி செய்யும் விதத்தில் மீண்டும் வினவத் தோழி, "உன்னைப் பிரியேன்" என்று கூறித் தேற்றிச் சுரத்தின்கண் பிரிந்து சென்ற நம் காதலரிடம் யான் மொழிவது யாது?" என்று கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் வரும்,

*"பின்பனி அமையம் வருமென முன்பனிக்*
*கொழுந்து முந்துறீஇக் குரவுஅரும் பினவே*
*புணர்ந்தீர் புணர்மி னோவென இணர்மிசைச்*
*செங்கண் இருங்குயில் எதிர்குரல் பயிற்றும்*
*இன்ப வேனிலும் வந்தன்று நம்வயின்*
*பிரியலம்"*

என்னும் அடிகளைப் பின்னத்தூரார், "பின்பனியென்பது முதல் பிரியலமென்றதன் காலும் தலைவன் கூற்றைக் கொண்டு கூறியது" என்பர். இப்பாடலில் தோழி தலைவன் முன்பு கூறிய கூற்றைக் கொண்டு தலைவியிடம் தன் வருத்தத்தை வெளிப்படுத்துகிறாள். இது பாடலில் தெளிவாகத் தெரியக் கூடிய நிலையில் இருந்தாலும் பின்னத்தூரார் விளக்கவுரையிலும் அதனைச் சுட்டியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றால் பின்னத்தூரார் ஒவ்வொரு பாடலையும் கூற்று அடிப்படையில் நுட்பமாக நோக்கியுள்ளமை புலனாகும்.

## கேட்போர் நோக்கு

அகப்பாடல்களில் ஒருவர் கூற்று நிகழ்த்துவோராகவும் மற்றொருவர் கேட்போராகவும் இருப்பர். இவ்வாறு கேட்போர் பற்றிய வரையறைகளையும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். தலைவி, தலைவன் ஆகியோர் கூறுவதைக் கேட்போர் களவு, கற்பொழுக்கங்களில் கூற்று நிகழ்த்துவதற்குரிய பிற ப்தின்மராவர் (தொல். 1452). பார்ப்பார், அறிவர் ஆகிய இருவர் கூற்றையும் எல்லோரும் கேட்பர் (தொல். 1453). பரத்தை, வாயில் என்ற இரு பகுதியாரும் தலைவியைக் கேட்போளாகக் கருதிக் கூறாத கூற்றுகள் பயனற்றவையாகும் (தொல். 1454). வாயில்கள் கூற்று, அவர் தம்முள்ளும் கேட்டற்குரியனவாகும் (தொல். 1455). ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கடற்கரைச் சோலை, விலங்கு, மரங்கள், பொழுது, பறவைகள், நெஞ்சு ஆகிய இவையும் இவை போல்வன பிறவும் பேசுவன போலவும் கேட்பன போலவும் செய்யுள்களில் அமையும் (தொல். 1456). பின்னத்தூரார் கேட்போர் அடிப்படையில் பாடல்களைக் கண்டு விளக்கியுள்ளார்.

"நெய்தல் கூம்ப நிழல்குணக்கு ஒழுக" (நற். 187) என்று தொடங்கும் பாடல் பகற்குறி வந்து மீளும் தலைவன் செலவு நோக்கித் தலைவி தன்னுள்ளே சொல்லியதாகும். இதில் தலைவி, "கானற்சோலையும் விளங்குதல் குறைவதாயிற்று. காதலன் ஏறிச் செல்லும் தேரும் சென்று மறைந்து விட்டது. ஆதலின் இவ்வூரொடு,

நாம் அவனை முயங்கியிருந்த சோலையும் இனி நமக்கு எவ்வண்ணமாகத் தோன்றும்" என்று மனனழிந்து கூறுகிறாள். இப்பாடலுக்குப் பின்னத்தூரார் "கேட்போர் - நெஞ்சம்" எனக் கூறுவர். பாடலில் வெளிப்படையாக நெஞ்சை விளிக்கும் சொல் இல்லாத நிலையில் கேட்போர் நெஞ்சம் எனக் குறிப்பு எழுதுதல் பின்னத்தூராரின் கேட்போர் நோக்கைப் புலப்படுத்தும்.

### காலநோக்கு

தொல்காப்பியர் காலம் என்னும் உறுப்பை,

**இறப்பே நிகழ்வே எதிரது என்னும்**
**திறத்தியல் மருங்கின் தெரிந்தனர் உள்ளப்**
**பொருள் நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்** (தொல். 1458)

என்னும் நூற்பாவில் விளக்குவர். இதனால் காலம் என்னும் இவ் உறுப்பு சிறுபொழுது, பெரும்பொழுதுகளிலிருந்து வேறுபட்டது என்பது புலப்படும். பின்னத்தூரார் கால அடிப்படையில் நோக்குதலை இயல்பாகக் கொண்டுள்ளார்.

"முற்றா மஞ்சள் பசும்புறங் கடுப்ப" (நற். 101) என்று தொடங்கும் பாடல் பின்னின்ற தலைமகன் தோழி கேட்பச் சொல்லியதாகும். இதில் தலைமகன், "பரதவர் மடமகளுடைய கண்களை யான் பார்க்கும் முன்பு புலவு நாற்றத்தையுடைய பாக்கமும் எனக்கு இனிதாகவே இருந்தது. இப்பொழுது அஃது அங்ஙனம் இன்மையால் இரங்கத்தக்கதாய் உள்ளது" என்று வருந்திக் கூறுகிறான். இதனை,

**இனிதுமன் அளிதோ தானே துனிதீர்ந்து**
**அகன்ற அல்குல் ஐதமை நுசுப்பின்**
**மீனெறி பரதவர் மடமகள்**
**மானமர் நோக்கங்காணா ஊங்கே** (நற். 101)

என்பர் வெள்ளியந்தின்னனார். இதற்குப் பின்னத்தூரார், "காலம் - நிகழ்காலம்" எனக் குறிப்பு எழுதியுள்ளார். தலைவன் தலைவியைக் கண்ட பிறகு தான் அடைந்து கொண்டிருக்கின்ற துன்பத்தை இக்கூற்றில் தோழிக்கு உணர்த்திய நுட்பம் கருதிப் பின்னத்தூரார் இக்குறிப்பு எழுதியுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

### பயன்நோக்கு

இந்தச் செயலால் இந்தப் பயன் விளையும் என்பதைத் தொகுத்துக் கூறுதல் பயன் என்பர் தொல்காப்பியர் (தொல். 1459).

பின்னத்தூரார் நற்றிணையில் உள்ள நானூறு பாடல்களுக்கும் பயன் கூறியுள்ளார்.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி" (நற். 172) என்று தொடங்கும் பாடல் பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயதாகும். இதில், தோழி, "நாங்கள் தோழியரோடு சென்று மணலில் புன்னை விதையை மறைத்து வைத்து விளையாடினோம். அப்பொழுது மறந்து வைத்து விட்ட புன்னை விதை முளைத்து முளை தோன்றியது. அப்புன்னையை நெய்கலந்த இனிய பாலை நீராக வார்த்து வளர்த்தோம். அதனைக் கண்டு எம் அன்னை இஃது உங்களுடன் பிறந்த தங்கை என்று கூறினள். அதனால் இப்புன்னையின் முன்னர் நும்மொடு நகையாடவும் அஞ்சுகின்றோம். வேண்டுமெனில் வேறு நிழலும் உண்டன்றோ" என்று பகற்குறி மறுத்துக் கூறுகிறாள். இப்பாடலுக்குப் பின்னத்தூரார், "நும்மொடு நகையாடுதற்கு நாணுது மென்றதனாலே பகற்குறிக்கு உடன்படாமையும் பிறர் காணுதற்கு நாணுதுமென்று போதரலால் களவுக்கு அஞ்சின மென்றமையுங் குறிப்பாற் கூறி மறுத்து வரைவு கடாயது ...... பயன் - வரைவு கடாதல்" என்று உரை கூறுவர்.

பின்னத்தூரார் ஒரு பாடலுக்கு இரு பயன்களைக் கூறுதலையும் இயல்பாகக் கொண்டுள்ளார். அவை பின்வருமாறு:

1. கேட்ட பாகன் தேர் கடவல்; மகிழ்தலுமாம் (நற். 81)
2. வரைவுடன்படுத்தல்; தலைவியை ஆற்றுவித்தலுமாம் (நற். 138)
3. வரைவுடன்படுத்தல்; அயாவுயிர்த்தலுமாம் (நற். 144)
4. தோழி குறை முடிப்பது, அன்றேல் தானே கூறியாறுதல் (நற். 377)

பின்னத்தூரார் இரண்டு துறைகள் உள்ள பாடலுக்கு இரண்டு பயன்கள் கூறியுள்ளார். இதனை, வரைவு கடாதல், மகிழ்தல் (நற். 354) என்பது உணர்த்தும்.

நற்றிணையில் எழுபது பாடல்களுக்கு அயாவுயிர்த்தல் என்றும் அறுபத்தாறு பாடல்களுக்கு வரைவுகடாதல் என்றும் முப்பத்தொன்பது பாடல்களுக்கு தலைவியை ஆற்றுவித்தல் என்றும் பயன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு நானூறு பாடல்களுக்கும் அப்பாடலால் விளையும் பயனைச் சுட்டியிருப்பது (பின்னிணைப்பு காண்க) பின்னத்தூராரின் இலக்கிய நோக்கைப் புலப்படுத்தும்.

## மெய்ப்பாடு நோக்கு

> **உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான்**
> **மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்** (தொல். 1460)

என்று தொல்காப்பியர் மெய்ப்பாட்டுக்கு இலக்கணம் வகுப்பர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எட்டும் அடிப்படையான மெய்ப்பாடுகளாகும். தமிழண்ணல், "செய்யுளின் பொருள் நேரில் கண்டாங்கு வெளிப்படுவதே மெய்ப்பாடாகும்" (மெய்ப்பாடு, பக். 38-39) என்பர். பின்னத்தூரார் நற்றிணையின் நானூறு பாடல்களுக்கும் மெய்ப்பாடு சுட்டியுள்ளார்.

"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்" (நற். 1) என்னும் பாடலுக்கு உவகையையும் "அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து" (நற். 2) என்ற பாடலுக்கு அழுகையையும் மெய்ப்பாடாகச் சுட்டுவர். இவ்வாறு எண்வகை மெய்ப்பாடுகள் அடிப்படையில் மட்டுமல்லாமல் பிற மெய்ப்பாடுகள் அடிப்படையிலும் விளக்குவது பின்னத்தூராரின் இயல்பாக உள்ளது.

"கண்ணுந் தோளுந் தண்நறுங் கதுப்பும்" (நற். 219) என்னும் தாயங்கண்ணனார் பாடலுக்கு, "பழநலமிழந்து பசலை பாயவென்றது, பசலை பாய்தல், உயிர்பெரும் பிறிதாயினு மென்றது, கலக்கம்"[17] என்று கூறுவர்.

இவ்வாறு பின்னத்தூரார் நற்றிணைப் பாடல்களில் பொதிந்துள்ள மெய்ப்பாடுகளை நுட்பமாகக் கண்டு விளக்கியுள்ளார்.

## உள்ளுறை நோக்கு

உள்ளே மறைந்து உறையும் பொருள் உள்ளுறை எனப்படும். வெளிப்படையாகச் சொல்ல இயலாதவற்றைக் குறிப்பால் புலப்படுத்துவதற்கு உள்ளுறை பயன்படும். இதற்குத் தொல்காப்பியர்,

> **உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிகென**
> **உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்** (தொல். 994)

என்று இலக்கணம் வகுப்பர். உள்ளுறையின் பயன்பாடுகளைத் தமிழண்ணல், "உள்ளுறை தலைவனுடைய தீங்குகளை மங்கல மொழியாற் கூறவும் தலைவனைத் திட்டிக் கூறவும் தலைவனின் ஆண்மைத் தன்மையில் பழிபடக் கூறவும் பயன்படுவது. அஃதாவது தலைவனது குற்றங்களைச் சுட்டித் திருத்தும் நோக்குடன் ஆளப்படுவது" (உள்ளுறை, ப. 87) என்பர்.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நூற்றுப் பதினொரு[1] பாடல்களுக்கு உள்ளுறை கண்டு கூறியுள்ளார். "கொழுஞ்சுளைப் பலவின் பயங்கெழு கவா அன்" (நற். 326) என்று தொடங்கும் மருதனிளநாகனார் பாடலில்,

**கொழுஞ்சுளைப் பலவின் பயங்கெழு கவா அன்**
**செழுங்கோள் வாங்கிய மாச்சினைக் கொக்கின்**
**மீன்குடை நாற்றந் தாங்கல் செல்லாது**
**துய்த்தலை மந்தி தும்மும் நாட** *(நற். 326)*

என்னும் அடிகள் நாடனைச் சிறப்பிப்பனவாகும். இதற்குப் பின்னத்தூரார், ''பலாமரம் தினைப்புனமாகவும், கொக்கு தலைவனாகவும், மீன் தலைவியாகவும், குடைதல் இன்பந் துய்த்தலாகவும், நாற்றம் அலராகவும், மந்தி அன்னையாகவுங் கொண்டு பலாமரத்தின் மீது கொக்கிருந்து மீனைத் தின்னுதலானாகிய நாற்றத்தைத் தாங்க மாட்டாது மந்தி தும்முதல் போலத் தினைப் புனத்து நீ வந்து இவளைக் கலந்து செல்லுதலால் உண்டாகிய அலரைத் தாங்க மாட்டாது அன்னை சினந்து பலகாலும் நோக்கா நிற்கும் என்றதாம்" என்று உள்ளுறை கூறுவர்.

தலைவி தலைவன் வரும் வழியின் கொடுமையை எண்ணி அஞ்சி வேறுபட, அதனை அறியாத செவிலி வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்கின்றாள். அந்நிலையில் தலைவியைக் காண வந்த தலைவன் சிறைப்புறமாக நிற்கத் தலைவி தோழியிடம் தலைவனுடைய மலையைச் சிறப்பித்து,

**பெருந்தண் குளவி குழைத்த பாவடி**
**இருஞ்சே றாடிய நுதலகொல் களிறு**
**பேதை ஆசினி ஒசித்த**
**வீதா வேங்கைய மலைகிழ வோற்கே** *(நற். 51)*

என்று கூறுகிறாள். இதற்கு, "பெரிய குளிர்ச்சியுடைய பச்சிலை மரத்தை (குளவி) முறித்து உழக்கின பரந்த அடிகளையுடைய கரிய சேற்றை அப்பிய நெற்றியையுடைய கொல்ல வல்ல களிற்றியானை அறியாமையால் ஆசினியை முறித்து மலருதிர்ந்து பரவிய வேங்கை

---

*1. நற். 4, 15, 22, 31, 35, 36, 44, 47, 49, 51, 57, 59, 63, 65, 74, 82, 85, 91, 94, 98, 103, 104, 107, 108, 116, 119, 125, 127, 131, 137, 138, 142, 144, 145, 151, 158, 168, 171, 175, 176,, 178, 180, 181, 191, 195, 199, 203, 210, 211, 213, 217, 222, 228, 232, 233, 239, 244, 247, 251, 257, 258, 260, 263, 268, 272, 273, 275, 276, 278, 280, 282, 283, 285, 288, 290, 291, 294, 297, 300, 303, 304, 309, 312, 315, 317, 322, 326, 328, 330, 331, 334, 336, 340, 344, 345, 350, 353, 358, 359, 367, 372, 373, 375, 386, 388, 390, 393, 395, 396, 399, 400.*

மரத்தின் கீழ் தங்கா நிற்கும் மலை கிழவோன்” என்பது பொருளாகும். இதில் அமைந்துள்ள உள்ளுறையைப் பின்னத்தூரார்,

“குளவியைக் குழைத்த களிறு தலைவியை நலனுண்டு வாடவிட்ட தலைவனாகவும், அது சேற்றை நெற்றியிலணிந்தது ஊரார் தூற்றும் பழிச்சொல்லைத் தலைவன் மேற்கொண்டதாகவும், அறியாமையால் ஆசினியை நசித்தது அவன் அறியாமையால் இதுகாறும் வரைந்தெய்து நெறியைக் கைவிட்டதாகவும், களிறு வேங்கையின் கீழே தங்கியிருப்பது தலைவன் ஒரு சிறைப்புறமாக வந்து தங்கியிருப்பதாகவுங் கொள்க” என விளக்குவர்.

## இறைச்சி நோக்கு

இறைச்சி என்பது உரிப்பொருள் புறத்துப் பிறப்பதாகும். தமிழண்ணல், “இறைச்சி அகப்பாடலுக்கு மட்டுமே உரியது; அவ்வத் திணைக்குரிய கருப்பொருளின் அடிப்படையிலே வருவது; தலைமகனது நாட்டிற்கும் ஊருக்கும் அடையாகி வருவது; தலைமகன், தலைவி, தோழி, கண்டோர் போல்வாரின் கூற்றுக்களில் அவர்கள் கண்ட இயற்கைக் காட்சிகளைப் பற்றியதாய், அவரவர் நிலைக்கேற்ப அமைவது. அகப்பாட்டு மரபு வழியை நன்கு அறிந்தவர்களுக்கே, இறைச்சியால் போந்த பொருள் புலனாகும்” (இறைச்சி, ப. 28) என்பர். பின்னத்தூரார் நற்றிணையில் நூறு[2] பாடல்களுக்கு இறைச்சி கண்டு கூறியுள்ளார்.

“மலையிடம் படுத்துக் கோட்டிய கொல்லை” (நற். 209) என்று தொடங்கும் நொச்சி நியமங்கிழார் பாடலில்,

> **சிலவித்து அகல விட்டுடன் பலவிளைந்து**
> **இறங்குகுரல் பிறங்கிய ஏனல் உள்ளாள்**
> **மழலையங் குறுமகள்** (நற். 209)

என்பதற்குப் பின்னத்தூரார், “சிலவாய விதையை விதைத்துப் பலவாய பயனைப் பெறும் ஏனல் காவலின் இவளை விரும்பி யானும் நின்பாற் கூறும் சிலவாய கூற்றினாற் பெற்று இவள் கொடுக்கின்ற பலவாய இன்பந் துய்ப்பேனாக வென்றதாம்” என்று இறைச்சி கூறுவர்.

---

2. நற். 3, 6, 7, 13, 14, 17, 24, 29, 31, 33, 34, 43, 48, 63, 66, 73, 74, 78, 79, 80, 84, 85, 93, 95, 101, 102, 105, 111, 112, 113, 115, 119, 121, 125, 126, 138, 148, 151, 162, 163, 164, 165, 167, 169, 173, 174, 185, 186, 189, 192, 194, 195, 202, 205, 209, 212, 219, 223, 230, 231, 235, 236, 249, 252, 267, 271, 274, 279, 280, 281, 292, 296, 298, 302, 310, 318, 323, 325, 327, 329, 332, 333, 343, 347, 352, 353, 354, 356, 357, 362, 365, 366, 372, 375, 383, 384, 389, 391, 392, 399.

ஒரு பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட இறைச்சிகளைக் கண்டு விளக்குவதும் பின்னத்தூரராரிடம் இயல்பாக உள்ளது. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்தில் வாராமையால் தலைவி வருந்துகிறாள். அந்நிலையில் தலைவன் வரைவொடு வருகின்ற குறிப்பறிந்த தோழி தலைவியை நோக்கி, "நிதியுடன் தலைவன் வருகின்ற தேரின் ஒலியைக் கேட்பாயாக, இனி நாம் படுகின்ற துயரம் நீங்கி விடும்' என்று மகிழ்ந்து கூறுகிறாள். இப்பாடலில் நெய்தல் நிலக் கானலைக் கீரங்கீரனார்,

**கோட்சுறா வழங்கும் வாட்கேழ் இருங்கழி**
**மணியேர் நெய்தல் மாமலர் நிறையப்**
**பொன்நேர் நுண்தாது புன்னை தாஅம்**
**வீழ்தாள் தாழைப் பூக்கமழ் கானல்** *(நற். 78)*

என்பர். இதற்குப் பின்னத்தூரார், "(1) இருங்கழியின் நெய்தல் மலர் நிறைய நுண்ணிய தாதைப் புன்னை பரப்பாநிற்கு மென்றது, சேரியிடத்து நமர் கையேற்ப நிரம்பிய பொற்குவியலைச் சேர்ப்பன் நம்மை வரைதற் பொருட்டுக் கொடாநிற்கு மென்றதாம். (2) தாழம்பூவின் மணம் கானலெங்குங் கமழுமென்றது நின் வரைவு நாடெங்கும் மாட்சிமைப்படு மென்றதாம்" என்று இரு இறைச்சிப் பொருள் கூறுவர்.

இவற்றால் பின்னத்தூரரார் ஒவ்வொரு பாடலையும் நுட்பமாக நோக்கி இறைச்சி காண்பது புலனாகும்.

## மூலபாட நோக்கு

ஒரு பாடலில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்கள் காணப்படும் பொழுது அதில் சரியான பாடத்தைத் தேர்ந்தெடுப்பது மூலபாட ஆய்வாகும். சு. பாலச்சந்திரன், "ஒரு குறிப்பிட்ட மூலநூலில் பாட பேதங்கள் மிகுதியாக வளர்ந்து பெருகிவிட்ட நிலையில், அம் மூலநூலின் சொல்லையும் பொருளையும் நன்கு ஆராய்ந்து இன்ன பாடந்தான் இன்ன புலவரால் அல்லது கவிஞரால் அல்லது கலைஞரால் கருதப்பட்டது என்பதைக் கண்டறிய முற்படுவது மூலபாடத் திறனாய்வு" (இலக்கியத் திறனாய்வு, ப. 38) என்பர். இம்மூலபாட நோக்கு, பழந்தமிழ் இலக்கியங்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். பின்னத்தூரரார் நற்றிணையில் ஐம்பத்தொன்பது பாடவேறுபாடுகளைச் சுட்டியுள்ளார்.

பேரிசாத்தனார் பாடலில் (நற். 25) சேணாறு நறவின், சேணாறு பிடவின் என்று இரு பாடவேறுபாடுகள் உள்ளன. இதில்

பின்னத்தூரார் ‘சேணாறு நறவின்’ என்பதைப் பாடமாகக் கொண்டுள்ளார். நறவம்பூ நெடுந்தூரம் மணங்கமழும் இயல்புடையது என்பதால் அதனைப் பாடமாகக் கொண்டது பொருந்துவதாகும்.

பேரிசாத்தனாரின் மற்றொரு பாடலில் (நற். 37) கார் செய்மாலை, கார் செய்காலை என இரு பாடவேறுபாடுகள் உள்ளன. இவற்றுள் பின்னத்தூரார் கார் செய்மாலை என்பதையே பாடமாகக் கொண்டுள்ளார். இப்பாடல் முல்லைத் திணைப் பாடல் என்பதாலும் மாலைப் பொழுது முல்லைத் திணைக்குரியது என்பதாலும் “காரும் மாலையும் முல்லை” (தொல். 952) என்பதாலும் ‘கார் செய் மாலை’ எனக் கொண்ட பாடமே சரியானதாகும்.

இவற்றால் பின்னத்தூரார் சரியான மூலபாடத்தைத் தேர்ந்து விளக்குதலை இயல்பாகக் கொண்டிருந்தமை விளங்கும்.

## ஒப்பியல் நோக்கு

இலக்கியங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு விளக்குவதன் மூலம் அதன் சிறப்பும் நயமும் அழகும் புலப்படும். காலந்தோறும் ஒத்த சிந்தனை வெளிப்படுவது ஒப்பீட்டால் தெளிவாகும். சில சமயங்களில் கருத்து விளக்கமாகவும் ஒப்பீடு அமையும். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைப் பாடலடிகளையும் கருத்துகளையும் பல்வேறு இலக்கியங்களோடு ஒப்பிட்டு விளக்குவதை இயல்பாகக் கொண்டுள்ளார்.

இரந்து பின்னின்ற தலைவன் முன்னிலைப் புறமொழியாகத் தோழி கேட்ப,

**வில்லாப் பூவின் கண்ணி சூடி** (நற். 146)

மடலேற நினைத்திருத்தலைச் சுட்டுவான். இதற்குப் பின்னத்தூரார், “வில்லாப்பூ - விலைப்படுத்தற்காகாத பயனற்ற பூ; அவை பூளை, ஆவிரை, உழிஞை, எருக்கம் என்பன. ‘அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின், பிணையலங் கண்ணி மிலைந்து’ (கலி. 138) எனவும், ‘பூளை பொல மலர், ஆவிரை வேய்வென்ற, தோளா ளெமக்கீத்தபூ’ (கலி. 138) எனவும் ‘பூவல்ல பூளை யுழிஞையொ டியாத்த’ (கலி. 140) எனவும் வருவனவற்றாலறிக” என உரை கூறுவர்.

நல்லந்துவனார் தலைவனை “தம்மோன்” (நற். 88) என்பர். இதற்குப் பின்னத்தூரார், “தம்மோன் - தம்மான் - தமது தலைவன் ‘தம்மானை யறியாத சாதியா ருளரே’ என்றார் தேவாரத்திலும்” என்று உரை கூறுவர்.

இவற்றால் பின்னத்தூரார் நற்றிணைப் பாடற் கருத்துகளையும் சொல்லாட்சிகளையும் ஒப்பிடுவதன் மூலம் விளக்கியுள்ளமை புலனாகும். சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கியங்கள் வரையான பல்வேறு இலக்கியங்களையும் ஒப்பீடாகக் கூறியுள்ளமை அவரது பரந்துபட்ட இலக்கிய அறிவை உணர்த்தும்.

## புராண நோக்கு

எது தொன்று தொட்டு இன்றுவரை பரவியிருக்கிறதோ அது புராணம் எனப்படும். "புராணங்களில் இடம் பெறும் செய்திகள் வாழ்க்கை நியதிகளுடனும் சமுதாய ஒழுங்கு முறையுடனும் இறை நம்பிக்கையோடும் தொடர்பு கொண்டிருந்தன" (இரா. பாலசுப்பிரமணியன், புராணவியல், ப. 3) பின்னத்தூரார் நற்றிணையைப் புராணக் கருத்துகளின் அடிப்படையில் விளக்குதலையும் இயல்பாகக் கொண்டுள்ளார்.

வரைவு மலிந்த தோழி தலைமகளிடம், "மலைப்பக்கத்தில் உள்ள தினைப்புனத்தில் முற்றிய கதிர்களைக் கொய்த மந்தி கடுவனோடு வரை மீது ஏறி அகங்கை நிறையக் கசக்கித் தூய்மை செய்து கவுள் நிறைய உண்டு நோன்புடையார் தைத்திங்கட் பிறப்பில் நீராடி நோன்பு முற்றியிருந்து உண்ணுதல் போலத் தோன்றும் மலை நாடன் வந்தனன்" என்று கூறுகிறாள். இதனை,

**"முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி**
**....... ......... ......... ......... .......**
**திரையணற் கொடுங்கவுள் நிறைய முக்கி**
**வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர்**
**தையூ ணிருக்கையில் தோன்று நாடன்"** **(நற். 22)**

என்பது உணர்த்தும். இதில் நோன்பியர் என்பதற்கு, "ஆடி முதலாக மார்கழி ஈறாகக் கிடந்த ஆறு திங்களும் தேவர்க்கு இராப் பொழுதெனப் புராணங் கூறுதலுண்மையின், இரவு பிற்றை யாமங் கொண்ட சில பொழுதுண்ணாதிருக்கும் நோன்பியர்" என்று பின்னத்தூரார் தரும் விளக்கம் அவரது புராண நோக்கை எடுத்துரைக்கும்.

## வரலாற்று நோக்கு

அகப்பாடல்களில் குறிப்பாகவும் உவமையாகவும் வரலாற்றுச் செய்திகள் இடம்பெறும். எனவே அகப்பாடல்களை விளக்குவதற்கு வரலாற்று நோக்கும் இன்றியமையாததாகும். "இலக்கியத்தை வரலாற்று உந்து சக்திகளின் ஒளியில் தரிசிக்கும் பார்வையே

வரலாற்றியல் அணுகுமுறையாகும்'' என்பர் தி.சு. நடராசன் (திறனாய்வுக் கலை, ப. 67). பின்னத்தூரார் வரலாற்று அடிப்படையில் செய்திகளை விளக்கி யுள்ளார்.

தலைமகனால் தலையளி செய்யப்பட்ட காதற்பரத்தை அவனுக்கு அறிவுறுத்தும் விதத்தில், தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப, "இன்பம் நுகராவிடினும் அவரைக் காணுதல் இனிதேயாம். அவரில்லாத ஊர் இன்னாதாகும்" என வருந்திக் கூறுகிறாள். இதில் மதுரை மருதனிளநாகனார்,

**ஏதி லாளன் கவலை கவற்ற**
**ஒருமுலை யறுத்த திருமா வுண்ணிக்**
**கேட்டோ ரனைய ராயினும்**
**வேட்டோ ரல்லது பிறரின் னாரே** *(நற். 216)*

என்று குறிப்பிடுவர். இதனை விளக்கும் பின்னத்தூரார், ''திருமாவுண்ணியென்பது கண்ணகி கதையைக் குறிக்கின்றது போலும்" என்பர். இது அவரது வரலாற்று நோக்கைப் புலப்படுத்தும்.

## வடநூல் மரபு நோக்கு

தமிழ் இலக்கணங்களுக்கும் இலக்கியங்களுக்கும் வடநூல் மரபையொட்டி விளக்கந் தருதல் தொன்று தொட்டு வருவதாகும். தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே இம்மரபு பின்பற்றப்பட்டு வருகிறது. பின்னத்தூராரும் இவ்வடிப்படையில் விளக்கம் கூறுதலை இயல்பாகக் கொண்டுள்ளார்.

நற்றிணையின் கடவுள் வாழ்த்து திருமாலைப் பற்றியது. இப்பாடலில் பாரதம் பாடிய பெருந்தேவனார், ''மாயோனே வேதமுதல்வன் என ஆன்றோர் கூறுவராதலின், யாமும் அவனையே வணங்குவோம்" என்று வாழ்த்துவர். இப்பாடலைப் பின்னத்தூரார் வடநூல் மரபு அடிப்படையில் விளக்கியுள்ளார். இதனை, "இதனுள் ஐம்பெரும்பூதமும் மதியமும் ஞாயிறும் திசையும் துறக்கமுமாய் அமைந்த மூவுலகும் திருமாலினொரு வடிவமே யெனவும் அவன் அவ்வடிவாக விளங்குதலால் உலகமும் உலகத்துயிர்களும் அவ்வுயிர்களாலே துய்க்கப்படும் பொருளும்' அவனே யெனவும், அவனியல்பை உள்ளத்தாலுணரவல்லாரே ஆன்றோரெனவும், அவரே உயிர்களின் மாட்டுப் பேரருளுடைமையான் விரித்துக் கூறுவரெனவும், பெரிதும் பயனெய்துமாறு கூறினாராயிற்று. ஏனைப்பூதமும் பிறவுங் கூறிய அடிகள் சிதைவுற்றமையின் வடமொழிச் செய்யுளை நோக்கிக் கூறலாயிற்று என்னும் உரைப்பகுதி உணர்த்தும்.

"மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்" என்று தொடங்கும் கடவுள் வாழ்த்து ஏழு அடிகள் மட்டுமே கொண்டுள்ளன. நற்றிணைப் பாடல்கள் எட்டடிச் சிறுமையும் பதின்மூன்றடிப் பெருமையும் உடையன. இதனை மனத்திற் கொண்டே பின்னத்தூரார், ஏனைப் பூதமும் பிறவும் கூறிய அடிகள் சிதைவுற்றன என்று கூறியுள்ளார்.

வரைந்த பின் மணமனை புக்க தோழியைத் தலைவன் பிரிவுக் காலத்து நன்கு ஆற்றுவித்தாய் என்று கூறுகிறான். அவனிடம் தோழி, "கடற்றுறை விளங்கிய மாந்தை போன்ற இவளுடைய நலமானது, பண்டும் இத்தன்மையதேயாகும். நீ காண்பாயாக, இவள் பால் நின்று களவுக் காலத்து விலகாமலிருந்து தலையளி செய்தாலும், இவள் கண் பசப்புற்றதன் காரணம் சிறிதளவு முயக்கம் கைநெகிழ்ந்ததனாற் கெட்ட அழகின் மிகுதியோ; கள்ளுண்டார்க்கும் கள் அறாஉங் காலத்துப் பிறந்த வேறுபாடு போன்ற காம வேறுபாடோ' என்று கூறுகிறாள். இதனை,

***துறைகெழு மாந்தை யன்ன இவள் நலம்***
***பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய***
***உழையிற் போகா தளிப்பினுஞ் சிறிய***
***நெகிழ்ந்த கவினலங் கொல்லோ மகிழ்ந்தோர்***
***கட்கழி செருக்கத் தன்ன***
***காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே*** ***(நற். 35)***

என்பர் அம்மூவனார். இதற்குப் பின்னத்தூரார், 'இஃது ஓரமளிக்கண்ணே துயிலப்பெற்றும் வேதவிதி பற்றிக் கூட்டம் நிகழாமையாற் பிறந்த வேறுபாடன்றோ? இதனை நீயே முயங்கி ஆற்றுவிக்குமாறன்றி, யான் ஆற்றுவிக்கு மாறென்னை யென்றாளென்பதாம். வேதவிதி கரணத்தினமைந்து முடிந்த காலை முதல் மூன்று நாளும் முறையே தண்கதிர்ச் செல்வற்கும், கந்தருவற்கும், அங்கியங் கடவுட்கும் அளித்து நான்காம்நாள் அங்கியங்கடவுள் தலைமகனுக்களிப்ப அவன் துய்ப்பானாக வென்பது" என்று விளக்கம் கூறுவர். இவை அவர் வடநூல் மரபு அடிப்படையில் விளக்கம் கூறுதலுக்குச் சான்றாகும்.

## அறவியல் நோக்கு

இலக்கியங்களை அறக்கருத்துகள் அடிப்படையில் காணுதல் அறவியல் நோக்காகும். "அறம் எனும் பயன்மதிப்பு இலக்கியத்தில் பெறுமிடத்தைத் திறனாய்ந்து தெளிய முயலுவதே அறவியல் அணுகுமுறையாம்'' என்பர் க.த. திருநாவுக்கரசு (திறனாய்வு அணுகுமுறைகள், அறவியல் நோக்கு, ப. 48). பின்னத்தூரார் அகப்

பாடல்களை அறத்தின் அடிப்படையில் நோக்குதலை இயல்பாகக் கொண்டுள்ளார்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ தலைவியின் தந்தைக்குரிய காட்டில் கோங்கம் வரிசையாகப் பல பூக்களுடன் அழகு செய்தலை,

> **அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்**
> **செல்சுடர் நெடுங்கொடி போல** *(நற். 202)*

என்னும் உவமையால் விளக்குவர். இது கார்த்திகை நாளில் வரிசையாக ஏற்றப்படும் விளக்குகளைக் குறிக்கும். இதனைப் பின்னத்தூரார், "அறுமீன் - கார்த்திகை நாள். அது உவா மதியொடு சேர்கின்ற திங்களைக் கார்த்திகைத் திங்களென்ப. அத்திங்களில் நீராடி விளக்கேற்றி வைத்துப் பார்ப்பார்க்களித்தல் அறமெனப்படுதலின் அறஞ்செய்திங்களென்றார்" என விளக்குவர். இது அவரது அறவியல் நோக்கைப் புலப்படுத்துவதாகும்.

## வாழ்வியல் நோக்கு

இலக்கியங்கள் மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளை விளக்குவன. எனவே இலக்கியங்களை மக்கள் வாழ்க்கை அடிப்படையில் அணுகுதல் வேண்டும். பின்னத்தூரார் நற்றிணைப் பாடல்களை அங்ஙனம் கண்டு விளக்குதலை இயல்பாகக் கொண்டுள்ளார்.

பொருள் வலித்த நெஞ்சினை நெருங்கித் தலைவன் செலவழுங்கும் பொழுது,

> **பைங்காய் நல்லிடம் ஒரீஇய செங்காய்க்**
> **கருங்களி ஈந்தின்** *(நற். 126)*

என்பான். இதில் ஈந்தின் இயல்பு கூறப்பட்டுள்ளது. இதனைப் பின்னத்தூரார், "ஈந்தின் பசுங்காய் பின்னர்ச் செங்காயாய்ப் பின்பு களியாய கனியாகுமென்றது, நமது யாக்கையின் இளமை போய்ச் சிறிது முதிர்ந்து பின்பு தளர்ந்து திரையுமென்றதாம்" என விளக்குவர். இவ்விளக்கம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்ததாகும்.

தலைவனும் தலைவியும் உடன் போக்கில் சுரத்திடைச் செல்லக் கண்டோர், இக்கொடுஞ்சுரத்தில் இம் மெல்லியலாளைக் கொண்டு செல்லும் இவ்விளையோன் உள்ளம் இடியைக் காட்டிலும் கொடிது எனக் கவன்று கூறுகின்றனர். இதனை,

> **வையெயிற் றையள் மடந்தை முன்னுற்று**
> **எல்லிடை நீங்கும் இளையோ னுள்ளங்**

**காலொடு பட்ட மாரி**
**மால்வரை மிளிர்க்கும் உருமினுங் கொடிதே** (நற். 2)

என்பர் பெரும்பதுமனார். இதற்குப் பின்னத்தூரார், "மாதர்க்குக் காலணியாகிய சிலம்பை வதுவைக் காலத்துக் கழற்றுதல் மரபு. அங்ஙனமாக இவள் சிலம்பணிந்தபடி ஓராடவனுடன் செல்லக் காண்டலாற் களவினிற் கொண்டுதலைக் கழியப் பெறுவாளாமென்ற ஏனையோரயிர்த்துக் கூறியதாயிற்று'' என விளக்கம் கூறுவர். இவ்விளக்கம் மரபின் அடிப்படையில் கூறப்பெற்றதாகும். வ.சுப. மாணிக்கனாரும், "குமரிக்குச் சிலம்பு அடையாளம் என்பதனால் குமரிக் கழிவுக்குச் சிலம்புக் கழிவு வேண்டப்படும். எனவே திருமணத்திற் சிலம்பு கழி நோன்பு ஒரு கரணமாயிற்று. சடங்காயிற்று, இன்றியமையாத விழாவாயிற்று'' (தமிழ்க்காதல், ப. 156) என்பர்.

தலைமகட்கு வரைவு மலிந்தமை கூறும் தோழி தலைவனை,

**நெய்கனி பசுங்காய் தூங்குந் துறைவனை** (நற். 278)

என்று சுட்டுவாள். இதில் நெய்கனி பசுங்காய் என்பது புன்னைக் காயைக் குறிக்கும். இதற்குப் பின்னத்தூரார், ''நெய்கனி காயென்றதனால் புன்னைக் காயிலிருந்து நெய்யெடுக்கப்படும் வழக்கு அக்காலத்து முளதென வறிக'' என்று வழக்கு அடிப்படையில் விளக்குவர்.

கய்மனார் வைகறையில் தயிர்கடைதலை,

**"விளம்பழங் கமழுங் கமஞ்சூற் குழிசிப்**
**பாசந் தின்ற தேய்கான் மத்த**
**நெய்தெரி யியக்கம் வெளில்முதன் முழங்கும்**
**வைகுபுலர் விடியல்"** (நற். 12)

என்பர். வைகறைப் பொழுதில், விளம்பழத்தின் மணங் கமழ்கின்ற, நிறைந்த தயிர்த்தாழியில் மத்தால் வெண்ணெய் தோன்றக் கடைதல் முல்லை நில மக்கள் வாழ்வியலாகும். வைகறைப் பொழுதில் தயிர் கடைந்ததற்கான காரணத்தை மனத்திற் கொண்ட பின்னத்தூரார், "பகற் பொழுதிற் கடைவுழி வெப்பந் தாங்காது வெண்ணெய் உருகுமாதலின் வைகறையிற் கடைதல் கூறிற்று" என்பர்.

வெள்ளிய பூங்கொத்துகளையுடைய பாலையின் காய்களுக்குப் பற்றுக் குறடு உவமையாகக் கூறப் பெறும். இதனை,

**கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலை** (நற். 107)

என்பது உணர்த்தும். இதில் கொடிறு என்பதற்குப் பற்றுக் குறடு என உரை எழுதும் பின்னத்தூரார், “இங்குப் பற்றுக்குறடென்றது ஈயம் பூசுங் குறட்டினை” என விளக்குவர். இது நடைமுறை வாழ்வியலோடு கூறப்பெற்ற விளக்கமாகும்.

தலைவி தலைவனுடன் உடன் போயினள் என்று செவிலி கூற அதனை அறிந்த நற்றாய் அஃது அறநெறி என்று கருதினளாயினும் தலைவியின் ஆயமும் பயிலிடமும் கிளி கூவுதலுங் கண்டு மருண்டு கூறுகிறாள். இதனை,

**ஓரை ஆயமும் நொச்சியுங் காண்தொறும்**
**நீர்வார் கண்ணேன்** *(நற். 143)*

என்பது உணர்த்தும். இதில் உள்ள ஓரை என்பதற்குப் பின்னத்தூரார் “மகளிர் பாவை கொண்டு விளையாடுவது” என விளக்குவர்.

தலைமகன் தலைமகளைக் கொண்டுதலைக் கழிந்த நிலையில் அதனை அறிந்த நற்றாய் புலம்புகிறாள். அவளை அயல் மனை மாந்தர் தேற்றுகின்றனர். அவர்களிடம், “தலைவி உடன்போக்கில் சென்றது அறத்தாறு ஆயினும் அவள் விளையாடிய இடங்காணின் என் உள்ளம் வேகின்றது. அப்படியிருக்க, அவள் பிரிவை எவ்வண்ணந் தாங்க முடியும்” என்று எதிரழிந்து கூறுகிறாள். இதனை,

**இனியே, தாங்குநின் அவலம் என்றிர் அதுமற்று**
**யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடையீரே**
**உள்ளின் உள்ளம் வேமே உண்கண்**
**மணிவாழ் பாவை நடைகற் றன்னஎன்**
**அணியியல் குறுமகள் ஆடிய**
**மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே** *(நற். 184)*

என்பது உணர்த்தும். இதில் நொச்சி, தெற்றி ஆகிய இரண்டும் சங்க கால மக்கள் விளையாடிய இடத்தைக் குறிப்பதாகும். இதனை மனத்திற் கொண்ட பின்னத்தூரார், “நொச்சி - முன்றிலின்கணுள்ள வேலியில் நிழல் நிரம்பிய நொச்சி. இது சிற்றில் கோலிச் சிறுசோறட்டு விளையாடிய இடம்.” தெற்றி - திண்ணை; இது கழங்கு, பலகறை, பல்லாங்குழி முதலாயின ஆடிய இடம்” என விளக்குவர்.

இவற்றால் பின்னத்தூரார் நற்றிணைப் பாடல்களைச் சங்க கால மக்கள் வாழ்வியலின் பல்வேறு கூறுகள் அடிப்படையில் நோக்கியுள்ளமை புலனாகும்.

## முடிவுரை

பின்னத்தூரரார் நற்றிணையை 'அக இலக்கியம்' என்ற வகைமை நோக்கில் கண்டுவெளிப்படுத்தியுள்ள நுட்பங்கள் போற்றுதற்குரியனவாகும். இவர் திணை, கைகோள், கூற்று, கேட்போர், காலம் போன்ற கூறுகளைத் தேவையான பாடல்களுக்கு மட்டும் தெளிந்து கூறியுள்ளார். உள்ளுறை, இறைச்சி ஆகிய கூறுகளை ஒவ்வொரு பாடலுக்கும் கண்டறிய முற்பட்டுள்ளார். நூற்றுப் பதினொரு பாடல்களுக்கு உள்ளுறையும், நூறு பாடல்களுக்கு இறைச்சியும் சுட்டியிருப்பது பின்னத்தூராரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டும். மெய்ப்பாடு, பயன் ஆகிய இரண்டையும் நானூறு பாடல்களுக்கும் கூறியுள்ளமை பின்னத்தூராரின் தெளிவான நோக்கைப் புலப்படுத்தும். இவ்வகையில் பின்னத்தூராரின் இலக்கிய வகைமை நோக்கு முழுமை நோக்காகச் சிறப்பிடம் பெறுகிறது.

பின்னத்தூராரின் மூலபாட நோக்கு சரியான பாடத்தைத் தேர்ந்தெடுப்பதில் கொண்ட கவனத்தையும், ஒப்பியல் நோக்கு பலநூற்புலமையையும், புராண நோக்கு பழமையிற் கொண்ட பிடிப்பையும், வரலாற்று நோக்கு வரலாற்றறிவையும் காட்டுவனவாக உள்ளன.

பின்னத்தூராரின் வடநூல் மரபு நோக்கில் வேதவிதி பற்றியது வலிந்து கூறப்படுவதாக உள்ளது. தமிழர் மரபுக்கு ஒவ்வாத கருத்து இதில் இடம் பெற்றுள்ளது.

பின்னத்தூராரின் அறவியல் நோக்கு அறச் சிந்தனையையும் வாழ்வியல் நோக்கு வாழ்க்கையோடு இலக்கியத்தைப் பொருத்திப் பார்க்கும் திறனையும் உணர்த்துகின்றன.

## துணை நூல்கள்


இலக்கியத் திறனாய்வு, சு. பாலச்சந்திரன், நா.ப. 1992.

இறைச்சி, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1986.

உள்ளுறை, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1986.

ஒப்பிலக்கிய அறிமுகம், தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1995.

தமிழ்க்காதல், வ.சுப. மாணிக்கம், பாரி நிலையம், சென்னை, 1962.

திறனாய்வு அணுகுமுறைகள், கு. பகவதி (பதி.) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989.

திறனாய்வுக் கலை, தி.சு. நடராசன், என்.சி.பி.எச், சென்னை, 1996.

புராணவியல், இரா. பாலசுப்பிரமணியன், தமிழ் சக்தி, காரைக்குடி, 2003.

மெய்ப்பாடு, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1986.

## பின்னிணைப்பு

**பயன்**

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த நிலையில் தோழி தலைவியை ஆராய்ந்தறிதல் (நற். 13),

தலைவன் தலைவியைப் பயந்தோரைப் பழிச்சல் (நற். 8),

பாங்கனிடைத்துரைத்தல் (நற். 95).

பாங்கனை உடன்படுவித்தல் (நற். 185, 201)

தோழியிற் கூட்டத்துக்கு முயலும் தலைவன் தன்னுளத்தழுந்தல் (நற். 190),

செவ்வி பெறுதல் (நற். 45)

தலைவன் நிலையைத் தலைவி மனங்கொள்ளும்படிக் கூறுதல் (நற். 82)

தலைவியின் கருத்தறிதல் (நற். 245)

தலைமகளை முகம்புகுவித்தல் (நற். 220)

மதியுடம் படுத்தல் (நற். 213)

குறை நயத்தல் (நற். 28)

குறை நயப்பித்தல் (நற். 25, 359)

வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல் (நற். 32)

தோழி கேட்டு குறை முடித்தல் (நற். 101, 204, 209, 349)

கையுறை ஏற்பித்தல் (நற். 363)

குறை நேர்ந்த தலைவி தன்னுளாராய்தல் (நற். 342)

தோழியிற் கூட்டத்தில் இரவுக்குறி நேர்தல் (நற். 323, 331)

இரவுக்குறி ஏற்குமாறு தலைவியின் குறிப்பறிதல் (நற். 392)

தலைமகளை இரவுக்குறி நயப்பித்தல் (நற். 49)

இரவுக்குறியில் துன்புறும் தலைவன் அயர்வுயிர்த்தல் (நற். 6, 17)

வெறியாட்டுச் சூழலில் வெறிவிலக்கல் (நற். 351)

குறிப்பினால் வெறி விலக்குவித்தல் (நற். 34)

அறத்தொடு நிற்கும் தலைவி தோழியைத் தன்முகமாக்கல் (நற். 244)

அறத்தொடு நிற்றல் (நற். 128, 165, 267)

வெளிப்படையாக அறத்தொடு நிற்றல் (நற். 207)

தலைவனை இயற்படமொழிதல் (நற். 14)

உடன்போக்குச் சூழலில் ஓம்படுத்துரைத்தல் (நற். 10)

அயாவுயிர்த்தல் (நற். 31, 38, 44, 51, 54, 56, 64, 69, 70, 73, 79, 84, 87, 97, 102, 107, 109, 116, 117, 118, 130, 133, 146, 152, 153, 157, 177, 186, 187, 193, 196, 199, 214, 215, 218, 219, 224, 226, 236, 238, 241, 243, 249, 272, 275, 277, 281, 287, 289, 296, 302, 303, 304, 314, 319, 327, 332, 335, 338, 343, 347, 348, 356, 364, 369, 370, 378, 379, 381, 397)

அயர்வுயிர்த்தல் (நற். 6, 17)

தலைமகளை அயர்வகற்றல் (நற். 9, 202)

அயர்வகற்றல் (நற். 76)

தலைமகளை அயாவகற்றிக் கொண்டேகல் (நற். 264)

செவிலி இடைச்சுரத்தில் கண்டாரிடம் தலை மகளைக் காண விரும்புதலைக் கூறுதல் (நற். 198)

வரைவுகடாதல் (நற். 4, 15, 19, 23, 36, 53, 55, 57, 67, 83, 93, 96, 98, 108,119, 145, 154, 156, 159, 172, 173, 175, 182, 188, 195, 203, 222, 223, 231, 232, 233, 239, 247, 251, 253, 258, 259, 261, 263, 268, 273, 276, 282, 285, 288, 295, 297, 299, 306, 313, 317, 322, 326, 336, 339, 344, 345, 353, 365, 368, 373, 375, 376, 383, 389, 396)

ஆற்றாதுரைத்து வரைவுகடாதல் (நற். 355)

தலைமகளது ஆற்றாமை கூறி வரைவுகடாதல் (நற். 398)

நலந்தொலைவுரைத்து வரைவுகடாதல் (நற். 395)

செறிப்பறிவுறுத்து வரைவுகடாதல் (நற். 27, 63, 191, 194)

இற்செறிப்புரைத்து வரைவுகடாதல் (நற். 60, 178)

ஏதஞ்சொல்லிவரைவுகடாதல் (நற். 257)

குறிப்பினால் வரைவுகடாதல் (நற். 58)

இரவுக்குறி மறுத்து வரைவுகடாதல் (நற். 151, 158, 168, 292)

வரைவு வேண்டல் (நற். 255)

வரைவு முடுக்கல் (நற். 227)

வரைவறிவுறுத்தல் (நற். 61)

வரைவுடன்படுத்தல் (நற். 47, 72, 85, 94, 104, 122, 123, 135, 136, 147, 149, 206, 211, 228, 388)

இரவுக் குறி வலிக்கி வரைவுடம்படுத்தல் (நற். 114)

வரைவு மலிந்த நிலையில் தோழி தலைவியின் ஐயந்தீர்த்தல் (நற். 278)

தலைவன் வினை காரணமாகப் பிரியும் பொழுது பிரியற்கவெனக் கூறுதல் (நற். 35)

செலவழுங்குவித்தல் (நற். 12, 26, 33, 37, 43, 46, 48, 71, 124, 183, 205, 229, 318, 325, 337)

செலவழுங்குதல் (நற். 16, 52, 62)

இல்லத் தழுங்கல் (நற். 3, 126, 137, 141, 240, 262, 298, 308, 312, 366)

இடைச்சுரத்தழுங்கல் (நற். 103, 105, 113, 284, 346, 352)

சைகை செய்து உடன்படுத்தல் (நற். 334)

செலவுடன்படுதல் (நற். 266)

தலைவனைப் பிரிந்திருக்கும் நிலையில் ஆற்றாதுரைத்தல் (நற். 75, 77, 80, 132, 324)

ஆற்றாமைவுரைத்தல் (நற். 160)

ஆற்றாமை உணர்த்தல் (நற். 39)

தானே புலம்பி ஆறுதல் (நற். 140)

தானே கூறி ஆறுதல் (நற். 301)

தம்மிற் கூறியாறுதல் (நற். 2)

ஆற்றாமை நீங்குதல் (நற். 29, 66, 110, 143, 179, 184, 279, 305)

ஆற்றுதல் (நற். 293)

ஆற்றியிருத்தல் (நற். 1, 24, 271)

தலைவன பிரியும்போது தலைமகளைத் தன்முகமாக்கல் (நற். 129)

தலைவியை ஆற்றுவித்தல் (நற். 5, 7, 11, 18, 41, 65, 68, 88, 92, 111, 112, 115, 125, 134, 148, 164, 166, 189, 192, 197, 208, 246, 248, 252, 274, 286, 307, 311, 316, 328, 329, 333, 358, 367, 372, 387, 391, 399)

தன் வலியுணர்த்தித் தலைவியை ஆற்றுவித்தல் (நற். 362)

தோழியை ஆற்றுவித்தல் (நற். 309)

தலைவியை ஆற்றுவித்திருத்தல் (நற். 171)

தலைவியை ஆற்றி யுவப்பித்தல் (நற். 163)

தலைவியை ஆற்றுவித்தகலுதல் (நற். 162)

தலைவி ஆற்றியது கூறுதல் (நற். 382)

தோழியோடு கூறி ஆறியிருத்தல் (நற். 357)

தலைவியின் ஆற்றாமை கூறுதல் (நற். 167)

தலைவனை ஆற்றுவித்தல் (நற். 254)

தலைமகன் ஆற்றல் (நற். 265)

பிரிவுக் காலத்தில் தலைவியின் துன்பங்கண்டு மாறுபடக் கூறல் (நற். 237)

பருவங்கண்டு ஆற்றாத தலைவியைத் தெளிவித்தல் (நற். 99)

தலைவன் பாசறையில் புலம்பி ஆறுதல் (நற். 341)

வினை முற்றி மீளும் தலைவன் நெஞ்சுடன் உசாவுதல் (நற். 169)

வினைமுற்றி மீளும் தலைவன் கூறியது கேட்ட பாகன் விரைந்து தேர் கடாவல் (நற். 21, 42, 221, 371)

பாகன் தேர் கடாவல் (நற். 59, 106, 142, 242, 321)

பாகன் தேற்றத் தேறுதல் (நற். 121)

தலைமகளை மகிழ்வித்தல் (நற். 22, 89, 91)

மகிழ்வித்தல் (நற். 139)

மகிழ்தல் (நற். 78, 86, 131, 161, 181, 280, 283, 294, 374, 384)

மகிழ்ச்சி (நற். 212)

தோழி தானே மகிழ்ந்துரைத்தல் (நற். 394)

கேட்ட தலைவி மகிழ்தல் (நற். 393)

வாயின் மறுத்தல் (நற். 30, 50, 74, 90, 127, 170, 200, 217, 230, 269, 290, 300, 310, 330, 360, 380)

பாணனைக் கடிதல் (நற். 150)

வாயில் நேர்தல் (நற். 210, 270)

வாயில் பெற்று மகிழ்தல் (நற். 120)

வாயில் பெற்றுய்தல் (நற். 155)

வாயில்கள் மகிழ்தல் (நற். 361)

வாயில்கள் தலைவனைத் தலைவியோடு கூட்டுவித்தல் (நற். 291)

தலைவி புலவி கூர்தல் (நற். 174)

தலைவி புலத்தல் (நற். 216)

ஊடல் தணிவித்தல் (நற். 250)

ஊடல் தணித்தல் (நற். 386)

ஊடல் நீங்குதல் (நற். 350)

ஊடல் தீர்த்தல் (நற். 315)

ஊடல் தீர்தல் (நற். 260)

தலைவி ஊடல் தீர்தல் (நற். 180)

புலவி தீர்ந்து புணர்ச்சியின் மகிழ்தல் (நற். 20)

ஊடல் தீர்ந்து முயங்கல் (நற். 340)

காமக்கிழத்தி இனிவருந் தலைவியைக் கடிதல் (நற். 390)

காதற் பரத்தை தலைமகளை இகழ்ந்து கூறல் (நற். 225)

பரத்தை தலைமகனை இயற்பழித்தல் (நற். 40)

பரத்தை தலைவனைத் தான் அடையச் சூழ்ந்துரைத்தல் (நற். 100)

பரத்தை சூழ்தல் (நற். 176)

தலைவனைப் பரத்தை புகழ்தல் (நற். 400)

விருந்தின் பரத்தையைப் புகழ்தல் (நற். 320)

# இலக்கணப் பார்வை

சே. செந்தமிழ்ப்பாவை

பண்டை இலக்கண, இலக்கியங்களுக்கு இடைக்காலத்தில் பல உரைகள் தோன்றின. அவ்வுரைகளே அவற்றைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன. அதுபோலப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பண்டை இலக்கியங்கள் நூலாகப் பதிப்பிக்கப்பட்ட நிலையில், அக்காலக்கட்டத்திலும் அதனையடுத்த காலக்கட்டங்களிலும் பலர் உரை எழுதியுள்ளனர். அவ்வகையில் முதன்முதலில் நற்றிணைக்கு உரை எழுதிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் இளமையிலேயே வடமொழியும் மறையும் கற்றவர். கவிபாடும் ஆற்றல் மிக்கவர். காளிதாசர் இயற்றிய 'பிரகசன' நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர். இத்தகு சிறப்புமிக்க பின்னத்தூராரின் நற்றிணை உரையில் காணலாகும் அவர்தம் இலக்கணப் பார்வையைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கணப் பார்வை

இலக்கியத்தின் நயத்தையும் அழகையும் உணர்ந்து கொள்வதற்கு இலக்கணம் பெரிதும் உதவுகின்றது. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்பதால் இலக்கண அறிவுடையோரே இலக்கியத்தை நன்கு உணர முடியும். பின்னத்தூராரின் நற்றிணை உரையில் காணலாகும் இலக்கணப் பார்வையைப் பின்வருமாறு பாகுபடுத்த இயலும். அவையாவன,

1. இலக்கணக் குறிப்பை எடுத்துரைத்தல்.
2. இலக்கணத்தை நுட்பமாக விளக்குதல்.
3. சூழலுக்குத் தக இலக்கணம் கூறுதல்.
4. பொருள் விளக்கம் கூறி இலக்கணத்தை உணர்த்துதல்.
5. இலக்கண நூற்பாவை எடுத்துரைத்துப் பொருள் விளக்குதல்.
6. வடமொழி இலக்கண அடிப்படையில் உரை கூறுதல்.
7. இலக்கணமன்று என மறுத்து உரை கூறுதல்.
8. உவமையிலக்கண அறிவை நுட்பமாக வெளிப்படுத்துதல்.
9. பாடல் அமைப்பினை இலக்கணத்தோடு பொருத்தி விளக்குதல்.
10. இலக்கண உரையாசிரியர்கள் உரையை ஒப்புமை காட்டுதல்.

## இலக்கணக் குறிப்பை எடுத்துரைத்தல்

நற்றிணைப் பாடல்களில் பயின்று வரும் இலக்கணங்களைப் பின்னத்தூரார் குறிப்பாகச் சுட்டுவதன் வாயிலாக உணர்த்தியுள்ளார். அவ்வகையில் எழுத்திலக்கண, சொல்லிலக்கணக் குறிப்புகளும், அணியிலக்கணக் குறிப்புகளும் அமையும்.

### எழுத்திலக்கணக் குறிப்புகள்

பின்னத்தூரார் ஓரெழுத்து ஒரு மொழியாகக் குறிப்பிடுவதும், சாரியைகள் பற்றிக் குறிப்பிடுவதும் எழுத்திலக்கணக் குறிப்புகளில் இடம்பெற்றுள்ளன.

### ஓரெழுத்து ஒருமொழி

தலைவன் வரவுணர்ந்த தோழி தலைவியிடம்,

**ஏமான் பிணையின் வருந்தினே னாக** *(நற். 61:3)*

என்று உரைப்பள். இதில் வரும் 'ஏ' என்பதற்குப் பின்னத்தூரார் "அம்பு" எனக் குறிப்பர். இவ்விளக்கம் நெட்டெழுத்துகள் ஏழும் ஓரெழுத்து ஒரு மொழியாகப் பயின்று வரும் என்ற தொல்காப்பிய இலக்கணத்தின் அடிப்படையில் கூறப்பட்டதாகும்.

### சாரியை

பின்னத்தூரார் நற்றிணை உரையில் அம், அத்து, இன், அல், ஐ, அ, ஆம் ஆகிய சாரியைகளை இனங்கண்டு சுட்டியுள்ளார்.

### அம்

**மலையமா ஊர்ந்து போகிப் புலையன்** *(நற். 77:1)*
(மலையமா → மலை + அம் + மா)

**மரந்தீ உற்ற மகிழ்தலை அம்கோட்டு** *(நற். 177:2)*

**நெடுங்கால் கணந்துளம் புலம்புகொள் தெள்விளி** *(நற். 212:2)*

**கடலம் காக்கை** *(நற். 272:1)*

இந்நான்கு இடங்களிலும் 'அம்' சாரியை பயின்று வருதலை உணர்ந்து பின்னத்தூரார் இலக்கணக் குறிப்புச் சுட்டியுள்ளார்.

### அத்து

இது அல்வழிச் சாரியையாக வருதலைப் பின்னத்தூரார்,

**அடைகரை மாஅத்து அல்குசினை ஒலிய** *(நற். 118:1)*

என்ற பாடலடியில் கூறுவர்.

**இன்**

இச்சாரியையும் அல்வழிச் சாரியையாக வருதலை,

**விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின் ஆஅய்** *(நற். 167:2)*

என்பதில் காட்டுவார்.

**அல்**

**கல்லென் சேரிப் புலவல் புன்னை** *(நற். 63:3)*

என்பதில் பின்னத்தூரார் 'அல்' சாரியை எடுத்துரைப்பர்.

**ஐ**

**வெயில்வீற் றிருந்த வெம்பலை அருஞ்சுரம்** *(நற். 84:9)*

**உருள்போலி போல எம்முனை வருந்தல்** *(நற். 270:4)*

**நோயா கின்றேம் மகளை நின் தோழி** *(நற். 305:5)*

ஆகிய பாடலடிகளில் 'ஐ' என்னும் சாரியை இருத்தலைப் பின்னத்தூரார் குறிப்பர்.

**அ**

**தண்ணந் துறைவன் தூதொடும் வந்த** *(நற். 167:5)*

**கண்ணி கட்டி கதிர அன்ன** *(நற். 200:1)*

ஆகிய பாடலடிகளில் 'அ' என்னும் சாரியை உள்ளதைப் பின்னத்தூரார் குறிப்பிடுவர்.

**ஆம்**

வெள்ளிவீதியாரின் மருதப்பாடலில் இடம்பெற்றுள்ள,

**சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே** *(நற். 70–1)*

என்னும் அடியில் உள்ள வெள்ளாங்குருகு என்பதில் 'ஆம்' என்ற சாரியையைக் குறிப்பிடுவர் பின்னத்தூரார்.

இவ்வாறு பின்னத்தூரார் குறிப்பிடும் சாரியைகளுள் அம், அத்து, இன் ஆகிய மூன்றும் தொல்காப்பியர் சுட்டுவன; அல், ஐ, அ என்பன நன்னூலார் சுட்டுவன. தொல்காப்பியரும் நன்னூலாரும் குறிப்பிடாத 'ஆம்' என்ற சாரியையைப் பின்னத்தூரார் குறித்துள்ளமை சுட்டத்தக்கது.

## சொல்லிலக்கணக் குறிப்புகள்

பின்னத்தூரார் வழுவமைதி, வேற்றுமை உருபுகள், ஆகுபெயர், வினைச்சொற்கள், இடைச்சொற்கள், முன்னிலை அசைச் சொற்கள், அசைநிலை, உரிச்சொற்கள், செய்யுள் விகாரம், அன்மொழித்தொகை, பெயரெச்சம், இருபெயரொட்டு, அடைமொழி, இடைக்குறை ஆகிய சொல்லிலக்கணக் குறிப்புகளை நற்றிணைப் பாடல்களில் இனங்கண்டு கூறியுள்ளார்.

### வழுவமைதி

வழு என்பது குற்றம் எனப் பொருள்படும். இது திணை வழு, பால் வழு, மரபு வழு, செப்பு வழு, வினா வழு, இட வழு, கால வழு என ஏழு வகைப்படும். இவற்றுள் பின்னத்தூரார் மரபு வழு, இட வழு, கால வழு ஆகிய மூன்றினையும் தம் உரையில் விளக்கியுள்ளார்.

### மரபு வழு

பெரிய நீர் பரந்த கழிமுகப் பகுதியிலுள்ள இறால் மீனைப் பற்றுவதற்குப் பாயும் கழுத்தளவு சிறிது வெண்மையுடைய நீர்க்காக்கையை நக்கீரனார், "சிறுவெண்காக்கை" (நற். 31) என்று குறிப்பர். இதற்குப் பின்னத்தூரார், "வெண்காக்கை கருங்காக்கையுமாம்; வெண்மை - கருமைமேற்று, காராட்டை வெள்ளாடென்பது போல மங்கல மொழியாகக் கொள்க" என்று மரபு வழுவை எடுத்துரைத்து விளக்குவர்.

### காலவழு

மூன்று காலங்களுள் ஒரு காலத்துக்குரிய சொல் ஏனைக் காலத்தோடு முடிதல் காலவழுவாகும். செலவுக் குறிப்பறிந்த தலைவி தோழியிடம், "தலைவனுடைய செயல்களைக் காணுகின்ற பொழுது அவன் சுரம் போவதற்குத் துணிந்து விட்டமை புலனாகின்றது" என்பள். இதனை,

ஒதுக்கரும் வெஞ்சுரம் இறந்தனர் மற்றவர் (நற். 177:3)

என்னும் அடி விளக்கும். இதில் வரும் இறந்தனர் என்ற சொல்லைப் பின்னத்தூரார், "தெளிவின்கண் வந்த காலவழுவமைதி" எனச்சுட்டுவர். எதிர்காலத்துக்குரிய சொல் இறந்தகாலத்தில் சுட்டப்படும் நிலையை அவர் இவ்விலக்கணத்தில் அடக்கியுள்ளார்.

### இடவழு

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களில் ஒரு இடத்திற்குரிய சொல் ஏனை இடத்தோடு முடிகின்றபொழுது இடவழு

தோன்றுகிறது. இத்தகைய இடவழுவைப் பின்னத்தூரார் மூன்று இடங்களில் சுட்டியுள்ளார்.

*பேரஞர் உறுவியை வருந்தா தீமே* (நற். 193:9)

*நயந்தோர்க் குதவா நாரின் மார்பே* (நற். 225:9)

*வாய்மை சான்றநின் சொல்நயந் தோர்க்கே* (நற். 283:8)

இப்பாடலடிகளில் உறுவி என்பதைத் தன்னைப் படர்க்கையாகக் கூறிய இடவழுவமைதி என்றும் நயந்தோர், சொல்நயந்தோர் என்பனவற்றை இடவழுவமைதி என்றும் குறிப்பிடுவர்.

## வேற்றுமை உருபுகள்

பின்னத்தூரார் வேற்றுமை உருபுகளையும் அவ் உருபுகள் மயங்கி வருதலையும் ஐந்து இடங்களில் எடுத்துரைப்பர் (நற். 3, 44, 67, 120, 173).

இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' வினை, வினைக்குறிப்பு என்னும் இருநிலைகளில் தோன்றும் இயல்பினது. இவ்விலக்கணத்தைப் பின்னத்தூரார் மாங்குடி கிழாரின் "தடமருப்பு எருமை மடநடைக் குழவி" என்ற பாடலில் விளக்குவர்.

*அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து* (நற். 120:8)

என்ற அடியில் உள்ள 'நப்புலந்து' என்னும் சொல்லை "நம்மைப்புலந்து - இது இரண்டன் தொகை" என்றுரைப்பர்.

இளங்கீரனாரின் "ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினை" என்ற பாடலில்

*சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை* (நற். 3:6)

என்னும் அடியில் உள்ள 'சுரன்முதல்' என்பதனை, 'சுரத்தினிடத்தில்; முதல் ஏழனுருபு' எனக் குறிப்பர்.

## ஆகுபெயர்

யாதானுமொரு இயைபு பற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். இவ் ஆகுபெயரைப் பின்னத்தூரார் எட்டு இடங்களில் (நற். 47, 82, 134, 142, 212, 241, 388, 389) குறிப்பிட்டுள்ளார்.

*ஞெலிகோல் கலப்பை அதளொடு சுருக்கி* (நற். 142:3)

*கயிறுகடை யாத்த கடுநடை எறிஉளி* (நற். 388:3)

என்பனவற்றில் உள்ள அதள், உளி ஆகிய இரண்டிற்கும் ஆகுபெயர் என்று மட்டும் சுட்டுவர்.

**அன்னை அயரும் முருகுநின்** *(நற். 47:10)*

**முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போலநின்** *(நற். 82:4)*

**செவ்வாய்ப் பாசினங்** *(நற். 134:4)*

என்பனவற்றில் உள்ள முருகு, பாசு என்பனவற்றிற்குப் பண்பாகு பெயர் என்று குறிப்பர்.

**நரம்பொடு கொள்ளும் அத்தத்து** *(நற். 212–4)*

**உள்ளார் கொல்லோ தோழி கொடுஞ்சிறை** *(நற். 241–1)*

என்பனவற்றில் உள்ள நரம்பு, கொடுஞ்சிறை என்பனவற்றிற்குச் சினையாகு பெயர் என்பர்.

**வேங்கை யும்புலி ஈன்றன அருவியும்** *(நற். 389:1)*

என்னும் அடியில் உள்ள புலி மலர்க்கு உவமையாகு பெயர் என உரைப்பர்.

## வினைச்சொற்கள்

வினைத்தொகை, வினைமுற்று, முற்றெச்சம், வினையெச்சம், வினைச்சொல் திரிபு போன்ற வினைக்குரிய இலக்கணங்களைப் பின்னத்தூரார் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார்.

**உவர்விளை உப்பின் குன்று போல் குப்பை** *(நற். 352:4)*

இதில் வரும் 'போல் குப்பை' என்பதை வினைத்தொகை என்பர்.

"பகலும் வருதி" (நற். 223:3) என்பதில் வரும் 'வருதி' என்றது வந்து மீள்வானை நோக்கிக் கூறியது; நிகழ்கால வினைமுற்று என்பர்.

**அன்ன வெண்மணற்று அகவயின் வேட்ட** *(நற். 372:6)*

இதில் வரும் வெண்மணற்று என்பதை மணலையுடையது என்னும் முற்றெச்சம் என்பர்.

**இருஞ்சேற்று அயிரை தேரிய தெண்கழி** *(நற். 272:5)*

என்பதில் 'தேரிய' என்பது செய்யிய என்னும் வாய்பாட்டெச்சம் என்பர்.

**வந்தீக எந்தை** *(நற். 221:12)*

என்பதில் வந்தீக - வருகவென்னும் வினைச்சொல்லின் திரிபு என்பர்.

இவ்வாறு வினைச்சொற்கள் பற்றிய இலக்கணக் குறிப்புகளைப் பின்னத்தூரார் சுட்டியுள்ளார்.

## இடைச்சொல்

பின்னத்தூரார் மன், கொன், தில், ஏ, குரை ஆகிய இடைச்சொற்களை இனங்கண்டு சுட்டியுள்ளார்.

### மன்

இது கழிவு, ஆக்கம், ஒழியிசை என்ற மூன்று பொருள்களில் பயின்று வரும். அவற்றுள் ஆக்கம் குறித்து வருவதை,

நம்மொடு செல்வர்மன் தோழி மெல்ல (நற். 125:8)

என்ற அடிக்கு வரையும் உரையில் சுட்டுவர். மன் கழிவுப் பொருளில் பயின்று வருதலை,

மயிலறி பறியா மன்னோ (நற். 13:8)
வினைவலித் தமைதல் ஆற்றலர் மன்னே (நற். 69:12)
பிரிதல் சூழான் மன்னே (நற். 72:7)
நெருநலும் இவணர் மன்னே (நற். 84:3)
நும்மினும் அறிகுவேன் மன்னே (நற். 160:3)
காணவும் இயைந்தன்று மன்னே (நற். 178:7)
ஒருமகள் உடையேன் மன்னே (நற். 184:1)
இனியென கொள்ளலை மன்னே (நற். 233:5)
இன்றுநக் கனைமன் (நற். 346:7)

ஆகிய பாடலடிகளின் உரையில் சுட்டுவர்.

### தில்

'தில்' என்னும் இடைச்சொல் விழைவுப் பொருளில் வருதலை ஈரிடங்களிலும் (நற். 81, 120) காலம் குறித்து வருதலை ஈரிடங்களிலும் (நற். 151, 277) ஒழியிசைப் பொருளில் வருதலை ஓரிடத்திலும் (நற். 85) பின்னத்தூரார் குறிப்பர்.

### கொன்

இது பெருமை குறித்து வருதலை ஓரிடத்தில் (நற். 208) சுட்டுவர்.

### ஏ

இது தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை ஆகிய பொருள்களில் பயின்று வரும் (தொல். 742).

நிலவே, நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பி (நற். 348)

என்னும் அடியில் வரும் 'நிலவே' என்பதில் வரும் ஏயையும் "குணக்குத் தோன்று வெள்ளியின் எமக்கும் ஆர் வருமே" (நற். 356:9) என்னும் அடியில் வரும் 'வருமே' என்பதில் உள்ள ஏயையும் வினாப் பொருளில் வந்த இடைச்சொல் என்பர்.

வெள்ளி வீதியார் பாடலில் (நற். 348) வரும் நிலனே, ஊரே, கானே என்பனவற்றில் உள்ள ஏயையும் வினா எனக் குறிப்பர்.

குரை

கொன்னு நம்பு குரையர் தாமே (நற். 208:7)

என்னும் அடியில் வரும் 'குரை'யை "அசைநிலை இடைச்சொல்" எனச் சுட்டுவர். இவ்விளக்கம்.

ஏயும்குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண்டாகும் இயற்கைத்து என்ப (தொல். 757)

என்னும் இலக்கணத்தின் அடிப்படையில் கூறப்பட்டதாகும்.

முன்னிலை அசைச்சொற்கள்

மோ, மதி ஆகிய இரண்டும் முன்னிலை அசைச் சொற்களாக வரும். இதனைப் பின்னத்தூரார்,

அவர்நிலை அறிமோ (நற். 238:6)

நீத்த லோம்புமதி பூக்கே ழூர (நற். 10:4)

சேண்மதி (நற். 54:4)

உரைமதி (நற். 54:8)

என்னும் அடிகளுக்கு எழுதிய உரைக் குறிப்புகள் புலப்படுத்தும்.

அசைநிலை

செய்யுளில் இன்பம் பயக்க வருவது அசைநிலையாகும். பின்னத்தூரார்,

பழிபிறிது ஆகல் பண்புமார் அன்றே (நற். 117-11)

என்ற பாடலடியில் 'பண்புமார்' என்பதில் வரும் ஆரையும்,

அருஞ்சுரம் இறப்ப என்ப (நற். 148:11)

என்ற பாடலடியில் வரும் 'என்ப' என்பதையும் அசைநிலை என்பர். தொல்காப்பியரும் நன்னூலாரும் ஆர், என்ப ஆகிய இரண்டையும்

அசைநிலைகளாகச் சுட்டாமை குறிக்கத்தக்கதாகும். பின்னத்தூரார் இவ்விரு சொற்களையும் இடம் நோக்கி அசைநிலை எனச் சுட்டியுள்ளார்.

**உரிச்சொற்கள்**

பின்னத்தூரார் அலமரல், புலம்பு, வறிது, நளி, கமம், சாய்தல், வை போன்ற பல உரிச் சொற்களை இனங்கண்டு எடுத்தியம்பியுள்ளார்.

**அலமரல்**

அலமரல் வருத்தந் தீர யாழநின் (நற். 9:3)

என்பதில் அலமரல் என்பதற்குச் 'சுழற்சி' என்று பொருளுரைப்பர்.

**புலம்பு**

பூணணி யாகம் புலம்பப் பாணர் (நற். 46:5)
புலம்பு கொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை (நற். 124:2)
புலம்புதந் தன்றே புகன்றுசெய் மண்டிலம் (நற். 152:4)

என்பனவற்றில் வரும் புலம்பு என்பதற்குத் 'தனிமை' எனப் பொருள் சுட்டுவர்.

**வறிது**

வறுந்தலைப் பெருங்களிறு போல (நற். 182:9)

என்பதில் வறுந்தலை என்பதற்கு 'வறிது - சிறிது' என்ற இலக்கணத்தின் அடிப்படையில் வறுந்தலை - சிறியதலை என உரைப்பர்.

**நளி**

அலவனொடு பெயரும் புலவுத்திரை நளி கடல் (நற். 219:5)

என்பதில் வரும் நளி என்பதற்குச் 'செறிவு' என்றுரைப்பர்.

**கமம்**

நிரைத்துநிரை கொண்ட கமஞ்சூன் மாமழை (நற். 89:3)

என்பதில் வரும் கமம் என்பதற்கு நிறைவு என்று பொருள் கூறுவர்.

**சாய்தல், வை**

"விறல்சாய்" (நற். 208:1) என்பதில் உள்ள 'சாய்' என்பதற்கு "உள்ளதன் நுணுக்கம்" என்றும் "வையெயிற்றையள்" (நற். 2:7) என்பதில் உள்ள 'வை' என்பதற்கு "கூர்மை" என்றும் உரைப்பர்.

## செய்யுள் விகாரம்

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கு சொற்களும் அடையும் விகாரத்தைத் தொல்காப்பியர்,

> அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
> வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும் வழி மெலித்தலும்
> விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழி தொகுத்தலும்
> நீட்டும்வழி நீட்டலும் குறுக்கு வழிக் குறுக்கலும்
> நாட்டல் வலிய என்மனார் புலவர் *(தொல். 886)*

என்றுரைப்பர். இதில் வலித்தல் விகாரம், விரித்தல் விகாரம், தொகுத்தல் விகாரம் ஆகிய மூன்று விகாரங்களைப் பின்னத்தூரார் இனங்கண்டு குறித்துள்ளார்.

> வாப்பறை விரும்பினை ஆயினுந் தூச்சிறை *(நற். 54:2)*

என்பதில் வரும் 'வாப்பறை' என்பதற்கு, "வாவும் என்னும் செய்யுமென்னெச்சத்து ஈற்றுயிர் மெய்கெட்டு வலிக்கும் வழி வலித்தல் பெற்றது" என்பர்.

> கருங்கால் வெண்குருகு எனவ கேண்மதி *(நற். 54:4)*

என்பதில் 'எனவ' என்பதற்கு "அ-விரித்தல் விகாரம்; எழுத்துப் பேறுமாம்" என்றுரைப்பர்.

> தண்ணந் துறைவன் *(நற். 138:5)*

என்பதில் விரிக்கும் வழி விரித்தல் அமைந்துள்ளது என்பர்.

> புதுவீ ஞாழலொடு புன்னை தாஅம் *(நற். 167:8)*

என்பதில் 'தாஅம்' என்பதையும் விரிக்கும் வழி விரித்தல் என்பர்.

> குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடை *(நற். 85:4)*

என்பதில் "குறிய என்பதன் அகரம் தொகுக்கும் வழித் தொக்கது" என்றுரைப்பர்.

## அன்மொழித்தொகை

மகட்போக்கிய தாய் கூற்றில் வரும் "மடத்தகை" (நற். 29:11) என்பதையும், தோழி தன்னுள் உரைக்கும் "எல்வளை" (நற். 342:7) என்பதையும் அன்மொழித் தொகை என்று சுட்டுவர்.

## பெயரெச்சம்

வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனிடம்,

*மறத்தற் கரிதால் பாக! பின்னாள் . . . . . . . . .*
*ஏகுமின் என்ற இளையர் வல்லே* (நற். 42:1–6)

என்றுரைப்பன். இதில் உள்ள 'என்ற' என்பதைப் பின்னத்தூரார், "ஏதுப் பொருட்டில் வந்த பெயரெச்சம்" என்பர்.

## இருபெயரொட்டு

ஒரு பொருளைக் குறிக்கும் இரு பெயர்கள் இணைந்து வருதல் இருபெயரொட்டு எனப்படும். இதனைப் பின்னத்தூரார் ஒன்பது இடங்களில் சுட்டியுள்ளார். அவை,

*கொடிப்பவர்* (நற். 5:3)
*எருமைக்காரான்* (நற். 80:1)
*கூந்தலோதி* (நற். 160:6–7)
*கோல் வாளி* (நற். 164:6)
*குராற் கூகை* (நற். 218:8)
*உழைமான்* (நற். 274:3)
*ஏனலாகியதினை* (நற். 288:8)
*தெய்வத்து யாண்டு* (நற். 315:1)
*இகுளைத் தோழி* (நற். 332:1)

என்பனவாகும்.

## அடைமொழி

ஒரு பெயரைச் சிறப்பிப்பதற்காக முன்னால் வரும் சொல் 'அடை' எனப்படும். "செம்மல் மூதூர்" (நற். 130:4) என்பதில் மூதூருக்குச் செம்மல் அடையாகி வந்துள்ளது என்பர்.

## இடைக்குறை

தலைமகனை வரைவு கடாவும் தோழி,

*உண்டெனும் உணரா வாகி*
*மலரென மரீஇ வரூஉம்இவள் கண்ணே* (நற். 326:9–10)

என்றுரைப்பள். இதனை விளக்கும் பின்னத்தூரார், "உண்டேனும் என்பது உண்டெனினும் என்பதன் இடைக்குறை" என்பர்.

## அணியிலக்கணக் குறிப்புகள்

பின்னத்தூரார் நிரல்நிறை அணியை ஓரிடத்திலும் பிறிதுமொழிதல் அணியை மூன்று இடங்களிலும் சுட்டியுள்ளார்.

செலவுக் குறிப்புணர்ந்து வேறுபட்ட தலைவியிடம் தலைவன்,

*பொன்னும் மணியும் போலும் யாழநின்*
*நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்*
*போதும் பணையும் போலும் யாழநின்*
*மாதர் உண்கணும் வனப்பின் தோளும்*
..... ........ ........ .........
*யாதனிற் பிரிவாம் மடந்தை*
*காதல் தானுங் கடலினும் பெரிதே* (நற். 166)

என்றுரைப்பன். இப்பாடலில் பொன் போன்ற வடிவு, நீலமணி போன்ற கூந்தல், குவளை போன்ற கண், மூங்கில் போன்ற தோள் எனக் கொள்ளுமாறு உவமைகள் நிரல்நிறையாக அமைந்திருத்தலை உணர்ந்து சுட்டுவர்.

*பேணுப பேணார் பெரியோர் என்பது*
*நாணுத்தக் கன்றது* (நற். 72:1–2)

*மரஞ்சாம் மருந்துங் கொள்ளார் மாந்தர்*
*உரஞ்சாச் செய்யார் உயர்தவம் வளங் கெடப்*
*பொன்னுங் கொள்ளார் மன்னர் நன்னுதல்* (நற். 226:1–3)

*பெரிய வல்லவோ பெரியவர் நிலை* (நற். 266:9)

ஆகிய மூன்று பாடல்களிலும் பிறிதுமொழிதல் அணி இடம் பெற்றிருத்தலை உணர்ந்து உரைப்பர்.

இவற்றால் பின்னத்தூரார் இலக்கணக் குறிப்புகளை எடுத்துரைத்து நற்றிணைப் பாடல்களை விளக்குவது புலனாகும்.

## இலக்கணத்தை நுட்பமாக விளக்குதல்

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் யாரையும் அறியேன் என்றுரைத்த நிலையில் தலைவி அவனிடம், "ஐயனே! நின் காதற்பரத்தை நேற்றைப் பொழுதில் அவள் மகிழ்நனாகிய நின்னிடத்துத் தங்கி நின் மார்பில் கிடந்து உறங்கி, எமது மறுகின்கண் சென்றனள். ஆதலால் நீ மறுத்துரைப்பது நன்றன்று" (நற். 20) என்றனள். இதில் வரும் மகிழ்நன் என்பதை, "முன்னிலை படர்க்கை வந்த வழுவமைதி" என்பர். மகிழ்நன் நேரில் இருக்கவும், அவன்

செயலை உரைப்பதற்காகப் படர்க்கை நிலையில் அவனைக் கூறுவதை நுட்பமாகக் கண்டு பின்னத்தூரார் உரைப்பது சுட்டத்தக்கது.

## சூழலுக்குத் தக இலக்கணம் கூறுதல்

'ஓடு' என்பது வேற்றுமை உருபாகும். பாணற்கு வாயில் மறுத்த தோழி,

> **பண்ணமை நெடுந்தேர்ப் பாணியின் ஒலிக்கும்**
> **தண்ணந் துறைவன் தூதொடும் வந்த**
> **பயன்தெரி பனுவல் பைதீர் பாண** *(நற். 167)*

என்பள். இப்பாடலில் உள்ள தூதொடு என்ற சொல்லை தூது + ஒடு எனக் கொண்டு 'ஒடு' வேற்றுமை உருபு எனக் கொள்ளாமல் அடைமொழிப் பொருள் என்று சுட்டுவது சூழலுக்குத் தக இலக்கணங் கூறுதலுக்குச் சான்றாகும்.

## பொருள் விளக்கம் கூறி இலக்கணத்தை உணர்த்துதல்

இலக்கணக் குறிப்புச் சுட்டுவதோடு அவ்விலக்கணத்திற்கு விளக்கம் கூறிப் பொருத்திக் காட்டுதலும் பின்னத்தூராரிடம் காணப்படும் இயல்பாகும். எச்சங்களை உரைக்கும்பொழுது இன்ன எச்சம் என்று சுட்டுவதோடு அதற்குப் பொருள் விளக்கம் கூறியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

## இசையெச்சம்

இசையெச்சம் என்னும் இலக்கணக் குறிப்பைப் பின்னத்தூரார் மூன்று பாடல்களில் (நற். 1, 131, 216) சுட்டுவர். அவற்றுள் ஈரிடங்களில், "இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ் விடங்கட்கு ஏற்றபடி ஒரு சொல்லும் பல சொற்களுமாக வருவித்துரைக்கப்படுவது" என்றும் "இசையெச்சமாவது இரண்டு முதலிய சொற்கள் எஞ்சி நிற்கப்பெறுவது" என்றும் விளக்கமுரைப்பர்.

"நின்ற சொல்லர் நீடு தோன்றினியர்" (நற். 1) என்ற பாடலை விளக்கும்பொழுது, "தாமரைத்தாது தலைவனுள்ளத்திற்கும் சந்தனத்தாது தலைவியுள்ளத்திற்கும் உவமையாகி இருவருட் கருத்தும் ஒத்தவழி சாந்திலே தீந்தேனிறால் வைத்தது போலத் தலைவன் தலைவிபால் அன்பு வைத்தானெனப் பொருந்தவுரைக்க. இடையில் பலவாய சொற்களைப் பொருந்தப் பெய்துரைப்பன வெல்லாம் இசையெச்சமெனக் கொள்க" என இசையெச்சத்தின் பொருளையும் அவ்வெச்சம் இப்பாடலில் அமைந்திருக்குமாற்றையும் விளக்குவர்.

### சொல்லெச்சம்

செலவழுங்கிய தலைவன் தன் நெஞ்சை நோக்கி, "சுரத்திற் செல்லக் கருதிய நீ நம் காதலியைக் கைவிடக் கருதுகின்றாய். அங்ஙனமாயின் இவளைக் காட்டிலும் சிறந்ததாகிய ஒரு பொருளை நீ அடைந்து விட்டாய் போலும். நீ அடைந்த பொருளோடு நீடு வாழ்வாயாக" (நற். 137) என்றுரைக்கின்றான். இதனால் தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்து செல்லான் என்பது புலப்படும். இதனைப் பின்னத்தூரார், "யான் இவளொழிய வாரேன் என்றது சொல்லெச்சம்; சொல்லெச்சமாவது ஒரு சொல் எஞ்சி நிற்பது" என உரைப்பர்.

பின்னத்தூரார் சொல்லெச்சத்தை மூன்று பாடல்களிலும் (நற். 166, 187, 237), குறிப்பெச்சத்தை இருபத்திரண்டு பாடல்களிலும் (நற். 3, 7, 32, 33, 38, 42, 52, 73, 74, 90, 91, 121, 131, 175, 176, 179, 186, 189, 194, 208, 216, 225) உடன்பாட்டெச்சத்தை ஒரு பாடலிலும் (நற். 69) சுட்டுவர்.

### இலக்கண நூற்பாவை எடுத்துரைத்துப் பொருள் விளக்குதல்

பின்னத்தூரார் தேவையான இடங்களுக்கு இலக்கண நூற்பாக்களையே எடுத்துரைத்துப் பொருள் கூறுதலை இயல்பாகக் கொண்டுள்ளார். அவ்வகையில் எழுத்திலக்கண, பொருளிலக்கண நூற்பாக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

### எழுத்ததிகாரம்

தலைவன் வரவுணர்ந்த தோழி தலைவியிடம்,

**கேளாய் எல்ல தோழி! அல்கல்**
**வேணவா நலிய வெய்ய உயிரா**
**ஏமான் பிணையின் வருந்தினே னாக**
**– – – – – – – –**
**கண்ணும் படுமோ என்றிசின் யானே** (நற். 61)

என்றுரைப்பள். இதன் உரையில் பின்னத்தூரார் வேணவா - வேட்கை யாலுண்டாகிய அவா, 'வேட்கை, அவா' என்னுமிரு சொல்லும்,

**செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்**
**ஐ என் இறுதி அவா முன் வரினே**
**மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்**
**டகாரம் ணகார மாதல் வேண்டும்** (தொல். 288)

என்ற சூத்திர விதிப்படி கெட்டு மருவி முடிந்தது என்று விளக்குவர்.

காப்பியஞ்சேந்தனாரின், 'இடூஉ ஊங்கண் இனிய படூஉம்' (நற். 246:1) என்ற பாடலை விளக்க,

எருவுஞ் செருவும் (தொல். 260)

குற்றெழுத்திம்பரும் (தொல். 267)

என்ற இரண்டு நூற்பாக்களை எடுத்துரைத்து விளக்குவர்.

## பொருள்திகாரம்

"வினை முற்றி மீளுந்தலைவன் தேர்ப்பாகனிடம் நமது வருகையைக் காக்கைப் புள்ளினம் கரைந்து தெரிவித்தனவோ, நம் காதலி மகிழ்தற்குக் காரணந்தான் யாதென உவந்து கூறியதை" விளக்கும் ஆசிரியர்.

எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்தவாகும் (தொல். பொ. 19)

என்ற அகத்திணையியல் நூற்பாவை எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலோச்சனாரின், "சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி" (நற். 149) என்ற பாடலில் அலர் தூற்றுவாரின் செயலைக் குறிக்க,

அலரிற் தோன்றுங் காமத்திற் சிறப்பே (தொல். பொ: 163)

என்ற நூற்பாவை உரைத்து "களவிடை அலராலே காமஞ் சிறந்தது" என்பர்.

நக்கண்ணையாரின் "இறவுப் புறத் தன்ன பிணர்படு தடவுமுதல்" என்ற பாடலில் உள்ள "நெடுந்தேர் பாகனியக்கச் செலீஇய சேறி" (நற். 19:6-7) என்ற அடியை விளக்க,

தேரும் யானையுங் குதிரையும் பிறவும்
ஊர்ந்தன ரியங்கலு முரிய ரென்ப (தொல். 1158)

என்ற தொல்காப்பிய நூற்பாவை எடுத்துரைத்து விளக்குவர். இதனால் தலைவனது செல்வக் குறைபாடின்மை கூறியதாயிற்று என்றுரைப்பர்.

நக்கீரரின் "பெருந்தோள் நெகிழ அவ்வரி வாட" (நற். 358) என்ற பாடல் தோழி கூற்றாகும். இதில் தலைவியின் நலனைத் தன் நலன் என்று தோழி உரைத்தமைக்கு,

தாயத்தினடையா ஈயச் செல்லா
வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா,
எம் என வரூஉம் கிழமைத் தோற்றம்
அல்ல வாயினும் புல்லுவ உளவே (தொல். 1167)

என்ற நூற்பாவை எடுத்துரைத்து விளக்குவர்.

பேரிசாத்தனாரின் "பூம்பொறி உழுவைப் பேழ்வாய் ஏற்றை" (நற். 104) என்னும் பாடலுக்குக் கூற்று வரையறை செய்வதற்கு இரு நூற்பாக்களைப் பயன்படுத்துவர். இதனை, "**போக்கும் வரைவும் மனைவிக்கட் டோன்றும்** (தொல். பொருள் 225) என்றமையானும், **'ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி வரைதல் வேட்கைப் பொருளது'** (இறை-30) என்றமையானும் வரைதல் வேட்கைக்கிளவி முற்றும் தலைவி கூற்றாதலின் ஈண்டுத் தலைவி கூற்றென்க" என்னும் உரை விளக்கும்.

தலைவன் பொருள் முடித்து வந்தானென்பதை வாயில்கள் வாய்க்கேட்ட தோழி தலைவிக்குரைத்தது என்னும் கூற்று (நற். 164) பாடலுக்கு அமைந்ததை விளக்கக் "கூறுவோர் தோழியெனவும், கேட்போர் தலைவி எனவும் கொள்ள வைத்தலின் **'இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரிய ரென், றவ்விடத் தவரவர்க் குரைப்பதை முன்னம்'** (தொ.பொ. 520) என்றபடி இது முன்னமென்னும் உறுப்புப் பெற்று வந்ததாயிற்று'' எனத் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவை எடுத்துரைத்து விளக்குவர்.

கயமனாரின், "விளம்பழங் கமழும் கமஞ்சூற் குழிசி" (நற். 12) என்ற பாடலில் தோழி தலைவியை உடன்போக்கில் செலவழுங்குவித்துத் தலைவனிடம் சென்று, "தலைவி நின்பால் வர உடன்பட்டுத் தன் சிலம்பு முதலியவற்றைக் கழற்றி வைக்கும்பொழுது இவற்றைக் கண்டால் தோழியர் நோவரென்று கருதி, ஆயத்தாரைப் பிரிவதற்கு வருந்தி நின்றனள் என்றுரைப்பள்''. இவ்விடத்தில் பின்னத்தூரார், "தோழி கூறியதைக் கேட்டுச் செலவழுங்கி நின்றானை நீ வரைந்து புகுதக; நினக்கு வரைவு மாட்சிமைப்படுமென்றலின் கேட்ட தலைவன் இவள் அறத்தொடு நிற்றலான், மாட்சிமைப்பட்டது போலுமெனப் பிற்றைஞான்று வரைவொடு புகுவானாவது. இது வெளிப்பட்ட பின்றையு முரிய கிளவி (இறையனார் 23) என்றதனாற் பெறப்பட்டது" என இறையனார் களவியல் சூத்திரத்தைக் கொண்டு உரை வரைவர்.

அகப்பாடல்களில் உள்ள புறச்செய்தியை விளக்குவதற்குப் பின்னத்தூரார் தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாவைப் பயன்படுத்தியுள்ளார். நல்வேட்டனாரின், "கடுந்தேர் ஏறியுங் காலில் சென்றும்'' (நற். 349) என்ற பாடலில் தலைவன் தலைவியின் குறிப்பறியத் தான் செய்த செயல்கள் அனைத்தையும் எடுத்துரைப்பன். அதில் அரசர்கள் நிகழ்த்திய போரில் போர்க்களத்தில் புண்ணுற்றுக் கிடப்பாரைக் காப்பவர் வேறு ஒருவரும் இன்மையால் அவருடைய உயிர்போகுமளவும் ஓரியும், நரியும் கடித்து அவர் தசைகளைக் கொள்ளுமோ என்று இரக்கமுற்றுப் பேய் தானே காத்து நின்றாற் போல, தலைவியின் பின்னின்று திரிந்தேன் என்பது ஒரு செயலாகும்.

இச்செய்தியை விளக்கப் புகுந்த பின்னத்தூரார், "புண்பட்டாரைக் காப்போரின்மையின் அவருயிர் போமளவும் பேய் அருகிருந்து காப்பது போல இவள் ஆராய்ந்து கூறுங்காறும் பின்னை திரிந்து காத்து நின்றேனென்க. இது பேய்க் காஞ்சித்துறை, '**ஏமச்சுற்ற மின்றிப் புண்ணோன், பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்**' (தொல். பொ.சூ. 79) என்பதனாலறிக" என்றுரைப்பர்.

மேற்சுட்டியவற்றால் பின்னத்தூரார் இலக்கண நூற்பாவை எடுத்துரைத்துப் பொருள் விளக்குதலை ஒரு நெறியாகக் கொண்டுள்ளமை புலனாகும்.

## வடமொழி இலக்கண அடிப்படையில் உரை கூறுதல்

பரத்தை தலைவியின் பாங்கிக்குப் பாங்காயினார் கேட்ப விறலிக்குச் சொல்லியது என்னும் கூற்று அமைந்த பாடலில்,

**காதலன் என்னுமோ உரைத்திசின் தோழி** (நற். 176-4)

என்றுரைப்பள் பரத்தை. இதில் வரும் தோழி என்பதை விளக்க ஆசிரியர் 'பரத்தை தான் தோழியென விளித்தலால், அவட்குத் தோழி விறலியென்பது. விறல்-சத்துவம்; அவை சிருங்கார முதலாய ஒன்பான் சுவையென்ப, அச்சுவைகள் தன் மெய்க்கண்ணே தோன்றுமாறு அவிநயத்திற் புலப்படுத்திக் காட்டவல்லவள் விறலி' என்றுரைப்பர்.

பாடலில் தோழி என்றே உள்ளது. இதற்குப் பரத்தையின் தோழி என்று குறிக்காமல், பரத்தை ஆடல் பாடல் நிகழ்த்துவதில் வல்லவள். எனவே அவளுடைய தோழியாய் இருப்பவளும் இத்தகைய கலையில் தேர்ச்சியுடையவளாய் விளங்குவள் எனக் கருதி அவளை விறலி என்று குறித்து அதற்கு வடநூல் அடிப்படையில் பொருள் விளக்கம் செய்கின்றார். தமிழில் எட்டு வகை மெய்ப்பாடே தொல்காப்பியரால் குறிக்கப்படுகிறது. சத்துவம் என்பதைப் பேராசிரியர் தம் உரையில் குறித்துச் செல்கிறார். நற்றிணை 35ஆவது பாடலுக்கு வரைந்த உரையும் பின்னத்தூராரின் வடமொழி இலக்கண அறிவை விளக்குவதாய் அமைந்துள்ளது.

## இலக்கணமன்று என மறுத்துக் கூறுதல்

பிரிவிடை வேறுபட்ட தலைவிக்குத் தோழி உரைக்கும்,

**உள்ளார் கொல்லோ தோழி துணையொடு**
**வேனில் ஓதிப் பாடுநடை வழலை** (நற். 92:1-2)

என்ற பாடலில் ஓதி என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. இதனை 'ஓதி - ஓந்திக்கொரு பெயர்; இடைக்குறை விகாரமன்று; குறைக்க வேண்டாத வழியும் இங்ஙனம் வருதலின்' என்றுரைப்பர் பின்னத்தூரார்.

செய்யுளுள் நிறைச்சொற்கள் மட்டுமல்லாமல் குறைச்சொற்களும் பயின்றுவரும். அவ்வாறு குறைந்து வருதல் முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என மூவகைப்படும். அவை குறைச் சொற்களாக இருந்தாலும் நிறைச் சொற்களாகவே கருதப்படும். இதனை,

> குறைச்சொல் கிளவி குறைக்கும் வழி அறிதல் *(தொல். 936)*
>
> குறைத்தன ஆயினும் நிறைப் பெயர் இயல *(தொல். 937)*

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும் இடைக்குறையை விளக்கும் உரையாசிரியர், 'வேதின வெரிநினோதி முது போத்து' - இதில் ஓந்தி என்பது இடைக்கண் குறைந்து ஓதி என வந்துள்ளது என்பர். இவ்விலக்கணத்தை மனத்தில் கொண்டே ஓதி என்ற சொல்லைப் படிப்பார் இடைக்குறை எனக் கருதிவிடுவார்களோ என்று நினைந்து பொருள் உரைத்திருப்பது சுட்டத்தக்கது.

## உவமை இலக்கண அறிவை வெளிப்படுத்துதல்

"வினை, பயன், மெய், உரு என்ற நான்கு வகையாக உவமைகள் தோன்றும். இவ் உவமைகள் ஒரு பொருளின் சிறப்பு, அதன் நலன், அதன் மேல் கொண்டுள்ள பேரன்பு, அதன் வலிமை ஆகியவற்றை நிலைக்களனாகக் கொண்டு பிறக்கும். எடுத்துக் கொள்ளுகின்ற பொருள் தாழ்ந்ததாக இருந்தாலும் அதனையும் நிலைக்களனாகக் கொள்ளும்'' என்பது உவமை பற்றிய தொல்காப்பியரின் கோட்பாடாகும்.

இதனை மனத்தில் கொண்ட பின்னத்தூரார் உவமைகளை மிக நுட்பமாக விளக்குகிறார்.

> முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போலநின் *(நற். 82–4)*

என்பதில் முருகு தலைமகனுக்கும் வள்ளி கொடிச்சிக்கும் உவமை. இது சிறப்பு நிலைக்களமாக முதலொடு முதல் வந்த வினையுவமம் என்பர். இதில் உவமை பிறக்கும் நிலைக்களனைக் கூறியதோடு,

> முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்
> நுதலிய மரபின் உரியவை உரிய *(தொல். 1227)*

என்ற இலக்கணத்தையும் உட்கொண்டு முதலொடு முதல் வந்து வினையுவமம் என்றுரைப்பது குறிப்பிடத்தக்கது.

> கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ
> மண்ணாப் பசுமுத்து ஏய்ப்ப *(நற். 94:4–5)*

என்பதைத் 'தலைவியை முத்தோடொப்பக் கூறியது சிறப்பு நிலைக்களமாக முதலொடு முதலே வந்த பண்புவமம்' என்றுரைப்பர்.

***எவ்வ நெஞ்சத்து எஃகெறிந் தாங்குப்***
***பிரிவில் புலம்பி நுவலுங் குயிலுறை*** *(நற். 97:2–3)*

என்ற உவமையில் குயிலோசைக்கு எஃகெறிந்தது உவமையாக்கப் பட்டுள்ளது. இதனைக் கிழக்கிடு பொருள் நிலைக்களமாக முதலுஞ் சினையும் விராய் வந்த பண்புவமம்" எனக் குறிப்பிடுவர்.

நற்சேந்தனாரின், "பாம்பூர் மதியின் நுதலொளி கரப்ப" (நற். 128–2) என்ற உவமையைக் கிழக்கிடு பொருளே நிலைக்களனாக முதலுஞ்சினையும் மயங்கி வந்த வினையுவமம்'' என்று விளக்கியுரைப்பர்.

வரைவு நீட்டிப்ப ஆற்றாளாய தலைவி தோழிக்கு வன்பொறை எதிரழிந்து சொல்லுதலை,

***மலைகெழு நாடன் கேண்மை பலவின்***
***மாச்சினை துறந்த கோள்முதிர் பெரும்பழம்***
***விடரளை வீழ்ந்துக் காங்குத் தொடர்பற*** *(நற். 116:6–8)*

என்னும் அடிகள் விளக்கும். இதில் கேண்மை பலவின் கனியாகவும், அக்கேண்மை தனக்குப் பயன்படாமை கனி அளையிலே விழுந்தழிந்தாற் போல்வதாகவும் உவமையோடு பொருத்திக் கொள்க. இது சிறப்பு நிலைக்களமாகச் சினையொடு சினை வந்த பயனுவமம்" என்பர்.

ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் உரைக்கும்,

***அணிகிளர் கலாவம் ஐதுவிரித் தியலும்***
***மணிபுரை எருத்தின் மஞ்ஞை போலநின்***
***வீயெண் கூந்தல் வீசுவளி உளர*** *(நற். 264–3)*

என்ற உவமையை "இரட்டைக்கிளவி யிரட்டை வழித்தே" (தொல். பொ. 297) என்றதன்படி தலைவிக்கு மஞ்ஞையையும், அவள் கூந்தலுக்குக் கலாவத்தையும் உவமித்ததென்க. 'இது காதல் நிலைக்களமாக அடையடுத்த முதலொடு முதல் வந்த உருவுவமம்' என்றுரைப்பர்.

மேலும் சில பாடல்களில் பயின்றுள்ள உவமைகளை, 'சிறப்பு நிலைக்களமாக முதலொடு முதலும் சினையொடு சினையும் வந்த உருவுவமம்', (ப. 180) 'நலன் நிலைக்களமாகச் சினைவந்த உருவுவமம்', (ப. 330) 'கிழக்கிடு பொருளாக முதலொடு முதலே வந்த பயனுவமம்' (ப. 331) என்று வினை, பயன், உரு ஆகிய உவமைகளை வகைப்படுத்தியும், விளக்கியும் உரைப்பர்.

"பிரிவிடை ஆற்றாத தலைவி, இரவுப் பொழுதில் சேற்றையுடைய தொழுவத்திலிருந்து வேற்றிடத்தில் கட்டாது, அத்தொழுவத்துள் கீழேயும் படுக்கவிடாது நின்ற நிலையிலே நிற்குமாறு தலைக்கயிற்றையிழுத்து உச்சியிலே தூக்கி மேல்மரத்தில் இறுகப் பிணித்த பசுவினைப் போல் தான் உள்ளதாக உரைப்பள்' (நற். 109) இதில் வரும் உவமையைப் பின்னத்தூரார் கைகடந்து பரத்தலான் இயக்கமின்றி நிற்றலின் அசையாது பிணித்த ஆவை உவமித்தாள். இஃது அவலவுவமை" என்றுரைப்பர்.

> பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
> வழிமருங்கின் அறியத் தோன்றும் என்ப (தொல். 1240)

என்ற தொல்காப்பியத்தை நன்குணர்ந்தவராதலால் இதனை அவலவுவமை என நுட்பமாக உரைத்துள்ளமை சுட்டத்தக்கது.

**உள்ளுறை உவமம்**

பரத்தை தன் விறலியிடம் உரைக்கும், "எம்நயந்து உறைவி ஆயின் யாம்நயந்து" (நற். 176) என்ற பாடலில் உள்ள உள்ளுறையை விளக்க முற்பட்ட பின்னத்தூரார், சிலம்பிலே செங்காந்தள் மலர்தல், வண்டுகள் அருவி ஒலியோடு சேர்ந்து ஒலித்தல் போன்றவற்றைச் சுட்டி, '**ஏனோர்க்கெல்லாம் இடம் வரைவின்றே**' என்று தொல்காப்பியர் உரைப்பதால் பரத்தை தானறிந்த கிளவியானே நிலம் பெயர்ந்துறையாத பொருள் கொண்டு உள்ளுறை கூறினாள்" என்பர்.

> கிழவி சொல்லின் அவளறி கிளவி (தொல். 1247)

என்னும் நூற்பா முதல்

> தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
> கூறுதற் குரியர் கொள்வழி யான (தொல். 1254)

என்பது வரையுள்ள எட்டு நூற்பாக்களையும் இளம்பூரணர் தலைவி, தலைவன், தோழி, செவிலி, பிறர் போன்றோர் உவமை கூறும் முறையை விளக்குவதாகக் கொள்வர். இவ் எட்டு நூற்பாக்களையும் மேற்சுட்டியோர் உள்ளுறை கூறுவதற்குரிய இலக்கணமாகக் கொள்வர் பேராசிரியர். பின்னத்தூரார் பேராசிரியர் வழிநின்று இப்பாடலை உள்ளுறை என்று கூறியுள்ளமை நினைக்கத்தக்கது. இவ்விடத்துப் பின்னத்தூராரின் தொல்காப்பியப் பொருளதிகாரத் தோய்வும், உரை வரையப் பேராசிரியரைப் பின்பற்றியமையும் வெளிப்படுகின்றன.

## பாடல் அமைப்பினை இலக்கணத்தோடு பொருத்தி விளக்குதல்

பொருள் வலிக்கப்பட்ட தலைமகன் செலவழுங்கிய நிலையில்,

*செலவிரை வுற்ற அரவம் போற்றி*
*மலரேர் உண்கண் பனிவர ஆயிழை*
*யாம்தற் கரையவும் நாணின வருவோள்*
*வேண்டாமையின் மென்மெல வந்து*
*வினவலுந் தகைத்தலுஞ் செல்லா ளாகி*
*வெறிகமழ் துறுமுடி தயங்க நல்வினைப்*
*பொறியழி பாவையிற் கலங்கி நெடிதுநினைந்து*
*ஆகம் அடைதந் தோளே*
*....  .......  ........  ........*
*பொருண்மலி நெஞ்சம் புணர்ந்துவந் தன்றே* (நற். 308)

என்றுரைப்பன். இதனைப் பின்னத்தூரார், "இதனுள் ஆயிழை போற்றி நாணி வந்து செல்லாளாகித் தயங்கக் கலங்கி நினைந்து அடைந்தோளென வினையெச்ச அடுக்காகக் கொண்டு எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே கிடந்து பயனிலையை விசேடிக்கும் எச்சங்கள் உள்ளே ஒன்றனை முற்றாகக் கொண்டு திரித்துப் பாலும் இடமுங்காட்டி நிற்பச் செய்யுள் செய்தமை அறிக" என்கிறார்.

இங்ஙனம் ஒரு பாடல் முழுமையையும் இலக்கண முறைப்படி விளக்கிய பின்னத்தூரார், நற்றிணை முழுவதையும் இலக்கண முறைப்படி விளக்கியதற்குப் பல சான்றுகள் உள்ளன. தொல்காப்பியர் கூறிய செய்யுள் உறுப்புகளாகிய திணை, கூற்று, கேட்போர், பயன், மெய்ப்பாடு போன்றவற்றை நற்றிணையின் நானூறு பாடல்களுக்கும் உரைத்துள்ளார். கைகோள் என்ற உறுப்பைக் களவு, கற்பு என அறிய முடியாத பாடல்களுக்கு மட்டும் உரைத்துள்ளார். காலம் என்ற உறுப்பை வெள்ளியந்தின்னனாரின்

*முற்றா மஞ்சள் பசும்புறங் கடுப்ப* (நற். 101)

என்ற பாடலுக்கு மட்டும் விளக்குகிறார். (நிகழ்காலம்). மெய்ப்பாட்டில் பொதுவாகிய எட்டுவகை மெய்ப்பாட்டைச் சுட்டியதோடு மட்டுமன்றி, களவு, கற்பு, பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளையும் சுட்டிச்செல்கிறார்.

## இலக்கண உரையாசிரியர்களின் உரையை ஒப்புமை காட்டுதல்

இலக்கண உரையாசிரியர்களின் உரையை ஒப்புமை காட்டுதலைப் பின்னத்தூரார் இயல்பாகக் கொண்டுள்ளார்.

அம்மூவனாரின், "கானல்அம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்" (நற். 4) என்னும் பாடல் தோழி கூற்றாகும். இதனை நச்சினார்க்கினியர் தலைவி கூற்றாகக் கொண்டதைப் பின்னத்தூரார் உரையில் சுட்டுவர்.

"அல்குபட ருழந்த அரிமதர் மழைக்கண்" (நற். 8) என்ற பாடலுக்குப் பின்னத்தூரார் பயந்தோர்ப் பழிச்சலைப் பயனாகக் கூறி, "இதனைப் புணர்தனிமித்தமென்பர் நச்சினார்க்கினியர்" என்பர்.

இவற்றால் பின்னத்தூரார் உரையாசிரியர்களின் உரையையும் ஒப்புமை காட்டுதல் புலனாகும்.

## முடிவுரை

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைப் பாடல்களை இலக்கண அடிப்படையில் முழுமையாக நோக்கியுள்ளார். அகப்பாடல்களை அக இலக்கண அடிப்படையில் மட்டுமல்லாது எழுத்து, சொல் இலக்கணங்கள் அடிப்படையிலும் விளக்கியுள்ளார். அகப்பாடலின் ஒவ்வொரு சீரையும் நுட்பமாக நோக்கி இலக்கணக் குறிப்புக் கூறுதல் பின்னத்தூராரின் தனித்தன்மையாக விளங்குகிறது. தேவையான இடங்களுக்கு இலக்கணவிளக்கம் கூறி எடுத்துரைத்தலை இயல்பாகக் கொண்டுள்ளார். சூழலுக்குத் தக இலக்கணம் கூறுதல் பின்னத்தூராரின் புதியன புகுதல் பண்புக்குச் சான்றாகும். இலக்கண நூற்பாவை எடுத்துக்கூறி விளக்குதலும் இலக்கணமன்று என விளக்குதலும் பின்னத்தூராரின் இலக்கணத் திறமைகளை நன்கு வெளிப்படுத்துவனவாகும். அகப்பாடல்களின் உயிரோட்டத்தை இலக்கணத்தின்வழிப் புலப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். செய்யுளுக்குரிய இலக்கணங்களில் கூற்று, களன், கேட்போர், மெய்ப்பாடு, பயன் ஆகியவற்றை நானூறு பாடல்களுக்கும் எடுத்துரைத்துள்ளமை பின்னத்தூராரின் இலக்கணப் புலமையின் உச்சமாக அமைந்துள்ளது.

தொல்காப்பியம், நன்னூல், இறையனார் களவியல் போன்ற நூல்கள், அவற்றின் உரைகள் போன்றவற்றில் தோய்ந்த புலமை உடையவர் என்பதைப் பின்னத்தூராரின் நற்றிணை உரை மெய்ப்பிக்கின்றது.

* * * * *

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100 | 50.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 150.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| நாடகவியல் | 70.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

---

**Pub.No.508 பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் 35.00**